23 Years

கனடாவின் மூத்த தமிழ் இதழ்

# விளம்பரம்

VLAMBARAM™

416-282-8059 E-mail: vlambaram@sympatico.ca Web: www.vlambaram.com/www.tamilvanakkam.com 416-282-4978



FREE
Real Estate
Classes start every week
Call:416.321.6969



RBC Insurance
இளமையோ முதுமையோ காப்புறுதி ஒரு வழமை
உங்கள் அனைத்து காப்புறுதி தேவைகளிற்கும் கலந்து ஆலோசிக்க அழையுங்கள்
Jey Ahamparam P.F.P
Insurance Advisor
RBC காப்புறுதியில் விஷேடத்துவம் பெற்றவர்
(Specialized in RBC Insurance)

அத்துடன் உங்கள் வீட்டு வாகன காப்புறுதிகளிற்கும் (Home & Auto) உதவி வழங்கப்படும்.
Call: 416.301.1733



நதி 23 | பாலம் 15 | சமூக முன்னேற்றப்பத்திரிகை | மாதமிருமுறை | இலவசம் | AUGUST 01, 2013


# ஒன்ராறியோ மாகாண இடைத்தேர்தல்

ஒன்ராறியோ மாகாண அரசின் ஐந்து லிபரல் கட்சியை சேர்ந்த உறுப்பினர்கள் தங்கள் ஒன்ராறியோ மாகாண நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை துறந்ததால் அவ் ஐந்து தொகுதியிலும் ஓகஸ்ட் 01, 2013 இல் இடைத்தேர்தல் நடைபெறுகின்றது. அவ் ஐந்து தொகுதிகளும் ஸ்காபரோ - கில்வூட், எற்ரோபிக்கோ - லேக்சோர், ஒட்டாவா தெற்கு, வின்சர் - ரெகம்சி, லண்டன் மேற்கு ஆகும்.

2011 இல் நடைபெற்ற ஒன்ராறியோ மாகாணத்தேர்தல் முடிவுகளின்படி 107 உறுப்பினர்களை கொண்ட ஒன்ராறியோ மாகாண நாடாளுமன்றத்தில் 53 லிபரல் கட்சி அங்கத்தவர்களும் 17 புதிய ஜனநாயகக்கட்சி அங்கத்தவர்களும் 37 பழமைவாதக்கட்சி அங்கத்தவர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

பெரும்பான்மை ஆட்சியமைக்க தேவையான 54 உறுப்பினர்கள் இல்லாமையால் லிபரல் கட்சி, 53 உறுப்பினர்களுடன் சிறுபான்மை அரசை அமைத்து இதுவரை காலமும் நாடாளுமன்றத்தை நடத்தி வருகின்றது. லிபரல்கட்சியிலிருந்து ஐந்து உறுப்பினர்கள் பதவி துறந்ததை தொடர்ந்து தற்போது ஒன்ராறியோ மாகாண அரசில் உள்ள கட்சிகளின் உறுப்பினர்களின் எண்ணிக்கை பின்வருமாறு உள்ளது.

| | |
|---|---|
| லிபரல் கட்சி | - 48 |
| பழமைவாதக்கட்சி | - 36 |
| புதிய ஜனநாயகக்கட்சி | - 18 |
| வெற்றிடம் | - 5 |

ஓகஸ்ட் 01, 2013 இல் நடைபெறும் ஐந்து இடைத்தேர்தல்களிலும் லிபரல் அரசு வெற்றி பெற்றாலும் பெரும்பான்மை அரசை லிபரல் கட்சியினால் அமைக்கமுடியாது. தொடர்ந்தும் சிறுபான்மை அரசாகவே இருக்கும் என்பது குறிப்பிடத்தக்கது. அதேபோல் மற்றைய கட்சிகள் வென்றாலும் லிபரல் அரசின் சிறுபான்மை அரசு மாற்றமடையாது. அப்படியிருந்தும் இத்தேர்தல் முக்கியம் வாய்ந்ததாக ஊடகவியலாளர்களால் கருதப்படுகிறது. ஏனெனில் இது புதிதாக தெரிவுசெய்யப்பட்ட லிபரல் கட்சியின் தலைவர் கதலின் வின் இன் செல்வாக்கை நிர்ணயிப்பதாகவும் 2015 இல் வரும் ஒரு பொதுத் தேர்தலுக்கான தமது கொள்கைகளை கட்சிகள் சரிபார்க்க உதவும் ஒரு சந்தர்ப்பமாகவும் அமைவதால் ஆகும். ஒன்ராறியோ மாகாணத்திற்கான அடுத்த பொதுத்தேர்தல் ஒக்டோபர் 01, 2015 இல் நடைபெறும்.

## ஸ்காபரோ - கில்வூட்




2007 ஆம் ஆண்டு ஒன்ராறியோ மாகாண நாடாளுமன்றத்திற்கு லிபரல் கட்சியின் சார்பில் இத்தொகுதியில் இருந்து தெரிவு செய்யப்பட்ட மார்கிரட் பெஸ்ட் 2013 இல் தனது பதவியை துறக்கும் வரை இத்தொகுதியில் மாகாண நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தார். இவர் டால்ரன் மக்கன்ரியின் மாகாண அரசின் மந்திரிசபையிலும் இருந்தவர். ஆபிரிக்க கனடியரான இவர் ஜமேக்காவில் பிறந்தவர். இவர் ரொறொன்ரோ பல்கலைக்கழக பட்டதாரியும், ஒரு சட்டதரணியுமாவார். இவரின் பதவி துறப்பால் வந்த வெற்றிடத்திற்கு 9 பேர் ஓகஸ்ட் 01, 2013 இல் நடைபெறும் இடைத்தேர்தலில் போட்டியிடுகின்றனர்.


பழமைவாதக் கட்சியின் சார்பில் தமிழரான கென் கிருபா போட்டியிடுகிறார். இவர் கனடாவில் வங்கித்துறையில் பணியாற்றி தற்போது ஆதன விற்பனை முகவராக (Real Estate Agent) இருக்கிறார். இவர் 1988 இல் இலங்கையில் இருந்து கனடாவிற்கு வந்தவர். ஸ்காபரோ - கில்வூட் தொகுதியிலேயே வாழும் கென் கிருபா பல சமூகசேவைகளை இத்தொகுதி மக்களுக்கு செய்து வருகிறார். ஹெயிற்றியில் நடைபெற்ற பூகம்பத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவும் நிதியம், ஸ்காபரோ வைத்தியசாலை நிதியம், மற்றும் இருதயம் மற்றும் பக்கவாதம் நோய் நிதியம் போன்ற தர்ம ஸ்தாபனங்களுக்கு நிதிசேகரிக்க உதவியுள்ளார். இவருக்கு 10 வருட சமூகசேவைக்கான விருது ஒன்ராறியோ அரசின் குடியுரிமை மற்றும் குடிவரவிற்கான அமைச்சிடம் இருந்து அண்மையில் கிடைத்தது.

இத்தொகுதியில் இவருக்கு எதிராக


தொடர்ச்சி 02ஆம் பக்கம்






MORTGAGE
Best Rates wih Major Banks/Companies
Pasky Kanagasabapathy
Cell: 416 569 3099

Mortgage Agent #M12001098
Fax: 416-291 3601
pkanagasabapathy@orianafinancial.com
• Residential/Commercial needs
• Purchase/Refinancing/Renewal/Switch
• Bankruptcy/Challenged/Bad/New/no credit Business/Private loans
• Debt consolidation/Line of credit Self employed/ New Immigrants/Non Resident
Oriana Financial Group of Canada Ltd. Company#10214

வீடு வாங்கவும் விற்கவும்...
ரவி பரமு
Real Estate Broker

Cell: 416-262-4176
Bus: 416-298-3200
HomeLife/Today Realty Ltd., Brokerage*
31 Progress Ave. Suite 210, Toronto
*Independently owned and operated

Brand new - Leasing - Used
வாகனம் வாங்குமுன் 10 வருடம் அனுபவம் வாய்ந்த என்னை முதலில் அழையுங்கள்
416.451.0565
குமார் ஜெகசோதி

TOYOTA MARKVILLE
905.294.8100

துரித பணமாற்றுச் சேவை
• 55 ஆண்டுகள் வர்த்தகத்துறையில் முன்னோடிகள்
• கனடாவில் தொடர்ந்து 22 ஆண்டு சேவை
• தந்தையுடன் மைந்தர்களும் இணைந்த சேவை


மு. காசிப்பிள்ளை சக புத்திரர்கள்
3228 Eglinton Ave. E. #3 416.267.8221
3351 Markham Rd. #109 416.321.8221

இப்பொழுது 2 இடங்களில்
DENTAL OFFICE
Dr. Iru Vijayanathan,
BDS, FAGD, MFDS RCPS (Glasg)
DENTAL SURGEON
☞ அவசரகால பல் வைத்திய சேவைகள்
☞ பல் அடைத்தல் (White Filling / Silver Filling)
☞ பல் பிடுங்குதல், ஞானப்பல் பிடுங்குதல்
☞ பல்வேர் அடைத்தல் (Root Canal) மூலம் பல் பிடுங்காமல் பாதுகாத்தல்
☞ முரசு கரைதல், முரசிலிருந்து இரத்தம் வடிதல், வாய்துர்நாற்றம் ஆகிய முரசு வியாதிகளுக்குச் சிகிச்சை
☞ சிறுவர்களுக்கான பற்சிகிச்சைகள்
3150 Eglinton Ave. E., Unit 5 Markham & Eglinton Tel:416.264.3232
3351Markham Rd., #129 Markham & Steeles Tel: 416.609.2022







# ஒன்ராறியோ...

01ஆம் பக்கத்தொடர்ச்சி

போட்டியிடுபவர்கள் பின்வருமாறு:

லிபரல் கட்சியின் சார்பில் Mitze Hunter. ஆபிரிக்க கனடியரான இவர் ஜமேக்காவில் பிறந்து கனடாவிற்கு 1975 இல் குடிபெயர்ந்தார். ரொறொன்ரோ பல்கலைக்கழக கலைப்பட்டதாரியான இவர் Greater Toronto Civic Action Allience இன் பிரதம நிர்வாகியாக இருக்கிறார்.



Liberal - Mitzie Hunter

புதிய ஜனநாயக் கட்சியின் சார்பில் Adam Giambrone போட்டியிடுகிறார். இவர் முன்னர் ரொறொன்ரோ நகரமுதல்வருக்கு போட்டியிட்டவர். இத்தாலி - அமெரிக்கா பரம்பரையை சேர்ந்த இவர் ஒரு புதைபொருள் ஆய்வாளர் ஆவார். இவரது நகரசபைத்தேர்தல் பிரச்சாரத்தின் போது இவர்மீது பாலியல் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டதால் நகரசபைத்தேர்தலில் போட்டியிடாது விலகினார்.



NDP - Adam Giambrone

இவர்களைவிட இத்தொகுதியின் பசுமைக்கட்சி சார்பில் Nick Leeson உம், சுதந்திரக்கட்சியின் சார்பில் Matthew Oliver உம், மக்கள் கட்சியின் சார்பில் Bill Rawdah உம், குடும்பக் கூட்டணிக்கட்சியின் சார்பில் Raphael Rosch உம், விருப்பசுதந்திர கட்சியின் (Libertarian) சார்பில் Heath Thomas உம் மற்றும் சுயேட்சை உறுப்பினராக Jim Hamilton உம் போட்டியிடுகின்றனர்.

## எற்றோபிக்கோ - லேக்சோர்

டால்ரன் மக்கன்ரியின் மந்திரிசபையில் கல்வி அமைச்சராக இருந்து பின்னர் கதலின் வின் அமைச்சரவையில் அரசுகளுக்குகிடையேயான விவகார அமைச்சராக இருந்த Laurel Broten தனது மாகாண சபை நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை துறந்ததால் வந்த வெற்றிடத்திற்கு 8 பேர் ஓகஸ்ட் 01, 2013 இல் நடைபெறும் இடைத்தேர்தலில் போட்டியிடுகின்றனர்.

லிபரல் கட்சியின் சார்பில் Peter Milczyn போட்டியிடுகிறார். இவர் ரொறொன்ரோ மாநகரசபை கவுன்சிலராக 2010 இல் தெரிவு செய்யப்பட்டவர். இவரது பெற்றோர் போலந்தில் இருந்து கனடாவிற்கு குடிபெயர்ந்தவர்கள். பழமைவாதக்கட்சியின் சார்பில் Doug Holyday போட்டியிடுகிறார். இவர் ரொறொன்ரோ மாநகரசபையில் உதவி நகரசபை தலைவராக இருந்தவர். புதிய ஜனநாயகக் கட்சியின் சார்பில் P.C. Choo போட்டியிடுகிறார். மலேசியாவில் பிறந்த இவர் 1989 இல் கனடாவிற்கு குடிபெயர்ந்தார். லண்டன் பல்கலைக்கழக பொருளாதாரப் பட்டதாரியான இவர் பொதுப்பாடசாலை சபையின் Trustee ஆக இருந்தவர்.

இவர்களைவிட இத்தொகுதியில் பசுமைக்கட்சியின் சார்பில் Angela Salewsky உம், சுதந்திரக்கட்சியின் சார்பில் Wayne Simmons உம், மக்கள் கட்சியின் சார்பில் Kevin Clarke உம், விரும்பசுதந்திரக் கட்சியின் சார்பில் Hans Kunov உம் மற்றும் விசேட தேவை கட்சியின் (Special Needs) Dan King உம் போட்டியிடுகின்றனர்.

## ஒட்டாவா தெற்கு

இது முன்னாள் ஒன்ராறியோ முதல்வர் டால்ரன் மக்கன்ரியினுடைய தொகுதியாகும். இவர் பதவி துறந்ததால் வந்த வெற்றிடத்திற்கு ஓகஸ்ட் 01, 2013 இல் வரும் இடைத்தேர்தலில் 9 பேர் போட்டியிடுகிறார்கள். லிபரல் கட்சியின் சார்பில் John Fraser உம், பழமைவாதக்கட்சியின் சார்பில் Matt Young உம், புதிய ஜனநாயகக்கட்சியின் சார்பில் Bronwyn Funiciello உம் போட்டியிடுகிறனர்.

## வின்சர் - ரெகம்சி

இது முன்னாள் ஒன்ராறியோ உதவி முதல்வரும் நிதி அமைச்சருமான Dwight Duncan இனுடைய தொகுதியாகும். இவர் பதவி துறந்ததால் வந்த வெற்றிடத்திற்கு ஓகஸ்ட் 01, 2013 இல் வரும் இடைத்தேர்தலில் 7 பேர் போட்டியிடுகிறார்கள். லிபரல் கட்சியின் சார்பில் Jeewen Gill உம், பழமைவாதக்கட்சியின் சார்பில் Robert de Derteuil உம், புதிய ஜனநாயகக்கட்சியின் சார்பில் Percy Hatfield உம் போட்டியிடுகிறனர்.

## லண்டன் மேற்கு

இது டால்ரன் மக்கரின்ரியினுடைய அமைச்சரவையில் இருந்த Christopher Bentley இனுடைய தொகுதியாகும். இவர் பதவி துறந்ததால் வந்த வெற்றிடத்திற்கு ஓகஸ்ட் 01, 2013 இல் வரும் இடைத்தேர்தலில் 6 பேர் போட்டியிடுகிறார்கள். லிபரல் கட்சியின் சார்பில் Ken Coran உம், பழமைவாதக்கட்சியின் சார்பில் Ali Chahbar உம், புதிய ஜனநாயகக் கட்சியின் சார்பில் Peggy Sattler உம் போட்டியிடுகிறனர்.

ரொறொன்ரோ ஸ்ரார் மற்றும் CTV ரிவியில் வெளியாகிய கருத்துக் கணிப்புகளின் படி லிபரல் கட்சி இரு இடங்களில் தோல்வியைத் தழுவலாம் எனவும் மூன்று இடங்களில் தமது வெற்றியை திரும்பவும் உறுதிசெய்யலாம் எனவும் எதிர்பார்ப்பதாக தெரிவிக்கப்படுகிறது.



விளம்பரம்
VLAMBARAM

**பதிப்பாளர்:** ராஜா மகேந்திரன்
**பத்திரிகை ஆசிரியர்:** சத்தியா மகேந்திரன்
**ஊடகப்பொறுப்பாளர்:** விஜய்பாலன்
**தட்டச்சு:** கலா
**அலுவலக முகாமையாளர்:** நிலானி
**பதிப்பு:** *Can Media Publishing Inc.*


*Vlambaram Publications Inc.*
*GTA SQUARE, 5215 FINCH AVE. E.,*
*#201, TORONTO, ON M1S 0C2, CANADA*
*TEL: 416-282-8059 FAX: 416-282-4978*
*e-mail: Vlambaram@sympatico.ca*
*Web: www.vlambaram.com/www. tamilvanakkam.com*

விளம்பரம் பத்திரிகை 'விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ் இங்' ஆல் வெளியிடப்படுகிறது. விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களே பொறுப்பாளர்கள். **பதிப்புரிமை:** 2004 விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ் இங். விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களை முழுமையாகவோ, பகுதியாகவோ ஆசிரியரின் எழுத்து மூல அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.

## வாசகர் எண்ணங்கள்

விளம்பரம்™ ஐ வாசிப்பவர்கள் தங்கள் எண்ணக்கருவை தெரியப்படுத்துமாறு கேட்டுக் கொள்கின்றோம். ஆக்கபூர்வமான உங்கள் கருத்தை இப்பகுதியில் வெளியிடுவோம். உங்கள் அபிப்பிராயங்களைக் கடிதம் மூலம், தொலை- நகல் மூலம் அல்லது மின்னஞ்சல் மூலம் அனுப்புமாறு கேட்டுக்கொள்கிறோம்.

1. *Vlambaram Publications Inc. , 5215 Finch Ave. E. #201, Toronto, ON M1S 0C2*
2. *Tel.: 416.282.8059*
3. *Fax: 416.282.4978*
4. *email: vlambaram@sympatico.ca*
5. *web: www.vlambaram.com www.tamilvanakkam.com*




# கனடா ஒரு கண்ணோட்டம்

### கடந்த இதழ் தொடர்ச்சி

## தேர்தல் முடிந்த பின்னர்



தேர்தல் முடிந்த பின்னர் எந்தக் கட்சியின் பிரதிநிதிகள் பெரும்பான்மையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்களோ அந்தக் கட்சியே ஆளும் கட்சி ஆகும். அந்தக் கட்சியின் தலைவரே பிரதம அமைச்சர் ஆவார். பிரதம அமைச்சருக்கும் ஆளும் கட்சிக்கும் மக்களவையில் பெரும்பான்மை உறுப்பினர்களின் ஆதரவு இருக்கும் வரைக்கும் அவர்கள் ஆட்சி புரிவார்கள்.

பிரதம அமைச்சர், மக்களவை உறுப்பினர்களுள் பலரை அமைச்சரவை உறுப்பினர்களாகத் தெரிவுசெய்வார். கூட்டாட்சித் திணைக்களங்களைக் கொண்டுநடத்துவது அமைச்சர்களின் பொறுப்பு. பிரதம அமைச்சரையும் அமைச்சர்களையும் கொண்டதே அமைச்சரவை. நாட்டை ஆள்வது குறித்து அவர்கள் முக்கிய முடிவுகளை எடுப்பார்கள். புதிய சட்டங்கள் பலவற்றையும் அவர்கள் முன்மொழிவார்கள். மக்களவை உறுப்பினர் எவரும் அம்முடிவுகளைக் குறித்து வினா எழுப்ப முடியும்.

மக்களவை உறுப்பினர்களுள் பெரும் பான்மையோர் அரசாங்கம் எடுக்கும் ஒரு பெரிய முடிவை எதிர்த்து வாக்களித்தால், ஆளும் கட்சி தோற்கடிக்கப்படுகிறது என்று பொருள். பிரதம அமைச்சர் பதவி துறப்பார். அப்புறம் ஒரு புதிய தேர்தல் நடப்பது வழக்கம்.
ஆளாத கட்சிகள் எதிர்க் கட்சிகள் எனப்படும். மக்களவையில் ஆகக்கூடிய உறுப்பினர்களைக் கொண்ட எதிர்க்கட்சியே நேரெதிர்க் கட்சி ஆகும். எதிர்ப்பது அல்லது அரசாங்கம் முன்மொழியும் திட்டங்களைச் செம்மைப்படுத்துவதே எதிர்க்கட்சிகளின் பணி ஆகும்.

## குடியுரிமைத் தேர்வு

பின்வரும் தலைப்புகள் குறித்துக் கேட்கப்படும் வினாக்கள் அனைத்துக்கும் சரிவர விடையளித்தே நீங்கள் இத்தேர்வில் சித்தி எய்த வேண்டும்:

- கனடாவில் நடைபெறும் தேர்தல்களில் வாக்களிக்கும் உரிமை,
- கனடாவில் நடைபெறும் தேர்தல்களில் போட்டியிடும் உரிமை,
- வாக்களிப்பு நடைமுறைகள், உங்களை ஒரு வாக்காளராகப் பதியும் விதம்.

உங்கள் மக்களவை உறுப்பினருக்கு உங்கள் தேர்தல்தொகுதியில் ஓர் அலுவலகம் உண்டு.

தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளுள் பெரும்பான்மையோரைக் கொண்ட கட்சியே ஆளும் கட்சி ஆகும்.

அந்தக் கட்சியின் தலைவரே பிரதம அமைச்சர் ஆவார்.

ஆளாத கட்சிகள் எதிர்க் கட்சிகள் எனப்படும்.

மக்களவையில் ஆகக்கூடிய உறுப்பினர்களைக் கொண்ட எதிர்க்கட்சியே நேரெதிர்க் கட்சி ஆகும்.

## தேர்தல் காலப்பகுதியில் வாக்களிப்பு நடைமுறைகள்

### 1. வாக்காளர் தகவல் அட்டை

தேசிய தேர்வாளர் இடாப்பில் விபரம் பதியப்பட்டுள்ள தேர்வாளர் ஒவ்வொரும் ஒரு வாக்காளர் தகவல் அட்டையைப் பெற்றுக் கொள்வார். அதனைப் பெற்றுக் கொள்வது, உங்கள் பெயர் வாக்காளர் நிரலில் இடம்பெற்றுள்ளதை உறுதிப்படுத்துகிறது. வாக்களிக்கும் திகதியும் இடமும் அதில் பொறிக்கப்பட்டிருக்கும்.

### 2. எனக்கு அட்டை கிடைக்கவில்லை

வாக்காளர் தகவல் அட்டை உங்களுக்குக் கிடைக்காவிட்டால், உங்கள் உள்ளூர் தேர்தல் அலுவலகத்தை அழைத்து, நீங்கள் வாக்காளர் நிரலில் இடம்பெற்றிருக்கிறீர்களா என்பதை உறுதிப்படுத்தவும். அதற்கான இலக்கம் தெரியாவிட்டால், 1 800 463 6868 என்னும் இலவச இலக்கத்தைப் பயன்படுத்தி ஒட்டாவாவில் உள்ள கனடா தேர்தல் திணைக்களத்துடன் தொடர்புகொள்ளவும்.

### 3. முன்கூட்டியே வாக்களித்தல், தனி வாக்களிப்பு

நீங்கள் தேர்தல் நாளில் வாக்களிக்க முடியாவிட்டால், அல்லது வாக்களிக்க விரும்பா விட்டால், முன்கூட்டியே வாக்களிக்கலாம் (சம்பந்தப்பட்ட திகதிகளும் இடங்களும் உங்கள் வாக்காளர் தகவல் அட்டையில் காணப்படுகின்றன). அல்லது தனி வாக்களிப்பில் ஈடுபடலாம்.

### 4. தேர்தல் நாளில்

உங்கள் வாக்களிப்பு நிலையத்துக்குச் செல்லவும். அந்த இடம் உங்கள் வாக்காளர் தகவல் அட்டையில் பொறிக்கப்பட்டுள்ளது. தேர்தல் அதிகாரிகள் உங்கள் பெயரையும் முகவரியையும் கேட்டு, அவை வாக்காளர் நிரலில் உள்ளனவா என்பதை உறுதிப்படுத்தி, ஒரு வாக்குச் சீட்டை உங்களிடம் தருவார்கள்.

### 5. வாக்குச் சீட்டில் குறியிடல்

நீங்கள் தெரிவுசெய்யும் வேட்பாளரின் பெயருக்கு அருகில் புள்ளடி (X) இடவும்.

### 6. இரகசிய வாக்களிப்பு

உங்கள் வாக்கு இரகசியமானது. மறைவில் நின்று வாக்குச் சீட்டில் குறியிடுமாறு உங்களிடம் கேட்கப்படும். குறியிட்டதும் வாக்குச் சீட்டை மடித்து வாக்களிப்பு அதிகாரியிடம் கொடுக்கவும்.

### 7. வாக்குப் பெட்டி

வாக்களிப்பு அதிகாரி உங்கள் வாக்குச் சீட்டின் அடிக்கட்டையைக் கிழித்தெடுத்து விட்டு வாக்குச் சீட்டை உங்களிடமே திருப்பித் தருவார். அதனை நீங்கள் வாக்குப் பெட்டியில் இடவேண்டும்.

### 8. தேர்தல் பெறுபேறுகள்

வாக்களிப்பு முடிவடைந்த பின்னர், ஒவ்வொரு வாக்குச் சீட்டும் எண்ணப்பட்டு, பெறுபேறுகள் அறிவிக்கப்படும். தொலைக் காட்சியில் அல்லது கனடா தேர்தல் திணைக்களத்தின் இணையத் தளத்தில் பெறுபேறுகளை நீங்கள் காணலாம்: www.elections.ca

தொடரும்...

*- மணி வேலுப்பிள்ளை*

**APPLEMORE AUTOMOTIVE**

உட்புற, வெளிப்புற திருத்த பராமரிப்பு வேலைகளுக்கு என்றும் உங்கள் மத்தியில்

ONTARIO'S DRIVE CLEAN
Accredited Test & Repair Facility

- *Detailing*
- *Motor Shampoo*
- *Interior Shampoo*
- *Exterior Wash*
- *Waxing*

- *Repairs*
- *Safety Certification*
- *Overall Maintenance*
- *Under Coating*
- *Rust Proofing*

**416-285-4998**

435 Midwest Road. Unit B5, Scarborough, ON. M1P 3A6

SPECIAL



# இறப்பிற்கு பின்...?

சற்றே புதிரான ஒரு கேள்வியாய் தெரிந்தாலும் வாழ்வின் மர்மங்களை நம் கண்களுக்கு உணர்த்தும் வாழ்க்கை இரகசியம் இது. முற்றிலும் புரியாவிட்டாலும் கைவிளக்காய் நம்மை சிறிய வெளிச்சத்திற்கு கூட்டிச் செல்கிறது சத்குருவின் இந்த கேள்வி-பதில் பகுதி...

கேள்வி - யோகா என்பது கலையா? விஞ்ஞானமா?

சத்குரு: துவக்கத்தில் அது ஒரு திறன். தொடர்ந்த பயிற்சி மூலம் அந்தத் திறன் கைவரப் பெற்றதும் அது ஒரு விஞ்ஞானமாகிறது. அந்த விஞ்ஞானத்தின் நுட்பங்களைப் புரிந்து, மிகத் தேர்ச்சி பெற்றதும் ஒரு கட்டத்தில் அது கலையாகிறது.

கலை என்ற வார்த்தையில்கூட யோகா முழுமையாக அடங்கிவிடாது. ஆழமாகப் போகப் போக, அது ஒருவித சாதுர்யமான தந்திரமாவதை வேண்டுமானால், கலை என்று சொல்லலாம்.

கேள்வி - உடலை விட்டு நம் உயிர் நீங்கியபின், அதன் அடுத்த கட்டம் என்ன?

சத்குரு: உடலைவிட்டு உயிர் எப்படி நழுவி வெளியேறுகிறது என்பதைப் பொறுத்துத்தான் அதன் அடுத்த கட்டம் அமையும்.


பொதுவாக ஒருவரது உயிர் பிரிந்ததும், அவர் இனி இல்லை என்கிறோம். அப்படிச் சொல்வது சரியில்லை. உண்மையில் அவர் இனி உங்கள் அனுபவத்தில் இல்லை என்பதே சரி. அவர் வேறு ஏதேதோ விதத்தில் அங்கே இருக்கிறார்.

உடலை எந்தவிதத்திலும் காயப்படுத்தாமல், சிதைக்காமல் முழு உணர்வுடன், ஒரு ஆடையை உதறுவது போல், உங்கள் உடலைவிட்டு உயிர் வெளியேறுமானால், அதை மஹாசமாதி என்கிறோம். அந்த நிலை அடைந்தவர்களுக்கு உயிர்ப் பயணம் அத்துடன் ஒரு முடிவுக்கு வருகிறது. ஒன்றுமில்லாததிலிருந்து துவங்கிய பயணம் அந்த ஒன்றுமில்லாததுடன் கலந்து ஐக்கியமாவதுடன் வாழ்க்கையின் வட்டம் முழுமையடைகிறது!



கேள்வி - கௌதம புத்தர் பெரும்பாலும் நிர்வாணமாக இருந்தார் என்பது உண்மையா? பண்டைய யோகிகள் ஏன் உடைகளைத் துறந்து நிர்வாணமாக இருந்தார்கள்? உடைகளற்று இருப்பது தியான நிலைக்கு ஒரு வழியா?

சத்குரு: கௌதம புத்தர் சமூகத்துடன் பலவிதங்களில் இயங்கிக்கொண்டு இருந்ததால், அவர் நிர்வாணமாக இல்லை. வனங்களிலும் மலைகளிலும் பல ஆண்டுகள் தொடர்ந்து ஆழ்ந்த தியானத்தில் ஈடுபடும் யோகிகள் எத்தனை காலத்துக்குத் தங்கள் உடைகளைப் பாதுகாக்க முடியும்? அந்த உடைகள் நைந்து பயனற்றுப் போனால், விலங்குகளைக் கொன்று அவற்றின் தோல்களை ஆடைகளாக அணிய வேண்டிய கட்டாயத்துக்குத் தள்ளப்படுவர். அதனால் யோகிகள் தங்கள் உடைகள் பற்றி கவலைப்படவில்லை.



## சத்குரு வாசுதேவ்

தவிர, ஆன்மீகப் பாதையில் யோகிகள் பயணம் செய்கையில் உடல் பற்றிய கவனத்தை வெகு குறைவாகவே வைத்திருக்க விரும்புவார்கள். நீங்கள் கம்பியூட்டரில் வேலை செய்கையில், தேவையற்ற விடயங்களை மினிமைஸ் செய்து வைத்திருப்பது போல், யோகிகள் தங்கள் உடல் பற்றிய கவனத்தைக் குறைத்து வைத்திருப்பார்கள். வெளியாருக்குத்தான் அவர்களுடைய நிர்வாணம் பற்றிய கவனமே இருக்கும். யோகிகளுக்கு அவர்களுடைய உடல் பற்றிய கவனமே இருக்காது.

Contact: 1 866 424 ISHA (4742)
Email: toronto@ishafoundation.org
Website: www.ishafoundation.org /
**Inner Engineering Program is now online with Sadhguru:**
www.innerengineering.org







**MATH, SCIENCE & ENGLISH TUITION**

Math & Physics taken for all grades from grade 4 to 1st year university. Special classes in advanced functions, calculus and vectors and data management & English from grade 4 to 8. Classes available at ***Scarborough & Stouffville Contact: 647.340.9490 / 416.732.2228***

**விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு**
***www.vlambaram.com***
***www.tamilvanakkam.com***

# மோட்கேஜ் கிளினிக்



தயா (PK) கந்தையா
BAS, ABR, AMP
Principal Broker / President
FSCO Lic # M 08001083
**Cell : 416-716-8707**

இலவச ஆலோசனைக்கு தயக்கமின்றி அழையுங்கள்



நிஷாந்தன் சுவர்ணராஜா
Mortgage Agent
FSCO Lic # M 10001839
**Cell : 647-385-2710**

- ⇒ லைன் ஒப் கிரெடிட் எடுக்க வேண்டுமா?
- ⇒ கடன்களை ஒன்றுபடுத்தி எல்லா பேமேன்டையும் ஒரே பேமேண்டாக மாற்ற வேண்டுமா?
- ⇒ ரீபைனான்ஸ் செய்ய வேண்டுமா?
- ⇒ 2 வது மற்றும் 3வது மோட்கேஜ் தேவையா?
- ⇒ பாங்க்ரப்சி செய்தோருக்கான மோட்கேஜ் தேவையா?
- ⇒ உரிய நேரத்தில் மோட்கேஜ் தவணைப் பணத்தினை செலுத்தமுடியாது பவர் ஒப் சேலினை எதிர்நோக்குகிறீர்களா? உடனடித்தீர்வுக்கான ஆலோசனைகள் தேவையா?
- ⇒ உங்கள் வீட்டினை வாடகைக்கு விட வேண்டுமா?
- ⇒ அனைத்து ரியல் எஸ்டேட் சம்பந்தமான சேவைகளையும் குறைந்த செலவில் செய்ய வேண்டுமா?
- ⇒ மற்றும் பல சேவைகள்



ஜெ இராசதுரை MBA, BBA (Hon), AMP
Mortgage Development Manager / Agent
FSCO Lic # M 09001428
**Cell : 416-624-4843**



உதயன் (Utha) மாணிக்கவாசகர்
Mortgage Agent
FSCO Lic # M 11001140
**Cell : 647-282-8842**



சுதேசன் பத்மநாதன் M.Com, B.Com
Mortgage Agent
FSCO Lic # M 12001741
**Cell : 647-861-8240**

## வோக் இன் - சனிக்கிழமை 9.00 - 5.00

CENTUM™
Rapid Mortgages Inc.
LIC # 10156

80 Nashdene Road, Suite # 211
Toronto, ON. M1V 5E4.
416-644-3555

rapid realty inc.

# விளையாட்டுத் தகவல்கள் 352

## உலக கிண்ண கிரிக்கெட் 2015!

11-வது உலக கிண்ண ஒருநாள் போட்டியை சர்வதேச கிரிக்கெட் கவுன்சிலின் அனுமதியுடன் அஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்து கிரிக்கெட் சபைகள் இணைந்து நடத்துகிறது. இந்த போட்டி 2015-ம் ஆண்டில் பெப்ரவரி மற்றும் மார்ச் மாதங்களில் நடைபெறுகிறது. 14 நாடுகள் பங்கேற்கும் இந்த போட்டியின் லீக் மற்றும் நாக்-அவுட் ஆட்டங்கள் அவுஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்து நாடுகளில் சரிசமமான எண்ணிக்கையில் நடைபெறும். இந்த போட்டியில் கலந்து கொள்ளும் அணிகள் இடம் பெறும் பிரிவுகள், அணிகள் மோதல் அட்டவணை, ஆட்டங்கள் நடைபெறும் இடம் ஆகியவை குறித்து சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் மற்றும் அவுஸ்திரேலியா, நியூசிலாந்து கிரிக்கெட் சபைகள் கலந்தாலோசித்து முடிவு செய்துள்ளது. இந்த நிகழ்வில் சர்வதேச கிரிக்கெட் கவுன்சில், அவுஸ்திரேலியா, நியூசிலாந்து கிரிக்கெட் சபையின் நிர்வாகிகள், இன்னாள் மற்றும் முன்னாள் வீரர்கள் கலந்து கொண்டனர். Pool A: England, Australia, Sri Lanka, Bangladesh, New Zealand, Qualifier 2 and Qualifier 3 Pool B: South Africa, India, Pakistan, West Indies Zimbabwe, Ireland and Qualifier 4 Venue cities: Adelaide, Auckland, Brisbane, Canberra, Christchurch, Dunedin, Napier, Nelson, Hamilton, Hobart, Melbourne, Perth, Sydney, Wellington.

## டைசன் கே, அசாபா பவல் ஊக்க மருந்து பரிசோதனையில் தோல்வி

முன்னணி குறுந்தூர ஓட்டவீரர்களான அமெரிக்காவின் டைசன் கே மற்றும் ஜமைக்காவின் அசாபா பவல் ஆகியோர் தடை செய்யப்பட்ட ஊக்கமருந்து பரிசோதனையில் தோல்வியிடைந்துள்ளனர். இந்த நிலையில் அடுத்த மாதம் உலக




சாம்பியன் ஷிப் போட்டிகளில் இருந்து டைசன் கே நீக்கப்பட்டுள்ளார். 100 மீற்றர் ஓட்டத்தில் உசைய்ன் போல்ட்டிற்கு அடுத்த படியாக சிறந்த காலப்பெறுமதியை டைசன் கே பதிவுசெய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இதேவேளை கடந்த மாதம் நடைபெற்ற ஜமைக்கா சாம்பியன்ஸ் ஷிப் போட்டிகளின் போது நடத்தப்பட்ட ஊக்கமருந்துச் பரிசோதனையில் அசாபா பவல் தோல்வியடைந்துள்ளார். சக வீரரான ெ ஷரோன் ஷிப்சனும் ஊக்கமருந்து பரிசோதனையில் தோல்வியடைந்துள்ளார். கடந்த ஆண்டு லண்டனில் நடைபெற்ற 4 தர 400 மீற்றர் அஞ்சலோட்டத்தில் வெள்ளிப் பதக்கத்தை பெற்ற ஜமைக்க அணியில் அவர் இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. ஒலிம்பிக் சாம்பியனான ஜமைக்காவின் வேரொனிக்கா கெம்பல் பிரவுண் ஊக்கமருந்து பரிசோதனையில் தோல்வி அடைந்து ஒரு மாதம் கடந்துள்ள நிலையில், இந்த முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

## வெரோனிக்கா ஊக்கமருந்து பரிசோதனையில் தோல்வி.

200 மீற்றர் உலக சாம்பியனான ஜமைக்காவின் வெரோனிக்கா கெம்பல் பிரவுண் தடை செய்யப்பட்ட ஊக்கமருந்து பரிசோதனையில் தோல்வியடைந்துள்ளார்.


31 வயதான பிரவுணுக்கு கடந்த மாதம் நான்காம் திகதி ஊக்கமருந்து பரிசோதனை நடத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. 2004 ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டிகளில் 200 மீற்றர் ஓட்டம் மற்றும் 4 தர 400 மீற்றர் அஞ்சலோட்டம் ஆகியவற்றில் அவர் தங்கப் பதக்கத்தை வெற்றி கொண்டிருந்தார். மீண்டும் 2008 ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டியில் 200 மீற்றர் ஓட்டத்தில் அவர் சாம்பியன் பட்டத்தை மீண்டும் சுவீகரித்திருந்தார்.

## 77 ஆண்டுகளின் பின் பிரித்தானியா வின் கனவை நனவாக்கினார் ஆண்டி மர்ரி


விம்பிள்டன் டென்னிஸ் போட்டிகளின் ஆடவர் பட்டத்தை பிரிட்டனின் ஆண்டி மர்ரி வென்று சாதனை படைத்துள்ளார். இறுதிப் போட்டியில் அவர் செர்பியாவின் நோவாக் யாக்கோவிச்சை 6-4,7-5, 6-4 எனும் நேர் செட்களில் வென்றார். பிரிட்டனைச் சேர்ந்த ஒருவர் விம்பிள்டன் டென்னிஸ் போட்டிகளில் பட்டத்தை வெல்வது கடந்த 77 ஆண்டுகளில் இதுவே முதல் முறை. முதல் இரண்டு செட்களிலும் வென்ற ஆண்டி மர்ரி மூன்றாவது சுற்றிலும் எளிதாக வென்று விடுவார் என்கிற நம்பிக்கை அவரது ரசிகர்களிடையே இருந்தது. எனினும் மூன்றாவது செட்டையும் அதன் மூலம் சாம்பியன் பட்டத்தையும் அவர் போராடியே வெல்ல வேண்டிய நிலை ஏற்பட்டது. உலக ஆடவர் தரப்பட்டியலின் முதலிடத்தில் இருக்கும் நோவாக் யாக்கோவைச்சுக்கும், இரண்டாம் இடத்தில் இருக்கும் ஆண்டி மர்ரிக்கும் இடையேயான மூன்றாவது செட் மிகவும் பரபரப்பாக இருந்தது. ஒரு கட்டத்தில் மூன்றாவது செட்டில் இருவரும் 2-2 எனும் கணக்கில் இருந்தனர். பின்னர் அந்த செட்டின் போக்கு யார் வேண்டுமானாலும் வெற்றி பெறலாம் எனும் சூழலை ஏற்படுத்தியது. அதிலும் குறிப்பாக 5-4 எனும் கணக்கில் முன்னிலை வகித்த மர்ரி வெற்றியில் விளிம்புக்கு சென்று சென்று திரும்பினார். மூன்றாவது செட்டின் ஆறாவது ஆட்டத்தில் ஆண்டி மர்ரி 40-0 எனும் கணக்கில் முன்னணியில் இருந்தாலும், யாக்கோவிச் மீண்டு வந்து 40-40 க்கு எனும் சமநிலையை ஏற்படுத்தினார். பின்னர் அந்த ஆட்டத்தின் வெற்றி யாருக்குச் செல்லும் என்று கணிக்க முடியாத நிலையை ஏற்படுத்தியது. உலகில் ஆடவர் பட்டியலில் முதல் இரண்டு இடத்திலுள்ள ஜோக்கோவிச் மற்றும் மர்ரி அரங்கத்தில் குழுமியிருந்த பிரிட்டனின் பிரதமர் டேவிட் கேமரன் உட்பட பலர் மிகுந்த எதிர்பார்ப்புடன் கூடிய ஏக்கத்தில் இருந்ததை தொலைக்காட்சிகள் காட்டின. இறுதியாக ஆண்டி மர்ரி பிரிட்டிஷ் மக்கள் மற்றும் ரசிகர்களின் எதிர்பார்ப்பை பூர்த்தி செய்யும் வகையில் விம்பிள்டன் சாம்பியன் பட்டத்தை வென்றார். இது ஆண்டி மர்ரியின் இரண்டாவது பெரிய வெற்றியாகும். 26 வயதான அவர் கடந்த ஆண்டு அமெரிக்கன் ஓபன் டென்னிஸ் பட்டத்தை வென்றார். இவற்றைவிட, கடந்த ஆண்டு ஒலிம்பிக் டென்னிஸ் போட்டிகளிலும் அவர் தங்கம் வென்றார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

விம்பிள்டன் பகுதியில் 40 டிகிரிக்கும் அதிகமாக வெப்பம் நிலவிய சூழலில், 15,000 ரசிகர்கள் மத்தியில் இந்தப் போட்டி மூன்று மணிக்கும் கூடுதலான நேரம் நடைபெற்றது. அகில இங்கிலாந்து டென்னிஸ் சங்கத்தால் நடத்தப்படும் இந்தப் போட்டியில் 1936 ஆம் ஆண்டு ஃபிரெட் பெரி பட்டத்தை வென்ற பிறகு, பிரிட்டனைச் சேர்ந்த ஒருவர் விம்பிள்டன் பட்டத்தை பெறுவது இதுவே முதல் முறை. அவரது வெற்றியை அடுத்து பிரிட்டனின் பல பகுதிகளிலும் கொண்டாட்டங்கள் இடம்பெற்றன.

**எஸ். கணேஷ்**



**LOTUS KID'S EARLY LEARNING**




*WE PREPARE AN EARLY EDUCATION FOR YOUR CHILDREN.*

**Ages From 3 - 6**

*We Help Prepare Your Children With an*
**EARLY EDUCATION**
*Allowing Them to Play and Learn Together*
*Focusing On Co-Operation and Team Work!*

***Starting On September 2013***

**உங்கள் மழலைகளின் கல்வி எதிர்காலத்துக்கு நாங்கள் வித்திடுகின்றோம்.**

***FOR EARLY ADMISSIONS CALL : 416.738.8824***
***3011 MARKHAM ROAD UNIT 58 M1X 1L9***

## கரவெட்டி கிழக்கு ஐக்கிய மக்கள் சங்கத்தின் வருடாந்த ஒன்றுகூடல்

கரவெட்டி கிழக்கு ஐக்கிய மக்கள் சங்கத்தின் வருடாந்த ஒன்றுகூடலும், விளையாட்டுப்போட்டிகளும் எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 3ந்திகதியன்று காலை 10 மணியில் இருந்து மோர்ணிங்சைட் பார்க் 3ம் பகுதியில் முதலாவது வாகன நிறுத்துமிடத்திற்கு அருகாமையில் நடைபெறும். கரவெட்டி கிழக்கு மக்கள் அனைவரும் அன்பர்களும் இந்த நிகழ்வுகளில் கலந்து சிறப்பிக்குமாறு வேண்டுகிறோம்.

தகவல்: நேசன் - 416.568.3225 / சிவராசா – 416.399.3611

# GTA இல் வீடு வியாபாரம் குறைந்துள்ளது! விலை அதிகரித்துள்ளது!

## நாமும் நமது இல்லமும்

ராஜா-மகேந்திரன்

## தொடர் - 395

யூலை 2012 இல் கொண்டுவரப்பட்ட இறுக்கமான அடமானக்கடன் சம்பந்தப்பட்ட புதிய நடைமுறை சட்டதிட்டங்களின் பின் கடந்த ஒரு வருடத்தில் ஆதன வியாபாரத்தில் குறிப்பாக அடுக்குமாடி மனைகளின் வியாபாரத்தில் எவ்வாறான மாற்றங்கள் ஏற்பட்டுள்ளது? அதாவது கடந்த 6 மாதங்களில் (2013 ஆம் ஆண்டின் முதல் 6 மாதங்கள்) விற்கப்பட்ட அடுக்குமாடி மனைகள் மற்றும் வீடுகளின் மொத்த சராசரி விலையில் அதிகரிப்பு ஏற்பட்ட போதிலும் மொத்தமாக விற்கப்பட்ட வீடு/மனைகளின் எண்ணிக்கையில் இறக்கம் ஏற்பட்டுள்ளது.

ஏறக்குறைய முந்தைய ஆண்டை விட 1/3 பகுதி குறைந்துள்ளது. கடந்த 10 வருடங்களில் இந்தக் காலமே இரண்டாவது பெரிய இறக்கமாக பதியப்பட்டுள்ளது. 2008/2009 இல் ஏற்பட்ட பண இறக்கம் (Recession) காலத்திலும் இவ்வாறான விற்பனை இறக்கம் ஏற்பட்டு இருந்தது. இப்போதைய விலை இறக்கத்திற்கு காரணங்கள் பல உள்ளன. Affordability உம் ஒரு காரணம். அதாவது வாங்குவதற்குரிய தகமை இழந்தது. விலை அதிகரிப்பு, குறிப்பாக தனிவீடு, இருவீடுகள் சேர்ந்தவை, தொடர் வீடுகளின் விலை அதிகரிப்பு, முக்கியமாக முதல் தடவை வாங்குபவர்களின் அடமானம் பெறுவதற்குரிய நிலைமையை கடினமாக்கியுள்ளது. இதனால் Lowrise வீடுகளின் விற்பனை 43% இனால் குறைந்துள்ளது.

GTA பகுதியில் வீடு / மனை வாங்குவதற்கு போதியளவு வாங்குவோர் இருக்கின்ற போதிலும் இவ்வாறான நிலைமை முதல் தடவை வாங்குபவர்களை தள்ளியே வைத்துள்ளது. அரசின் Greenbelt என்ற நிர்மாணம்



செய்ய முடியாத நிலப்பகுதி என்று ஒதுக்கப்பட்ட பெரியளவிலான நிலப்பகுதி மற்றும் ஒன்ராரியோ எப்பகுதியில் வீடு, மனைகள் அடுத்துவரும் 20 வருடங்களிற்கு கட்டலாம் என்ற மிகவும் இறுக்கமான அரசின் கொள்கை போன்றவையே, உயரம் குறைந்த வீடுகளின் விலை அதிகரிப்பிற்கு காரணம். இந்த வீடுகளின் விலை அதிகரிப்பு சராசரி விலை அதிகரிப்பை ஏற்படுத்தியுள்ளது. விற்பனை குறைந்த போதிலும் விலை அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. மிகவிரைவில் அறிமுகப்படுத்த இருக்கும் வீடு, மனைகள் நிர்மாணிப்பதற்குரிய மேலதிக செலவு Development Charge, வீடு, மனைகளின் விலை அதிகரிப்பை தடுக்கமுடியாது என்றே தோன்றுகின்றது. 2004 ஆம் ஆண்டிலிருந்து இந்த வகையான பணவசூலிப்பு (Development Charges) 143% இலிருந்து 357% வரையான அதிகரிப்பு GTA பகுதியில் உள்ள நகர-சபை, பிரதேச சபைகளில் ஏற்பட்டுள்ளது. இந்நிலைமை தொடரும் என்றே தெரியவருகின்றது. இவ்வாறான நிலைமை தொடரும்போது, விலை அதிகரிப்பை கட்டுப்பாட்டிற்குள் வைத்திருப்பது என்பது இயல்பானதாக கூறமுடியாது. 100,000 இற்கு மேற்பட்ட புதிய வரவாளர்கள் GTA பகுதியில் ஒவ்வொரு வருடமும் குடியேறுவதால், தொடர்ச்சியான வீடு வாங்குவதற்கான தேவை (Demand) இருந்து கொண்டே இருக்கும். அண்மைக்காலங்களில் கனடாவின் குறிப்பாக ரொறொன்ரோ நகரின் மதிப்பு உலகளாவிய ரீதியில் அதிகரித்துள்ளது. மேலும் பல உலக பணக்காரர்களை கனடாவில் முதலிட வைக்கின்றது. உலகமே ரொறொன்ரோவில் வாழ்கின்றது.

அடமானக்கடனின் வட்டிவீத பெறுமதி அதிகரிப்பு யூலை 2013 இல் ஏற்பட்டுள்ளது. இந்த அதிகரிப்பு நிதி நிறுவனங்களால் மட்டுமே ஏற்படுத்தப்பட்டது. மத்திய வங்கியின் (Bank of Canada) வட்டிவீதத்தில் எதுவித மாற்றமும் ஏற்படாதபோதிலும், இந்த அதிகரிப்பு மேலும் பல வீடு, மனை வாங்குபவர்களை இறுக்கமான சூழலிற்கு ஏற்படுத்தியுள்ளது. குறிப்பாக இரண்டுவித அடமானக் கடன்களில் மாறுகின்ற அடமானக்கடன் வீதம் (Variable Rate), மாறாத வட்டிவீதம் (Fixed Rate) போன்ற கடன்பெறும் முறைகளில் மாறாத வட்டிவீதமே (Fixed Rate) மாற்றப்பட்டுள்ளது.

தொடர்ச்சி 10ஆம் பக்கம்


HomeLife/GTA Realty Inc. Brokerage*

*Independently Owned & Operated

"கனவு உங்களுடையது, பொறுப்பு எங்களுடையது"



Raja Mahendran, P.Eng.
Broker / Owner

5215 Finch Ave, E, #203, Toronto. Tel.:416.321.6969

CONVENIENCE STORE FOR SALE
Over 10 years in business. convenience / Grocery / Audio /CD/ video/ Lotto/Stamps.
Asking only $99,900

CONDO FOR RENT
KENNEDY & HWY 401
2 Bedroom condo. for rent. 2 Washrooms, 1 parking. Avail. September 01, 2013
Rent $1400

LESLIE & BLOOMINGTON
Over 5000 Sq.ft. 3 Parking. Custom built home. Golfcourse + Natures area. Gated house. Only 74 neighbours. Avail. Summer 2014.

HOUSE FOR SALE
NEILSON & SHEPPARD
4 Bedroom house for sale. Single garage. 3 Washrooms. Close to all facilities.
Asking price $209,900

CONDO FOR SALE
LAKE VIEW
2 Bedroom condo for sale. 2 Washroom. Balcony. Close to all facilities. 2 Years old
Price $399,900.

HOUSE FOR SALE
EGLINTON & MIDLAND



Free hold 2 storey town house for sale. Over 1600Sq.ft.
3 Bedroom finished bsmt.
Close to RH King School.
Asking Only $419,900

HOUSE FOR SALE
NEILSON & SHEPPARD



Semi detached 4 bedroom house for sale. 2 Storey.
Asking Only $299,900

# அயல் வீட்டுகாரரின் சத்தங்கள், கும்மாளங்கள் தொடர்ந்து தொல்லையாகவிருந்தால் சட்டம் என்ன சொல்கின்றது?

## கனடிய தகவல் தொடர் 200

### *NOISY NEIGHBOURHOOD*

அனேகமாக இவ் இனிய கோடை காலங்களில் அயல்வீட்டுகாரர்களின் சத்தங்கள், கும்மாளங்கள் சிலநேரங்களில் தொல்லை தரும்.

கொண்டோமினியம் போன்ற உயர்மாடி கட்டிடங்களில் வாழ்பவர்களுக்கு மேலே, கீழே, பக்கங்களில் இருப்பவர்கள் ஏற்படுத்தும் அட்டகாசங்கள் அமைதியினை குலைக்கும். இவை கனடாவில் பலர் எதிர்கொண்ட சற்று கசப்பான அனுபவங்க ளாக இருக்கலாம். பல இடங்களில் கண்டுக்காமலும் விட்டிருப்போம். சாதுவாக தட்டிச் சொல்லி சமாதானமாக தீர்வு கண்டிருப்போம். சில வேளைகளில் தீர்வுகள் எதுவும் முடிவுக்கு கொண்டு வராத அளவுக்கு தொல்லைகள் தொடர்ந்த வண்ணமும் இருந்திருக்கலாம்.

இவை யாவும் கனடாவில் பலருக்கும் நடக்கும் சகஜமான நிகழ்வுகள். இத்தகைய பிரச்சினைக்கு, அந்தந்த நகர சபையின் சட்ட ஒழுங்கு விதிகள் (City by Laws) சரியான தீர்வுகளை வழங்குகின்றது. அங்கும் சரியான தீர்வு கிடைக்காது போனால் தொல்லைகளை தாங்க முடியாது போனவர் ஒன்ராரியோ நீதிமன்றத்தில் நட்டஈடு கோரி வழக்கு தாக்கல் செய்ய முயல்வார்கள். அந்த முயற்சியில் வெற்றியும் கண்டுள்ளார்கள் என்பதற்கு ரொறொன்ரோவில் நடந்த சம்பவங்களையே இங்கு குறிப்பிடலாம்.

இத்தகைய ஒரு பிரச்சினையில் அண்மையில் ஒன்ராரியோ நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு பற்றியும் அது தொடர்பான சட்டபிரச்சினைகள் அணுகுமுறைகள் பற்றியும் திரு. போப் ஆருண் (Mr. Bob Aaron) என்ற வக்கீல் எழுதிய ஒரு சுவையான கட்டுரை தொடரினை 'விளம்பரம்' வாசகர்கள் அறிந்து கொள்ள வேண்டிய செய்தி என்பதால் இங்கு குறிப்பிடுகின்றேன்.

திரு. போப் ஆருண், ரியல் எஸ்ரேட், மற்றும் வீடுகளோடு சம்பந்தப்பட்ட சிவில் வழக்குகளுக்காக நீதிமன்றத்தில் ஆஜராகும் ரொறொன்ரோ நகரின் பிரபல்யமான ஒரு வக்கீல். ஒவ்வொரு சனிக்கிழமை 'ரொறொன்ரோ ஸ்ரார்' பத்திரிகையில் வெளிவரும் அவரது தொடர் கட்டுரைகள் கனடாவில் ஒவ்வொரு புதிய பாடத்தினை போதித்த மாதிரி இருக்கும்.

கடந்த யூன் 08, 2013 திகதியில் வெளிவந்த பத்திரிகையில் நீதிமன்ற வழக்குகளுடன் தொடர்புடைய அவரது கட்டுரை ஒரு விசித்திரமான தகவலை வெளியிட்டுள்ளது.



ரொறொன்ரோ நகரில் (24 Wellesly, St., #811) ஒரு கொண்டோமினியத்தில் எட்டாவது மாடியில் 1994ஆம் ஆண்டு தொடக்கம் தமது மகளுடன் குடியிருந்து வருகின்றார் திருமதி. எலிசபெத் டைக் (Ms. Elizabeth Dyke) என்ற ஒரு பெண்மணி.
பெப்ரவரி 2010 ஆம் திகதியில் அவர்களின் குடியிருப்பு மனைக்கு மேலே ஒன்பதாவது மாடியில் எவரோ புதியவர்கள் வந்து குடியேறினார்கள். அவர்கள் தங்கள் குடியிருப்பில் 'ஆடல் கலை ஸ்ருடியோ' (Professional Dance Studio) நடத்தி அதனை ஒரு தொழிலாக மாணவர்களுக்கு பயிற்றுவித்து வந்தனர். மேலே இருந்து ஆடல் கலை வகுப்புகள் நடத்தினால், கீழே உள்ள குடியிருப்பு மனையில் வாழ்பவர்களுக்கு அங்கு இருந்து வரும் சத்தம் இடி இடிக்கிற மாதிரி இருக்கும். சுமார் 16 வருடங்கள் தொடர்ச்சியாக அமைதியாக கீழ்மாடியில் குடியிருந்து வந்த இந்தப் பெண்ணுக்கு இது தூக்கமில்லாமல் போகும் அளவுக்கு பாரிய தலைவலியாகவே தொடர்ந்து கொண்டிருந்தது.

ஓகஸ்ட் 2010 ஆம் திகதியில் இந்தப் பிரச்சினை தொடர்பாக அந்தப்பெண் பொலிசாருக்கும், கொண்டோமேனிய முகாமைத்துவ அலுவலகத்திற்கும் முதல் முறைப்பாடு செய்திருந்தார். எதுவித நடவடிக்கையும் முன் எடுக்கப்படவில்லை. 2011 ஆம் ஆண்டு இலையுதிர்காலத்தில் கொண்டோமேனியம் முகாமைத்துவ அலுவலகம், பாதுகாப்பு பிரிவு, நிர்வாகம் ஆகியவற்றுக்கு எழுத்து மூலம் முறைப்பாடுகளை தொடர்ச்சியாக செய்தும் சத்தங்கள், தொல்லைகள் உருவாக்குபவர்களுக்கு எதிராக எதுவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அதேநேரம் எதுவித எச்சரிக்கைக் கடிதமும் வழங்கப்படவில்லை. முறைப்பாட்டு கடிதம் வழங்கியவர்களுக்கு பதில் கடிதமும் வழங்கவில்லை. ஆனால் ஒக்ரோபர் 2011 இல் கொண்டோமேனிய நிர்வாகத்திற்கு பணிபுரியும் வக்கீலிடமிருந்து இந்த சத்தம் தொல்லைகளின் பாதிப்பு எந்தளவுக்கு உள்ளது என்பது எவ்வளவு தூரம் என்பது தங்களினால் ஊகிக்க முடியாதுள்ளது என கடிதம் வந்திருந்தது.

டிசம்பர் 2011 இல் இந்த தொல்லையால் தூக்கமில்லாது உடல் நலம் பாதிக்கப்படுகின்றது என தெரிவித்து அங்கிருந்து இடம் பெயரும் போது வழங்கிய இறுதி கடிதத்திற்கும் எதுவிதமான பதிலும் முகாமைத்துவ அலுவலகத்தி லிருந்து கிடைக்கவில்லை. அந்த கொண்டோமேனியத்திலிருந்து, குறிப்பிட்ட இத்தொல்லை காரணமாக குடியிருப்பு மனை மாறுகின்றேன் என்பதனை எழுத்து மூலம் அறிவித்து வீட்டு வெளியே வந்தவர் தமது முறைப்பாட்டு கடிதங்கள், அதற்கு சரியான தீர்வு காணப்படாது அக்கறையில்லாமல் விட்ட விடயங்கள் யாவற்றினையும் ஆதாரங்களுடன் ஒரு சிவில் வழக்காக கொண்டோமேனியம் கூட்டுத்தாபனத்திற்கு எதிராக நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்திருந்தார்.

'Dyke vs Metropolitan Toronto Condominium Corporation' என்னும் இவரது பிரச்சினை தொடர்பான வழக்கின் தீர்ப்பு கடந்த ஜனவரி மாதம் வழங்கப்பட்டது. அதாவது நகரசபையின் குடியிருக்கும் அயலவர்கள் தொடர்பான சட்ட ஒழுங்குகளை (By law noisy neighborhood) பேணி பாதுகாக்க வேண்டியது கொண்டோமேனியம் கூட்டுத்தாபனத்தின் பொறுப்பு ஆகும். முறைப்பாடுகள் அனுப்பியும் இதனை நிறைவேற்ற தவறியதால் பாதிக்கப்பட்டவருக்கு ஏற்பட்ட மன உளைச்சல்கள், செலவுகளை அடிப்படையாக வைத்து $40,325 + $19,500 டொலர் நட்டஈடு வழங்கப்படல் வேண்டும் என தீர்ப்பு வழங்கப்பட்டது.

குடியிருக்கும் இடங்களில் அயலவர்களுக்கு தொல்லையாக, இடைஞ்சலாக இருக்க கூடாது என்ற நகரசபையின் சட்ட ஒழுங்கு விதிகளை நடைமுறைப்படுத்த தவறினால் அது தண்டிக்கப்பட வேண்டிய ஒரு குற்றம் என்பதற்கு இத்தீர்ப்பு ஒரு எடுத்துக் காட்டாகும். சரி, இன்னொரு சம்பவத்திற்கு வருகிறேன்.

**கூடைப்பந்தாட்டம் விளையாடும் அயல்வீட்டு இளைஞர்களின் தொல்லை!**


25,000 டொலர் நட்டஈடு கோரிய வழக்கு!

இந்த செய்தி கடந்த நவம்பர் 01, 2012 ஆம் திகதியில் 'ரொறொன்ரோ சன்' பத்திரிகையில் வெளிவந்திருந்தது. இதே பிரச்சினை வேறு சில ஊடகங்களிலும் வெளிவந்திருந்தது.

'பீற்றர்பரோ' நகரில் (571, Gilmour St, Peterborough, Ontario) ஆடம்பர வீடுகள் உள்ள பகுதியில் வசிக்கும் 'அன்னி லாங்டன்' (Anne Langdon) என்னும் பெண் ஒருவர் பக்கத்து வீட்டுக்கார இளைஞர் கூடைப்பந்தாட்டம் விளையாடும் கம்பங்களை இரு வீடுகளிற்கும் இடையில் நிறுத்தி (Basket Ball Court) நேரகாலமில்லாது விளையாடிக் கொண்டிருக்கிறார்கள். அது தனது அமைதிக்கும், நிம்மதிக்கும் தொல்லை யாகவிருக்கின்றது என்ற புகாரினை அந்தப் பகுதி மாகாண சுற்றாடல் துறை அத்தியட்சகர் (Provincial Environment Commissioner) மற்றும் பொலிஸ், தீயணைக்கும் பிரிவு மற்றும் நகரசபைக்கும் முறைப்பாடு செய்திருந்தார். அப்படி யிருந்தும் அந்த தொல்லையினை அவர்கள் நிறுத்தவில்லை என்ற காரணத்தினால் அந்த அயலவர்களுக்கு எதிராக $25,000 டொலர் நட்டஈடு கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார். அந்த சிறு நகரத்தில் இருப்பவர்களுக்கு நகரசபை நிர்வாகமே கூடைப்பந்தாட்டம் தொடர்பான விளையாட்டுத் துறையில் விளையாட்டு வீரர்களின் உத்வேகத்தை வளர்த்து விடுவதாகவும் மேலும் அங்கு அயலவர் களும் விளையாடுபவர்கள் பக்கமே நியாயம் பேசுவதாகவும் செய்திகள் தெரிவித்திருந்தன.

ஆனால் இதன் தீர்ப்பு இதுவரை வெளியாகவில்லை. மேற்குறிப்பிட்ட இவ் இரு சம்பவங்களையும் கனடாவின் ஆங்கில

தொடர்ச்சி 10ஆம் பக்கம்

சிவ. பஞ்சலிங்கம் B.Com.,
(Licensed Insurance Broker)
காப்புறுதி சம்பந்தமான ஆலோசனைகளுக்கு:
416.321.0999



**TUTION**

Offering tutorial services in Basic Science, Math, English & Advanced Science - Biology, Chemistry, Anatomy, Physiology, Pharmacology & Pathology.
Rate $10 - 25/Hr.

***I am a University of Toronto Alumni and a Current Medical student in my Clerkship year.***

***Contact: 647.896.4118***



# Sell your home faster and more money

**Delaney & Westney**




6+1 Bedrooms, 3 W Rooms
Finished Bsmt With
3Pc Washroom

**Maryham/Painted Post**




3 Bedrooms, 2 W Rooms
Finished
Basement

**Kingston Road & Salem**




3 Bedrooms, 3 W Rooms
Walk-Out To A Large Wooden
Deck And Patio

**Grand Ridge And Harmony**




4 Bedrooms, 3 W Rooms
Eating Area
With W/O To Yard

**Bur Oak/Highway 48**




3 Bedrooms, 3 W Rooms
Interlock Drwy
Built-In Garage

**Main St. / 9th Line**




4 Bedrooms, 3 W Rooms
2nd Floor Laundry
Service Entrance From
Garage

**9th Line/South Of 16th**




3+1 Bedrooms, 3 W Rooms
Freshly Painted Through Out,
Double Car Garage

**Mccowan/16th Ave**




3 Bedrooms, 3 W Rooms
Fantastic Location,
Interlock Walkway

**Ravenshoe Rd /Hwy48**




Excellent Investment
Property Is 123 Acres,

**14th &9th**




4 Bedrooms, 4 W Rooms
Open Concept Main Flr.
Eat-In-Kitch

**W Of 9th Line / Bur Oak**




5 Bedrooms, 3 W Rooms
2860 Sq Ft. Main Floor
9'Ceiling & Office

**Sheppard/Port Union**





4+1 Bedrooms, 4 W Rooms
Large Breakfast Area With
Walk Out To Large Deck

**9th Line And 14th Avenue**




4 Bedrooms, 4 W Rooms
Upgraded Kitchen With
Walk-Out To Deck

**Steeles & Markham 'Staines'**




6+1 Bedrooms, 5 W Rooms
Master Bedroom W/Gas
Fireplace And 5 Pc Ensuite

**Kingston/Meadowvale**




5 Bedrooms, 4 W Rooms
Oak Staircase W/Iron Pickets,
Granite Counters In All Baths

**When you list your home with Mike,you receive these Guarantees.**

Your home advertised 24 hours a day until it is sold
Your home advertised in full color prints ads every week until it is sold
Our team of specialists for the same price as hiring a single agent

**Your home sold in 30 days or we buy it**



RE/MAX #1

**Elaguppillai Srinathan (Mike) B.Sc**

Sales Representative/Builder

**Direct 416 - 276-1225**

Email: esrinathan@yahoo.com

**Ph1-7800 Woodbine Ave**
**Markham, ON L3R 2N7**
**Office: 905-470-9800**
**Fax: 905-470-7770**

KZG 647-200-5833

I can also assist you Mortgage financing, Home Inspection Real Estate lawyer

# அயல் வீட்டுகாரரின்...

08ஆம் பக்கத்தொடர்ச்சி

ஊடகங்களில் வெளிவந்த செய்திகள். உதாரணத்திற்காக இங்கு குறிப்பிட்டேன். இனி விடயத்திற்கு வருவோம்.

அயல்வீட்டுகாரர்களின் சத்தங்கள் கும்மாளங்கள் தொல்லையாகவிருந்தால் அந்த தொல்லையிலிருந்து உங்களை கனடாவின் சட்டங்கள் எப்படி பாதுகாக்கின்றன?

கனடாவின் ஒவ்வொரு நகரசபையின் சட்டங்களிலும் (City by laws) அயலவர்ளுக்கு சத்தங்களை உருவாக்கி தொல்லையாக இருக்க கூடாது என்பதனை உறுதியாக வலியுறுத்துகின்றது. உதாரணமாக ரொறொன்ரோ நகரசபையின் சட்ட ஒழுங்கு விதி பிரிவு 5 - 2 இல் பின்வருமாறு ஆங்கிலத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

No person shall make, cause or permit noise or vibration, at any time which is likely to disturb the quiet, peace, rest, enjoyment, comfort or convenience of the inhabitants of the city'.

ஒருவரும் சத்தங்கள், குழப்பங்களை உருவாக்கி ரொறொன்ரோ நகரத்தில் குடியிருப்புகளில் இருப்பவர்கள் எவருக்கும் அவர்கள் வாழ்வின் அமைதியினை, சந்தோஷத்தினை குழப்பக் கூடாது' என சுருக்கமாக தமிழில் குறிப்பிடலாம்.

ரொறொன்ரோ நகரில் குடியிருப்பவர்கள் விடயங்களில் எழும் இதேமாதிரியான பிரச்சினைகளுக்கு நகரசபையின் சட்டம் ஒரு கட்டுப்பாட்டினை விதித்துள்ளது. உதாரணமாக

- அயலவர்கள் வீடு, வீட்டு வளவுகளுக்குள் இருந்து வரும் சத்தமான பாடல் ஒலிகள்
- புல்வெட்டும் இயந்திரங்களின் சத்தங்கள் (Lawn mowers sound)



- குப்பை கூட்டும் இயந்திரங்களின் சத்தங்கள் (Leaf mowers sound)
- வெளிப்புற கொண்டாட்டங்களில் வரும் அமர்களங்கள் (Outside barbecue party celebration sounds)

போன்றவை யாவும் ஒரு குறிப்பிட்ட நேரத்துடன் நிறுத்திவிட வேண்டும் என்பது நகர சபைகளின் சட்ட விதிகளில் வலியுறுத்தப்படுகின்றது.

உதாரணமாக அயலவர் வீட்டு வெளிப்புற கொண்டாட்டங்கள், வீடுகளுக்குள் இருந்து வரும் சத்தமான பாடல் இசைகள் யாவும் இரவு 11 மணியிலிருந்து மறுநாள் காலை 7 மணிவரை தடைசெய்யப்பட்டுள்ளது. இது ஞாயிற்றுக்கிழமையிலும் மற்றும் அரச லீவு நாட்களிலும் காலை 9 மணிவரை நீடிக்கப்பட்டுள்ளது.

இதே மாதிரி புல்வெட்டும் இயந்திரங்களின் சத்தங்கள், குப்பைகூட்டும் இயந்திரங்களின் சத்தங்கள் இரவு 9 மணியிலிருந்து மறுநாள் காலை 7 மணிவரை தடையாக இருக்க வேண்டும் என்ற நிபந்தனையில் ஞாயிறு மற்றும் அரச லீவு நாட்களில் காலை 9 மணி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

(உதாரணத்திற்காக ரொறொன்ரோ நகரசபையின் இவை தொடர்பான சட்ட ஒழுங்கு விதிகளை இங்கு குறிப்பிட்டுள்ளேன். இதே மாதிரி சிற்சில மாற்றங்களுடன் ஏனைய நகரசபைகளின் சட்டவிதிகளிலும் இது குறிப்பிடப்பட்டுள்ளது.

குடியிருப்பு மனைகளில் அயலவர்களிடமிருந்து இத்தகைய தொல்லைகள் உருவாகினால் அவற்றினை எப்படி தீர்க்க வேண்டும் என்பதனையும் நகர சபைகளின் இணையத்தளங்களில் குறிப்பிட்டுள்ளனர்.

1. முதலில் தொல்லைகள் தரும் அயலவருடன் சமாதானமாக பேசி தீர்க்க முயலுங்கள். இல்லையேல் இதேமாதிரி பாதிப்பினை எதிர்கொள்ளும் ஏனைய அயலவரினையும் சேர்த்து சமாதானமாக தீர்க்க முயலுங்கள்.

2. அவற்றுக்கும் அவர்கள் உடன்பட்டு வரவில்லையானால் அவசரமற்ற பொலிஸ் பிரிவினருக்கு (Non emergency police) அழைத்து முறைப்பாடு செய்து, அவர்களினூடாக எச்சரிக்கை செய்து அவை தொடர்பான ஆவணங்களை கவனமாக வைத்திருங்கள். (இத்தகைய முறைப்பாடுகளுக்கு அவசர பொலிஸ் இலக்கமான 911 க்கு அழைத்து அவர்களின் தொழிலில் இடைஞ்சல் உருவாக்ககூடாது.)

3. முதல் இரண்டு அணுகு முறையிலும் தொல்லைகள் நிறுத்தப்படா விட்டால், இறுதியாக அழைக்க வேண்டியது (City nuisance abatement office) (நகரின் தொல்லைகளை தணிக்கும் அலுவலகம்) என்னும் இடத்திற்கு ஆகும்.

ரொறொன்ரோ நகரத்திற்கு 311 என்னும் இலக்கத்திற்கு அழைக்கலாம். இதே மாதிரி ஏனைய நகரசபைகளிலும் இதேபோன்று அலுவலகம் பொதுமக்களுக்காக செயல்பட்டுக் கொண்டிருக்கும்.

நகரசபை கண்காணிப்பாளர் (City by law officer) நேரடியாக வந்து விசாரிப்பார். எச்சரிக்கை கடிதம் வழங்குவார். தண்டனை ரிக்கற்றும் வழங்குவார். தொடர்ந்தும் தொல்லைகளுக்கு விடுதலை கிடைக்காவிட்டால், மேல் குறிப்பிட்ட வழிகளில் அணுகிய சகல ஆதாரங்களுடன் ஏற்கனவே குறிப்பிட்ட மாதிரியான நட்டஈடு கோரும் சிவில் வழக்கின் மூலம் அணுகுவதே கடைசி வழியாகும்.

கடந்த சில வருடங்களில் நூற்றுக்கு மேற்பட்ட இதேமாதிரியான வழக்குகள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது என தகவல்கள் தெரிவிக்கின்றன.


MOHAN
HOMEOPATHIC CLINIC
& MASSAGE CLINIC

- கழுத்து, முதுகு நோவு
- வாகன விபத்து
- மன அழுத்தம்
- விளையாட்டுக் காயங்கள்
- தலையிடி, தலைவருத்தும்

போன்ற நோய்களிற்கு அழையுங்கள் டாக்டர் ஜே. மோகன்



Dr. J. Mohan
D.H.M.S., N.H.C.

WE OFFER CONSULTATION
REGARDING ALL HEALTH PROBLEMS INCLUDING:

- STRESS
- SKIN PROBLEM
- RESPIRATORY PROBLEMS
- DIGESTIVE PROBLEMS
- VARICOSE VEINS
- BACK PROBLEM /NECK PROBLEM
- TENNIS ELBOW PROBLEM
- TREAT WITH MASSAGE THERAP
- ALLERGIES
- SEXUAL PROBLEMS
- SEXUAL PROBLEMS
- CHOLESTEROL
- TUMOR
- FOOT PROBLEM

HOMEOPATHIC TREATMENT ABOUT FOLLOWING

| | | | |
|---|---|---|---|
| Cough | Tonsillitis | Migraines | Prostatitis |
| Flu | Gout | Hair Loss | Obesity |
| Depression | Arthritis | Diabetes | Hemorrhoids |
| Anxiety | P.M.S | Cystitis | Stumatitis |
| Asthma | Leucorrhea | Cancer | Colitis |

Also other Acute & Chronic Problems
HOMEOPATHIC PRACTITIONER

TEL: 416-298-7537/416-291-3022

5200 Finch Ave, East Suite 210
At Middle Field, Scarborough, M1S 4Z4


# அடமானக்கடன் பெறும்...

07ஆம் பக்கத்தொடர்ச்சி

இம்மாற்றம் குறிப்பிடக் கூடியளவிற்கு பெரியளவின தாக இல்லை. எனினும் மக்களிடம் சிறிய பதட்டத்தை ஏற்படுத்தி யுள்ளது. பொருளாதார எதிர்வு கூறுபவர்களின் அறிக்கைகளின் பிரகாரம், இந்த அதிகரிப்பு தற்காலிகமானதாகவே இருக்கலாம் எனத் தெரிகின்றது. எது எவ்வாறாயினும் இப்பொழுதுள்ள வட்டிவீதம் ஒப்பீட்டு ரீதியில் மிகவும் குறைவானதே.



மத்தியவங்கியின் வட்டிவீதம் - 1%

முதன்மை வட்டிவீதம் (Prime Rate) - 3%

**வாடகைக்கு கிடைக்க கூடிய (Vacancy Rate) வீடு /மனைகள்**

ரொறொன்ரோ - 1.4%


யோர்க் (York) பகுதி - 0.7%


INNSYS
CONNECT YOUR BUSINESS TO THE WORLD
August 3rd & 4th
Mega Summer Event
HIGH-SPEED INTERNET
Unlimited Download
From
$24.99*
HOME PHONE
All Features FREE
$9.99*
SRI LANKA UNLIMITED TALK
1 Month FREE*
Limited Time Offer Dont Miss it!
Plus Lot More Exciting! Offers & Discounts
Absolutely NO CONTRACT
INTERNET : Modem purchase and installation Fee may required. Offer available where technology permits. Yearly Payment Required
PHONE: Modem purchase and same number transfer fee may required. 911 fee apply. Offer available where technology permits. Yearly Payment Required
SRILANKA UNLIMITED TALK : Activation fee and deposit required. Local call charges apply. Offer available where technology permits
InnSys reserves the right to withdraw or refuse to provide service and/or offer at promo price. InnSys not responsible for any printing errors
Sheppard Ave E
McCowan Rd
Brimley RD
www.innsys.ca
416-8000-797
4500 Sheppard Ave E. Suite 111, Toronto, ON M1S 3R6


# காலத்தோடு வளரும் கணினிகள் -26

அன்பான வாசகர்களே!

இயக்க அமைப்பு மென்பொருள் (Disk Operating System) உடன் வருகின்ற துணைக்கருவிகளில் காணப்படும் வேட்பாட் (WordPad) என்ற மென்பொருள் நோட்பாட் (Notepad) இனைவிட வசதி கூடியதாக உள்ளது. டெஸ்க்ரொப்பின் (Desktop) அடியில் இடதுபக்க மூலையில் காணப்படும் Start பட்டனை கிளிக் செய்து All Programs தெரிவை கிளிக் செய்த பின்பு தோன்றும் பட்டியலில் Accessories என்பதை கிளிக் செய்த பின்பு தோன்றும் பட்டியலில் Wordpad இனைத் தெரிவு செய்வதன் மூலம் வேட்பாட் என்ற சிறிய மென்பொருளைப் பயன்படுத்திக் கொள்ளலாம். இந்த மென்பொருள் மூலம் குறிப்புக்களைத் தட்டச்சு செய்து கோப்புக்களாக (Files) கணினியில் சேமிக்கவும், இவற்றை அச்சுப்பதிவு (Printing) செய்யவும் முடியும். இந்த மென்பொருளில் கோப்புக்கள் .txt நீட்டிப்புடன் (extension) text format ஆகச் சேமிக்கப்படுவதால் நிரலர்கள் (Programmers) இந்த மென்பொருளையும் அதிகம் பாவிப்பதுண்டு. எந்தவிதமான சொற்பரிமாற்ற மென்பொருள் பற்றிய அறிவும் இன்றி சிறிய குறிப்புக்களைத் தட்டச்சு செய்து வைத்துக்கொள்வதற்கு இந்த மென்பொருள் உதவியாக இருக்கும். உங்கள் கணினியில் மைக்கிரோ சொவ்ற் வேட் (Microsoft Word) போன்ற மென்பொருட்கள் இல்லாதவிடத்து நோட் பாட்டினைப் (Notepad) போலாக இந்தச் சிறிய மென்பொருளையும் பாவித்துக் கொள்ளலாம். நோட் பாட்டில் காணப்படும் எல்லா வசதிகளும் இங்கே காணப்படுவ தோடு சில வசதிகள் மேலதிகமாகவும் உள்ளன. வேட்பாட்டில் ரூல்ஸ் பார்; (Tools Bar) உள்ளது. இது நோட்பாட்டில் இல்லை. புலட்ஸ் (Bullets), அலைன்மன்ற் (Alignment) போன்றவை வேட் பாட்டில் உள்ளது. இந்த வசதிகளும் நோட் பாட்டில் கிடையாது. இந்த மென்பொருளில் கோப்புக்களை வெவ்வேறு நீட்டிப்புடன் சேமித்து வைக்க முடியும். எனவே இந்த மென்பொருளைப் பயன்படுத்தி வரையறுக்கப்பட்டளவு சொற்பரிமாற்ற வேலைகளைச் செய்ய முடியும். ஆனால் மைக்கிரோ சொவ்ற் வேட் (Microsoft Word) மென்பொருளில் மேற்குறிப்பிட்ட மென்பொருட்களைவிட எவ்வளவோ வசதிகள் அதிகமாக உள்ளன. சொற்களைத் தட்டச்சு செய்து கொள்வது சொற்பரிமாற்ற வேலைகளில் முக்கிய மானது. தட்டச்சு செய்வதற்கு அடிப்படையில் விசைப்பலகையில் உள்ள பட்டன்களைப் பற்றி அறிந்து கொள்ள வேண்டும். இதைப் பற்றி இந்தத் தொடர் கட்டுரையில் விரிவாக ஏற்கனவே கூறப்பட்டுள்ளது. விரைவாகத் தட்டச்சு செய்து கொள்வதற்குப் பயிற்சி அவசியம். தட்டச்சுப் பயிற்சிக்கென Typing tutor, Mavis Beacon போன்ற பல மென்பொருட்கள் உள்ளன. தட்டச்சுப் பயிற்சிகளை பல இணையத்தளங்கள் இலவசமாக வழங்குகின்றன. இவற்றைப் பயன்படுத்தியும் தட்டச்சுப் பயிற்சியைப் பெற்றுக் கொள்ளலாம்.



இப்பொழுது அதிகளவு கணினிப் பயனர்களால் பயன்படுத்தப்படும் மைக்கிரோ சொவ்ற் வேட் என்ற மென்பொருளைப் பயன்படுத்துவதற்குரிய சில செயன்முறைக் குறிப்புக்களைக் கவனிப்போம். டெஸ்க்ரொப்பின் (Desktop) அடியில் இடதுபக்க மூலையில் காணப்படும் Start பட்டனை கிளிக் செய்து All Programs தெரிவை கிளிக் செய்த பின்பு தோன்றும் பட்டியலில் Microsoft Office என்பதை கிளிக் செய்த பின்பு தோன்றும் பட்டியலில் Microsoft Word இனைத் தெரிவு செய்வதன் மூலம் மைக்கிரோ சொவ்ற் வேட் (Microsoft Word) என்ற சொற்பரிமாற்ற மென் பொருளைப் (Wordprocessing Software) பயன்படுத்திக் கொள்ளலாம். Microsoft Office மென்பொருளில் காணப்படும் பல்வேறு மென்பொருட்களில் ஒன்றாக மைக்கிரோ சொவ்ற் வேட் உள்ளது. வழமைபோல் இந்த மென்பொருளிலும் காலத்திற்கு காலம் புதிய வசதிகளுடன் Microsoft Office 2003, 2007, 2010, 2013 என்றவாறு பல பெயர்களில் வந்து கொண்டிருக்கும். மைக்கிரோ சொவ்ற் வேட் 2007ற்குரிய செயன்முறைக் குறிப்புக்களை இங்கே தருகின்றேன். இதற்கு முந்திய அல்லது பிந்திய ஆண்டுகளில் வெளிவந்த மென்பொருட்களில் சிறு வேறுபாடு காணப்படலாம். ஆனாலும் அதிகமான வேறுபாடு இருக்காது.



மைக்கிரோ சொவ்ற் வேட் டெஸ்க் ரொப்பில் தோன்றியதும் தட்டச்சு செய்து கொள்ள முடியும். மைக்கிரோ சொவ்ற் வேட் screen இல் வலது பக்க மூலையில் File Minimize, File Maximize, File Close Buttons காணப்படும். ஒன்றிற்கு மேற்பட்ட கோப்புக்களில் வேலை செய்யும் பொழுது பயன்படுத்தாத கோப்புக்களை Minimize செய்து மூடாமல் வைத்துக் கொள்ளலாம். இந்தக் காலத்துக் கணினி களில் ஒரே நேரத்தில் பல்வேறு வேலைகளைச் செய்யக் கூடிய வசதி உள்ளது. இதனை மல்ரி ராஸ்க் (Multi Task) என்பர். ஒரு இணையத்தளத்தைப் பார்த்து விட்டு அதனை குறுக்கி (Minimize) விட்டு வேறு ஒரு மென்பொருளைப் பயன்படுத்த முடியும். ஒரே நேரத்தில் இரண்டு மென்பொருட்களைத் திறந்தபடியே வைத்திருக்கவும் முடியும்.

மைக்கிரோ சொவ்ற் வேட் screen இல் வலது பக்க மூலையில் undo button காணப்படும். தற்செயலாக மைக்கிரோ சொவ்ற் வேட் இல் ஏதேனும் பிழையாகச் செய்து விட்டால் undo button மூலம் விட்ட பிழையை நீக்கி (Cancellation) முன்னைய நிலைக்குச் செல்லலாம். மைக்கிரோ சொவ்ற் வேட் screen இன் இரண்டாவது வரிசையில் பைல் மெனு (File menu) காணப்படும். Home, Insert, Page Layout, References, Mailings, Review, View, Add-Ins, Acrobat என்ற தெரிவுகளைக் காணலாம். ஒவ்வொரு தெரிவையும் கிளிக் செய்யும்பொழுது அந்தந்த மெனுவிற்குரிய (menu) கட்டளைகளாகவும் (Commands), Tools Bar options ளாகவும் காணப்படும். மைக்கிரோ சொவ்ற் வேட் screen அடியில் status bar காணப்படும். வலது பக்கத்தில் மேலே கீழே நகர்த்திக் கொள்வதற்கு ஏதுவாக Vertical Scroll Bar காணப்படும்.

என் அன்புக்குரிய வாசகர்களே! இன்றும் வழமைபோல் கணினி பற்றிய அறிவை வளம்படுத்தும் நோக்கில் சில விடயங்களைப் பற்றிக் கவனித்தோம். தொடர்ந்து வாசியுங்கள். உங்கள் எண்ணங்களைத் தெரியப்படுத்துங்கள். அடுத்த இதழில் மீண்டும் சந்திப்போம். நன்றி. வணக்கம். தொடரும்...



- அகணி -
authorakani@yahoo.com

Summer TUTORING
"By Qualified & Experienced Tutors"
KEEN TUTORING CENTRE
➢ MATH, SCIENCE
➢ CHEMISTRY, PHYSICS, BIOLOGY
➢ Adv. FUNCTIONS, CALCULUS & VECTORS
➢ UNIVERSITY 1st & 2nd year
✓Get a head start for High Scoring
Call : 647 341 3975, 647 869 3974

# கல்வி ஒரு உணவு

## ஓடும் நீர் உறைவதில்லை 170

பெற்றோரின் மிகப் பெரிய கனவுகளில் குழந்தைகளின் கல்வியும் ஒன்று. ஒரு குழந்தையின் உடல் நலத்தில் பெற்றோர்கள் செலுத்தும் அக்கறைக்கு ஈடாக அக் குழந்தையின் கல்வியிலும் அக்கறை செலுத்துவது இயல்பானது. கருவுற்றதில் இருந்து குழந்தையின் நலத்துக்கான தாயின் கொடுப்பனவுகள் அளப்பரியன. தனது நலனே குழந்தையின் நலன் என்ற தாயின் நிலைப்பாடும் அதற்கான தந்தையின் ஒத்துழைப்பும் ஒரு குழந்தையின் உடல் நலம் சார்ந்த முக்கியமான விடயங்களாக அமைகின்றன. மருத்துவ உலகில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் தாயின் வயிற்றில் இருக்கும் போதே ஒரு குழந்தையின் உடல் நலம் எவ்வாறு உள்ளது என்பதை மிகவும் துல்லியமாகக் கவனித்து அதற்கு ஏற்றவாறு தாயின் வாழ்க்கை முறையில், நாளாந்த நடவடிக்கைகளில் மாற்றத்தை ஏற்படுத்த முடிகின்றது. இந்த மாற்றங்களின் மூலம் குழந்தையின் நலம் தொடர்ச்சியாகக் கண்காணிக்கப்பட்டு நலம் மிக்க குழந்தை ஒன்றை இந்த உலகுக்குத் தர முடிகின்றது. வைத்தியம் சார்ந்த நவீன தொழில் நுட்பங்களுக்கு வாய்ப்பில்லாத கிராமப் புறங்களில் தாயின் நாடி பார்த்து நலம் உணரும் நாட்டு வைத்தியர்கள் சிறந்த வழிகாட்டிகளாக எம்மை நெறிப்படுத்துவதன் மூலம் உடல் நலமான குழந்தைகளை உலகத்திற்கு தரமுடிகிறது.

இப்போது குழந்தை உங்கள் கைகளில். இதயம் துடிக்கிறது. இமைகள் மிக மெதுவாகத் திறந்து மூடுகின்றன. இடையிடையே கைகளும் கால்களும் அசைகின்றன. திடீரெனக் குழந்தை அழுகின்றது. ஏதோ ஒரு அசௌகரியம். உடனடியாக அக்குழந்தையின் அசௌகரியத்தைப் போக்குவதற்கான அதிரடி நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. குழந்தைக்குப் பாலூட்டுவது எப்படி என்று வைத்தியசாலையில் பயிற்சி. நகரங்களில் வாழும் பெற்றோர்களில் பெரும்பாலானவர்கள் இந்தப் பயிற்சியின் பின்னரும் புட்டிப்பால் ஊட்டுபவர்களாக மாறிவிடுகிறார்கள். அட்டவணைப்படுத்தப்பட்ட நேர ஒழுங்கில் குழந்தைக்குப் புட்டிப்பால் கொடுக்கப்படும். கொடுக்கப்படும் புட்டிப்பால் குழந்தைக்கு ஒவ்வாததாக இருப்பின் பொருத்தமான புட்டிப்பால் அறியப்படும் வரை பல வகையான புட்டிப்பால் கொடுக்கப்பட்டுப் பரிசீலிக்கப்படும். இந்தத் தர்ம சங்கடமான நிலை தாய்ப்பால் உண்ணும் குழந்தைக்கு ஏற்படுவது மிக அரிது. பாலூட்டும் தாய் குழந்தையின் நலன் கருதி தனது உணவைக் குழந்தைக்கான உணவாக உண்பது தான் அதற்கான காரணமாகும்.

கல்வி என்று ஆரம்பித்துவிட்டு குழந்தைகளின் உடல் நலம் பற்றியும் உணவுபற்றியும் கூறுகிறேனே என்று குழம்பி விடாதீர்கள். குழந்தைகளின் உணவு பற்றி இன்னும் சிறு தேவைப்படுகிறது. இப்போது உங்கள் குழந்தை திரவ (பால்) உணவில் இருந்து சிறிது சிறிதாக மிகவும் மென்மையான உணவுக்கு மாறுகிறது. இந்த மாற்றம் குழந்தைக்கு ஒரு உற்சாகத்தையும் குதூகலத்தையும் கொடுக்கிறது. கொடுக்கப்படும் ஒவ்வொரு வகையான



உணவின் சுவையையும் பதிவு செய்கிறது. இதுவரையில் பதிவு செய்துள்ள அதி கூடிய சுவைக்குச் சமமான அல்லது உயர்வான சுவையுள்ள உணவை ஏற்றுகொள்கிறது. சுவை குறைந்தவற்றை மறுக்கிறது. மறுப்பவற்றை மீண்டும் முயற்சி செய்து பார்ப்போம். குழந்தை மீண்டும் மீண்டும் மறுக்கும். இதுவரை கொடுத்த உணவில் எந்த உணவை குழந்தை மகிழ்வுடன் உள்வாங்கியது என்பது பற்றி ஒரு ஆய்வு செய்து அதைத் தயாரித்துக் கொடுப்போம். விருப்பத்துடன் சாப்பிடுகிறது என்பதில் எமக்கு ஒரு மகிழ்ச்சி. "போதும்" என்ற சைகையைக் குழந்தை வெளிப்படுத்தும். அதற்கு மேல் ஊட்டினால் வாந்தி எடுத்துவிடும் என்று அச்சம் கொண்டு நிறுத்தி விடுவோம். குழந்தைகளின் ஆரம்பக் கல்வி விடயத்திலும் இவ்வாறே நாம் நடந்துகொள்ள வேண்டும். நலமான உடலுக்கு ஊட்டச்சத்து மிக்க உணவு அடிப்படையாவது போல் தரமான அறிவுக்குக் கல்வி அடிப்படை. ஆனால் அது ஒரு குழந்தையின் உணவு மாற்றம் போல் படிப்படியாக மாற்றப் பாடல் வேண்டும். அதாவது, திரவத்தில் இருந்து மிகவும் மென்மையான திண்மமாக்கப்பட்டு படிப்படியாக உறுதியாக்கப்படவேண்டும். ஆனால் நடைமுறையில், கல்வியைப் பொறுத்த வரை பெற்றோர்கள் திரவத்தில் இருந்து நேரடியாக கடுமையான திண் மத்தைக் குழந்தைகளுக்கு திணிக்கிறார்கள். மண் விளையாட்டில் மகிழ்ந்து வாழ்க்கையை இரசிக்க வேண்டிய வயதில் மண்டியிட வைத்து மனப்பாடம் செய்யச் சொல்லுகிறார் கள். பாடசாலைக்குப் போவதற்கு மூன்று ஆண்டுகள் இருந்தும் கூட, வீட்டில் இருந்து கொண்டே இரண்டாம் ஆண்டுப் பாடங்களை மனப்பாடம் செய்து விடுகிறது குழந்தை. "என்ர பிள்ளைக்கு ரெண்டு வயது தான் ஆனால் பாருங்கோ இருபது வரைக்கும் எண்ணுவான்" என்று சொல்லிவிட்டு "குஞ்சு இருபது வரை 'சொல்லப்பு' என்பார்கள். அந்தக் குழந்தை "ஒன்னு, ரென்னு, மூணு" என்று தொடங்க தமது பிள்ளை சந்திரனில் கால் வைத்துவிட்ட மாதிரி ஒரு உணர்ச்சிப் பரபரப்பு பெற்றோருக்கு. மனிதக் குழந்தையாகப் பிறந்ததை சொன்னதைச் சொல்லும் கிளியாக மாற்றுவதில் அப்படி என்ன பெருமை?

இப்போது உங்கள் குடும்ப எண்ணிக்கை ஆணும் பெண்ணுமாக நான்கு குழந்தைகள் உட்பட ஆறு பேர் என எடுத்துக் கொள்வோம். இந்த நான்கு குழந்தைகளும் உடல் நலத்துக்கு ஊட்டச் சத்துள்ள உணவு அவசியம் என்பதை உணர்ந்தவர் கள். நீங்கள் ஒவ்வொரு நாளும் காலை, மதியம், இரவு ஆகிய மூன்று வேளைகளும் ஊட்டச்சத்து நிறைந்த ஒரேவகையான உணவைத் தயாரிப்பதாக எடுத்துக் கொள்வோம். இந்த நான்கு குழந்தைகளும் நீங்கள் தயாரிக்கும் உணவைத்தான் உண்ண வேண்டி இருப்பதாகவும் வீட்டைத் தவிர வேறு எங்கும் உணவு உண்பதற்கான வாய்ப்போ அல்லது அனுமதியோ கிடையாது என்றும் எடுத்துக்கொள்வோம். நீங்கள் சமைத்த உணவை நான்கு குழந்தைகளும் ஒரே அளவில் ஒரே அளவான ஆர்வத்துடன் ஒவ்வொரு நாளும் உண்பார்கள் என எதிர்பார்க்க முடியுமா? ஒவ்வொரு குழந்தையும் வெவ்வேறு அளவில் ஏற்றுக் கொள்வார்கள். ஒரு குழந்தைக்கு அந்த உணவு ஒவ்வொருமுறையும் சுவையாக இருக்கும். மிகவும் இரசித்துச் சாப்பிடும். அந்தக் குழந்தையின் உடல் மேலதிகமாக உணவைக் கேட்டாலும் கிடைக்காது. இரண்டாவது குழந்தையின் உடல் ஒரு குறிபிட்ட அளவைத் தான் ஏற்றுக்கொள்ளும். ஆனாலும் முழுவதையும் உண்ணவேண்டும் என்ற மறைமுக வற்புறுத்தல் இருக்கும். உண்பதும் சிந்துவதுமாக உணவு நேரத்தைப் பயன்படுத்தும். மூன்றாவது குழந்தை தனது உணவை பந்துபோல் உருண்டையாக்கி விளையாடும். மற்றைய குழந்தை உணவுக்கான நேரத்தை இயன்ற வரை தவிர்த்துக்கொள்ளும். இவ்வாறான சூழல் உங்கள் குடும்பத்தில் இருந்தால் நீங்கள் என்ன செய்வீர்கள்? குழந்தைகளின் நலன் கருதி அவர்களுக்கு விருப்பமான ஊட்டச்சத்து நிறைந்த உணவைத் தயாரித்துக் கொடுப்பீர்கள் அல்லது அவ்வாறான உணவை வேறு இடத்தில் உண்பதற்கான அனுமதியைக் கொடுப்பீர்கள் என்று உறுதியாகக் கூறலாம்.

இன்றைய பாடசாலைக் கல்வி முறையின் குறைபாடே இது தான். ஒரு குழு பாடத் திட்டங்களை உருவாக்கும். பாடசாலைகள் அவற்றை ஆசிரியர் ஊடாக மாணவர் களுக்குக் கொடுக்கும். அந்தப் பாடத் திட்டத்தை மாணவர்கள் ஏற்றுத்தான் ஆக வேண்டும். திறன் மிக்கவர்கள் மட்டுப்படுத்தப் படுகிறார்கள். திறமை குறைந்தவர்கள் வலுக்கட்டாயமாக அழுத்தங்களுக்கு உள்ளாகிறார்கள். இன்னொரு வகையில் கூறுவதாயின் ஒரே அளவான சட்டை தான் இன்றைய பாடசாலைக் கல்வி. சிலருக்கு பொருத்தமாக இருக்கிறது. சிலருக்கு மிகவும் சிறியதாக இருக்கிறது. வேறு சிலருக்கு மிகவும் பெரிதாக இருக்கிறது. பெரும்பாலான மாணவர்கள் அதற்குள்ளேயே காணாமல் போய் விடுகிறார்கள். பாடசாலைக் கல்வி முறை பெற்றோரதும் மாணவர்களதும் கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்டது. ஆனால் பாடசாலைக் கல்விக்கு அப்பால் ஒவ்வொரு குழந்தையும் தனக்குப் பொருத்தமான

**KG Master:** --
www.kgmaster.com
www.facebook.com
kgmaster.lifecoach

துறையைத் தெரிவு செய்யும் வாய்ப்பு உண்டு. குழந்தையின் உடல் நலன் கருதி உணவைத் தெரிவு செய்வதற்கு வாய்ப்பைக் கொடுப்பதுபோல் அவர்களது வாழ்க்கை நலன் கருதி அவர்களது தகுதிக்கு ஏற்ற துறையைத் தெரிவுசெய்ய ஒத்துழையுங்கள். உங்கள் குழந்தையின் நலனில் கல்வியும் ஒரு உணவுதான்.

அன்பார்ந்த விளம்பரம் வாசகர்களுக்கு: வாழ்வியல் சார்ந்த எனது ஆக்கங்கள் எழுத்து வடிவில் 'விளம்பரம்' பத்திரிகை யிலும் ஒலிவடிவில் கீதவாணி வானொலியிலும் இடம்பெறுகின்றன. இயலுமான வரை இவற்றை உங்கள் உற்றார், உறவினர், நண்பர்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள். - நன்றியுடன் KG Master

**அமைதியின் குரல் - Words of Peace**

அன்பு, அமைதி, ஆனந்தம், கடவுள் எனப் பல பெயர் கொண்டு அழைத்தாலும் விடயம் ஒன்றுதான். நீங்கள் வெளியே தேடும் ஆனந்தமும் நிம்மதியும் உங்களின் உள்ளேதான் உள்ளது. தேடுங்கள். எல்லா இடங்களிலும் தேடுங்கள். கிடைக்கவில்லை என்றால் என்னிடம் வாருங்கள். அதனை நீங்கள் உங்கள் வாழ்வில் அனுபவிப்பதற்கு என்னால் உதவிசெய்ய முடியும். - மஹராஜி

**1-877-707-3221 / தமிழில் - 416.431.5000**

**- MAHARAJI -**

**மஹராஜியின் உரைகள்**



**On DVD**

இலவச DVDக்கு அழையுங்கள்
(416) 431-5000
1 877 707 3221

**On TV**


Saturdays at 11:00 am
Rogers Cable Channel - 20
Bell Express vu Channel - 219

# ஆர்தரைடிஸ் குணமாக சித்த யோகா மருத்துவம்

## நீண்டநாள் வாழ நினைத்ததை அடைய நோய் தடுக்கும் வழிமுறைகள்

### *NATURAL YOGA TREATMENT FOR ARTHRITIS*

பெரும்பாலான மனிதர்களைப் பாதித்து வரும் நோய்களில் கீல்வாயு என்னும் ஆதரைடிஸ் நோயும் முக்கியமான ஒன்றாகும். இது பல நிலைகளில் தோற்றமளிக்கிறது.




ஆங்கில மருந்துகளை உட்கொள்ளும் போது நோயாளிகளின் தசைகளும் மூட்டுகளும் இறுக்கம் அடைவதை அவர்களால் உணர முடிகிறது. பின்பு அவை பலயீனமடைந்து வலிகள் தோன்றுவது இயற்கையே. இன்றைய வாழ்க்கை முறையில் தேகப்பயிற்சிக்கு இடமில்லை. தசைகள் சுருங்கி விரிய வாய்ப்பில்லை. முக்கியமான சுவாச உறுப்புகள் கூடபூரணமாக விரிந்து சுருங்காமல் அரைகுறை மூச்சாகவே விடுவதால் இரத்தம் சரிவர சுத்திகரிக்கப் படாது மாசுபடுகின்றது. இவை தான் ஆதரைடிஸ் தோன்ற வழிவகுக்கிறது.

இந்த நோய் முதலில் ஏதேனும் ஒன்று அல்லது இரண்டு மூட்டுகளில் அல்லது தசை கோர்வையில் வலியுடன் ஆரம்பிக்கின்றது. பின் அந்த மூட்டுகளும் தசைகளும் இறுகி அவற்றை செயலிழக்கச் செய்கின்றது. இதிலிருந்து விடுபட ஆங்கில மருந்துகள் உட்கொள்ளும் போது நோய் ஓரளவு நீங்குவது போல் உணரலாம். பின்பு மருந்தினை குறைக்கும் போதோ அல்லது நிறுத்தும் போதோ திரும்பவும் நோயின் தன்மை தீவிரமடைவதை உணரலாம். இந்த நேரம் நோயானது தம்மைவிட்டு அகலாது என்ற தாழ்வு மனப்பான்மை நோயாளிக்கு ஏற்படுகிறது. இவ்வாறான



மன நிலைதான் மற்றைய நோய்கள் விடயத்திலும் தோன்றுகிறது.

இந்த நோய் வராமல் தடுப்பதற்கு முயற்சி செய்வது மிகவும் அவசியம். ஆகவே நோய்வரும் வழிபற்றி அறிந்து கொள்ள வேண்டும். ஒவ்வொரு மூட்டிலும் இணையும் எலும்புகளின் நுணியை நார்போன்ற அமைப்புள்ள தசைகள் மூடிக் கொண்டிருக்கும். இவைதான் ஒரு எலும்பும் மற்றொரு எலும்பும் நேரிடையாக உரசித் தேயாமல் பாதுகாக்கும் குஷன்கள் போல் அமைந்துள்ளன. இவ்வாறான மூட்டுகளில் ஒருவித பிசுபிசுப்பான திரவம் உள்ளது. இதுதான் மூட்டுகளை ஆரோக்கியமாக வைத்திருக்க உதவுகிறது. உடற்பயிற்சி செய்பவர்களுக்கு மூட்டுகள் இலகுவாக இயங்குவதால் இந்த திரவம் மூட்டின் எல்லாப் பகுதிகளுக்கும் பரவி அவற்றை பாதுகாத்து வருகிறது. ஆனால் இந்த மூட்டுகளுக்குக் கொடுக்கும் பயிற்சிகள் குறைவாக இருந்தால் இந்த பிசுபிசுப்பான திரவம் காய்ந்து தசைநார் பகுதிகளில் அழற்சி ஏற்பட்டு வலிகள், வீக்கம் என்பன உருவாகிறது.

### தடுப்புமுறை

தினமும் சில நிமிடங்களாவது மூட்டுகளுக்கும் தசைகளுக்கும் பயிற்சி கொடுக்க வேண்டும். இதன்போது தான் மூட்டுகள் சரிவர இயங்கும். இதற்கு



எந்தவகையான உடற்பயிற்சிகளை செய்தாலும் நன்மை தரும். ஆனால் யோகசனப்பயிற்சியானது உடலிலுள்ள 44 மூட்டுகளுக்கும் அதன் பூரணமான இயக்கத்திற்கும் உறுதுணையாகின்றது. ஆதரைடிஸ் நோய் தீர்க்கும் சில முக்கிய ஆசனங்கள் இதோ

1. பஸ்ஸி மொத்தாசனம்
2. ஹனுமானாசனம்
3. கோமுகாசனம்
4. திரிகோணாசனம்
5. சக்ராசனம் இன்னும் பல

அத்துடன் நாடிசுத்தி மூச்சுப்பயிற்சி தினமும் சிறிது நேரமாவது செய்து வருபவர்களுக்கு ஆதரைடிஸ் நோய் வரவாய்ப்பில்லை. ஏனெனில் நாடிசுத்தி யின் போது இரத்தம் சுத்திகரிக்கப்படுவ-தால் அதனோடு தொடர்புடைய நோய்கள் நீங்குகின்றன. முக்கியமாக கவனிக்க வேண்டியது யோகா பயிற்சிகளை படங்களைப் பார்த்தோ, அன்றி கைநூல்களைப் படித்தோ செய்வது நல்லதல்ல. அதனால் பல பக்க விளைவுகளுக்கு ஆளாகலாம். இதனை யோகாசன பயிற்சியாளர் (Expert Guidance) உதவியுடன் ஆரம்பத்தில் பழகிவர வேண்டும்.

### நிவாரணம்

1. கோதுமையை வறுத்து தேன்கலந்து உண்ண இந்நோய் குணமாகும்.
2. கொத்தமல்லி, ரோஜா மொக்கு, அதிமதுரம், கடுக்காய் இவற்றை சம அளவில் எடுத்து பொடிசெய்து சர்க்கரை கலந்து ஒரு தேக்கரண்டி அளவு காலை, மாலை சாப்பிட நோய் குணமாகும்.
3. கறிப்புளியை எடுத்து சிறிது நீர்கலந்து பிசைந்து வீக்கத்திற்கு பற்றுப் போட வீக்கமும் வலியும் குறையும்.
4. ஆடாதோடை இலையை கசாயமாக காய்ச்சி ஒத்தடம் கொடுக்க இந்நோய் தீரும்.
5. முருங்கை இலையை விளக்கெண்ணெயில் வதக்கி ஒத்தடம் கொடுக்க இந்நோய் குறையும்.
6. முள்ளங்கியை சமைத்து சாப்பிட வீக்கம் குறையும்.
7. முட்டைக்கோஸ், சிறுகீரை தினமும் சாப்பிட்டு வர நோய் விலகும்.
8. வெங்காய சாற்றுடன் கடுகு எண்ணெய் கலந்து தடவ நோய் தீரும்.
9. வேப்பெண்ணெய் அல்லது இலுப்பெண்



ணெய் ஏதேனும் ஒன்றை மூட்டின் மேல் தினமும் தடவ நோய் குறையும்.
10. கருஞ்சீரகம், சீரகம், கொத்தமல்லி என்பவற்றைச் சமஅளவில் எடுத்து நீரில் போட்டு கசாயம் காய்ச்சி குடிக்க நோய் குணமாகும்.




ஆரோக்கிய வாழ்வு

Diploma in Yoga Therapy (India)


**416.289.2033** after 7:00pm
**416.617.5721**


**YOGA - MEDITATION CLASSESS**

**ஆரோக்கிய வாழ்விற்கு வழிகாட்டும் மருத்துவமுறை யோகாசன பயிற்சிகள்**




மூட்டுவலி - முதுகுவலி - ஆஸ்துமா - இரத்த அழுத்தம், நீரிழிவு நோய் - பெண்களின் மாதவிடாய் கோளாறுகள் - உடல் எடை - தொந்தி குறைய மற்றும் மன அழுத்தம் போன்றவற்றிகு நிவாரணம்.



நீரிழிவு, இருதய நோயாளிகளுக்கு தனிப்பட்ட நேரடி பயிற்சிகள்

**GTA Square Mall இல் புதன்கிழமைகளில் காலை 8:00 மணிக்கு வகுப்பு நடைபெறுகின்றது**

தொடர்புகளுக்கு: ***Scarborough - Markham*** - செல்வ சோதி - ***416.289.2033***



Nantha Aiyadurai, B.Eng.
Real Estate Broker
***Cell: 613 850 9931***

கனடாவின் தலைநகர் ஒட்டாவாவில்

**Buying or Selling**

**Relocation Service**
**Ottawa> > > < < < GTA**



நந்தா ஐயாத்துரை

COLDWELL BANKER

***Coldwell Banker Sarazen Realty, Brokerage 2544 Bank St. Ottawa, Ontario K1T 1M9 Office: (613) 288-1999 Fax: (613) 288-1555***

TBC Toronto Business College
கனடாவில் கல்வியில் ஓர் முதன்மை நிறுவனம்



SECOND CAREER
யார் தகுதி உடையவர்கள் ?
★ EI பெற்றுக்கொண்டிருப்பவர்கள்
★ 2005ம் ஆண்டுக்குப்பின் EI பெற்றவர்கள்
★ 5 வருடங்களுக்குள் Maternity / Parental Benefits பெற்றவர்கள்
அரசாங்க நிதி உதவியில் கற்கலாம்
TUITION FEES, BOOKS, LIVING EXPENSES
DAY CARE & TRANSPORTATION UP TO $28000
அனைத்தும் இலவசம்
(திருப்பிச் செலுத்தத் தேவையில்லை)
Second Career மறுக்கப்பட்டவர்கள்,
New Immigrants are also Welcome

DIPLOMA PROGRAMS
Accounting & Payroll Admin.
DURATION: 35 WEEKS (CO-OP AVAILABLE)
Business Administration
DURATION: 26 WEEKS
Computerized Accounting
DURATION: 26 WEEKS
Medical Office Admin.(MOA)
DURATION: 32 WEEKS
Personal Support Worker(PSW)
(NACC DIPLOMA)
DURATION: 26 WEEKS

Certificate Courses
MS Office 2010, Quick Books 2011
Simply Accounting 2011, Accpac 5.6
Online Stock Trading
Canadian Securities Course
Bank Teller, First Aid & CPR
Food Handler Certification


☎ 416-291-5155 ☎
4465 Sheppard Ave. East #208
( Sheppard & Brimley ) Scarborough
www.tbcollege.com info@tbcollege.com
(REGISTERED AS A PRIVATE CAREER COLLEGE UNDER THE PRIVATE CAREER COLLEGES ACT 2005)


# மனமும் அபார வெற்றிகளும்

'மனம் போல வாழ்வு' என்ற வாக்கியம் எம்மோடு கூடவே வருகிறது. நாம் எதனை நினைக்கிறோமோ அது நடைபெறும் சாத்தியங்கள் நிறையவே உள்ளன என்பதே இதன் அடிப்படை. திட்டவட்டமான குறிக்கோளுடன் எமது எண்ண அலைகள் ஓய்வு பெறாது அடித்துக் கொண்டிருந்தால் எமது எண்ணம் நிறைவேறிவிடுகிறது. எண்ண வீச்சு எமக்குள் முதன்முதலாக மின்னலடிக்கும் போது அதனை செயல் படுத்த முடியாத நிலையில் நாம் இருக்கலாம். சிலருக்கு இந்த மாதிரியான எண்ணங்கள் முளையிலேயே கருகிவிடக் கூடும். சிலருக்கு இந்த எண்ணங்கள் கொழுந்து விட்டு எரியும். அவர்களே தமது எண்ணத்தில் வெற்றி பெறுகின்றனர். விஞ்ஞானி எடிசனின் தயாரிப்பான டிக்கோட்டிங் மெசின் (Dictating Machine) உருவாக்கம் அவரது எண்ணக் கீற்றின் மாபெரும் வெற்றியாகும். இப்படியே எத்தனையோ விஞ்ஞானிகளும், மேதாவிகளும் மனதினைப் பாவித்தே மாபெரும் வெற்றி பெற்றுள்ளனர்.

காப்புறுதி தொழிலில் பல தோல்விகளை சந்தித்த பின்பே 'டார்பி' என்பவர் பெரு வெற்றி பெற்றார். தற்காலிகமாக அவர் ஒரு பண்ணையில் வேலை செய்து கொண்டிருந்த போது அங்குள்ள விவசாயியின் மகளை சந்திக்க நேர்ந்தது. அவளின் கோரிக்கை 50 காசுகள் வேண்டுமென்பது. டார்பி அவளை விரட்டினார். அவள் அங்கிருந்து செல்லவில்லை. திரும்பத் திரும்ப அவர் விரட்டினார். அவளோ குத்துக்கல்லாக அங்கேயே நின்றிருந்தாள். அவளை அடிப்பதற்கு ஒரு மரக்கட்டையை எடுத்து வந்தார். அவர் நினைத்தபடி அவள் பயந்து ஓடவில்லை. ஓரடி முன்னால் வந்து 'என் அம்மா கேட்ட 50 காசைத் தந்துதான் ஆக வேண்டும்' என்று ஆக்ரோசமாக கத்தினாள். டார்பி அசந்து போய் மரக்கட்டையை கீழே போட்டு விட்டார். இந்தச் சிறுமி கொடுத்த சாட்டையடியை சகிக்க முடியாத டார்பி, ஒரு கறுப்பினச் சிறுமி வெள்ளைக்காரனான தன்னை மண் கவ்வ வைத்த சம்பவம் பற்றி பல காலம் நினைவு கூர்ந்தார். அந்தச் சிறுமியின் விந்தையான சக்தியை அவரால் மறக்க முடியவில்லை. டார்பி ஒரு சந்தர்ப்பத்தில் தனது காப்புறுதியை விற்க முயன்று தோல்வியடைந்தும் துவண்டுபோக வில்லை. அந்த நேரத்தில் எல்லாம் அந்த பிடிவாத சிறுமியே நினைவுக்கு வருவாள். எப்படியும் முயன்று விற்று விடுவார். காப்புறுதி வேண்டாம் என்றவர்களை யெல்லாம் எடுக்க வைத்து பெரும் புள்ளியானார். தோல்விகளை வெற்றிப்படி களாக மாற்றும் அவரது செயல் இன்னும் பல. காப்புறுதி முகவர்களுக்கு உதவுகின்றது.

மனதில் திடீரென்று ஒரு திட்டம், ஒரு நோக்கம் எழலாம். ஒரு அபாரயோசனை வந்து விட்டால், அது வெற்றியடைந்து விட்டால் அதிசயப்படும் வகையில் பணம் குவியும். பொதுவாக எல்லோரும் 'அது சரிவராது' 'அது சாத்தியப்படாது' என்றே கூறுவர். ஆனால் வெற்றிச் சிந்தனையில் உள்ளவர்கள் அதனை பொருட்படுத்த மாட்டார்கள். வறுமை, தேவைகள், துயரத்தோல்வி அவர்களுக்கு கிடையாது. ஹென்றி போர்ட் (Henry Ford) அமெரிக்காவில் மோட்டார் காரை உற்பத்தி செய்ய திட்டமிட்ட வேளையில் பொறியியலாளர்களுக்கு பல தடவை 'இது சரிப்படாது' என்று கூறிவந்தார். அவரது புகழ் பெற்ற வாகனத்தை அமைப்பதில் பல தடைகள் ஏற்பட்டன. ஒரு பிளக்கில் எட்டு இயந்திரங்களை பொருத்த வேண்டியதே அவரது கோரிக்கை. வருடக்கணக்கில் முயன்று இறுதியில் போர்ட் வெற்றி பெற்றார். உலகின் பல மோட்டார் வாகனங்களுக்கு வழிகாட்டிய இவரது சாதனை சாதாரணமானதல்ல.



மனதில் எழும் ஆசை கூட வெற்றியை சம்பாதிக்கிறது. சிக்காகோ நகரமொன்றில் ஏற்பட்ட தீ விபத்து பல விடயங்களை கதிகலங்க வைத்தது. மார்சல் வீல்ட் என்பவர் மட்டுமே முதலில் தனது ஆசையை நிறைவேற்ற துணிந்தார். பெரிய கட்டிடத்தை நிறுவி சாதனை புரிந்தார். அவருக்கு பணம் சேர்க்கும் ஆசை மனது முழுவதும் பரவி, அதை அடைவதற்கான வழிமுறைகளை திட்டமிட்டு விடாப்பிடியாக



**சிந்தனைப் பூக்கள்**
**எஸ். பத்மநாதன்**

தொடர்ச்சி 17ஆம் பக்கம்

# தமிழர் - பண்பாடு பற்றிய தனிநாயக அடிகளின் ஆய்வுகள் - ஒரு நோக்கு

- பேராசிரியர் இ. பாலசுந்தரம் -

தனிநாயக அடிகள் தமிழ் மொழி 'தமிழர் பண்பாடு' தமிழ்க் கல்வி என்பனவற்றுக்காகத் தன் வாழ்நாள் முழுவதையும் அர்ப்பணித்த தனிநாயக அடிகள், தமிழர் பண்பாடு பற்றி எத்தகைய ஆய்வுகளை மேற்கொண்டார் என்பது பற்றியதாகவே இக்கட்டுரை அமைகின்றது. தமிழ்ப் பண்பாட்டுச் சூழலிலே பிறந்து கொழும்பிலும் அதனைத் தொடர்ந்து ரோம் நகரிலும் கத்தோலிக்க மதக் கல்வி கற்று, மேலைத்தேய மொழிகளோடும் கத்தோலிக்க மதத்தோடும் முழுமையாகத் தொடர்பு கொண்டிருந்த அடிகளார், தமிழ்மொழி, இலக்கியம், பண்பாடு என்பனவற்றில் எவ்வாறு ஈடுபாடு கொண்டார் என்பதும் அவைபற்றிய எத்தகைய ஆய்வுகளை மேற்கொண்டார் என்பதும் அறியப்பட வேண்டியவையாகும்.

அடிகளார் ரோம் பல்கலைக் கழகத்தில் முனைவர் பட்டம் பெற்றுத் தாயகம் திரும்பியதும் திருவனந்தபுரத்திலும், பின்னர் தமிழ்நாட்டில் தூத்துக்குடிப் பகுதியில் வடக்கன் குளம் என்ற கிராமத்திலும் மத குருவாகவும் பாடசாலை ஆசிரியராகவும் தமிழ் மக்களிடையே சேவையாற்றும் வாய்ப்பினைப் பெற்றார். அச்சூழலே தனிநாயக அடிகளுக்குத் தமிழ் மொழியிலும், தமிழர் பண்பாட்டிலும் ஆர்வம் ஏற்பட முதற்காரணியாயிற்று. வடக்கன் குளத்தில் பண்டிதர் குருசாமி சுப்பிரமணிய ஐயர் என்பவரிடம் தமிழ் மொழி இலக்கியங் களை நான்கு ஆண்டுகள் முறையாகக் கற்றபின்பு, அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் சேர்ந்து தமிழ் ஆய்வில் நாட்டம் கொண்டு, சங்க இலக்கியத்தில் இயற்கை பற்றிய ஆய்வில் முதன் முதலாக அடிகள் ஈடுபட்டார். ஆய்வு மாணவராக இருந்த காலக்கட்டத்தில் அங்கு ஹெரஸ் பாதிரியார், சுவாமி விபுலாநந்தர் ஆகிய இருவரது விசேட சொற்பொழிவுகளால் அடிகள் கவரப்பட்டார் தனிநாயக அடிகளார். ஹெரஸ் பாதிரியார் சிந்துவெளியில் நிலவிய திராவி டப் பண்பாட்டின் பழைமையை ஆராய்ந்தவர். சுவாமி விபுலாநந்தர் பண்டைத் தமிழ்ப் பண்பாட்டின் இசைமரபுகளையும் இலக்கிய மரபுகளையும் ஆராய்ந்தவர். அத்துடன், அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலே சுப. மாணிக்கம், தெ.பொ. மீனாட்சிசுந்தரனார். மாணிக்கம் செட்டியார் முதலானோரும் அடிகளாரது தமிழ் மொழி - பண்பாட்டு ஆர்வத்தை விரிவுபடுத்தினர். இவர்களோடு வீரமாமுனிவர், டாக்டர் ஜி.யு. போப் முதலானோரின் அயராத பணிகளும் தனி நாயக அடிகளாரின் தளரா உழைப்புக்கு முன்னோடியாக அமைந்தன. இவற்றால் உந்தப்பட்ட அடிகளார், தமிழ், தமிழ்ப் பண்பாடு ஆகியவற்றை உலகறியச் செய்ய வேண்டும் என உறுதிபூண்டார். 'இந்த அடிப்படையில் அடிகளாரின் மனதில் நீறுபூத்திருந்த ஆவலைத் தூண்டிவிட்டது அண்ணாமலைப் பல்கலைக்கழகமே' எனப் பேராசிரியர் அழகரசன் குறிப்பிடுவார்.



அடிகளார் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் படிக்கும் காலத்திலேயே, அவர் உள்ளத்தில் நம் ஒப்பற்ற தமிழ் இலக்கியத்தின் சிறப்பை உலகறியச் செய்ய வேண்டும், அதற்காக உழைக்க வேண்டும். பாடுபட வேண்டும் - என்ற எண்ணங்கள் தம் மனத்தில் தோன்றிய- தாக அடிகள் கூறுவர். கத்தோலிக்க சமயத்தைப் பரப்புவதற்குத் தமிழ் இலக்கியத்தை ஒரு கருவியாக அடிகளார் பயன்படுத்த முனைந்து, 1948 இல் தூத்துக் குடியில், நியு கொலனி என்ற இடத்தில் 'தமிழ் இலக்கியக் கழகம்' அமைத்தமை குறிப்பிடத்தக்கது. உலக மக்கள் அனைவரும் தமிழ்ப் பண்பாட்டின் மேம்பாட்டையும் சிறப்பையும் அறிய வேண்டும் என்னும் நோக்கில் Tamil Culture என்னும் ஆங்கில முத்திங்கள் இதழை 1952 இல்தொடங்கி அதன் ஆசியரயாகப் பதினைந்து ஆண்டுகள் பணியாற்றினார். அத்துடன் இந்த இக்கழகத்தினூடாக 'தமிழ்த் தூது' என்ற நூலையும் வெளியிட்டார். அதனைத் தொடர்ந்து 1964 இல் புதுதில்லியில் நடைபெற்ற கீழைத்திசை கலைகளின் 26 ஆவது மகாநாட்டுக்கு வருகை தந்த தமிழ் ஆர்வம் கொண்ட உலக அறிஞர்களை ஒன்றிணைத்து 'உலகத் தமிழ் ஆராய்ச்சி குழுவை' அமைத்து, உலக அறிஞர்களை உள்ளடக்கி நான்கு உலகத் தமிழ் ஆராய்ச்சி மகாநாடுகள் நடத்தி தமிழ் மொழிக்கும் தமிழ் பண்பாட்டுக்கும் பெரும் பணியாற்றியிருக்கிறார். தமிழர் பண்பாடு பற்றிய உலகளாவிய சிந்தனையில் உதித்ததே இந்த ஆராய்ச்சி மகாநாடு களாகும். தமிழக அரசின் நிதியுதவியுடன் சென்னையில் தமிழ்மொழி 'தமிழ்ப் பண்பாடு' பற்றிய ஆராய்ச்சியைத் தொடர்ந்து செய்வதற்காக உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் ஒன்றையும் உருவாக்கினார். அந்நிறுவனம் மேற்கொண்டு வரும் அளப்பரிய பணிகளின் மூலம் அடிகளாரின் கனவுகள் நனவாகி வருகின்றன.


இத்தகைய உலகளாவிய பணிகளுக்கிடையில் தனிநாயக அடிகள், தமிழ்ப் பண்பாடு பற்றிய ஆய்வுகளில் ஈடுபட்டு வந்தார் என்பதும் குறிப்பிடத்தது. பண்பாடு என்பதற்கு அடிகள் கூறும் விளக்கம் சிறப்புடையது. 'பண்பாடு எனப்படுவது பாடறிந்து ஒழுகுதல்' என்னும் கலித்தொகை வாசகத்தையும், 'பண்புடையார் பட்டுண்டுலகம்' என்னும் திருக்குறள் வரியையும் மேற்கோள் காட்டி, மானிட வியலாளர், மற்றும் மத்தியு ஆர்நோல்ட், ரி. எஸ். எலியட் முதலியோர் பண்பாடு பற்றிக் கூறிய விளக்கங்களையும் தந்து, உழவுத்தொழில் எவ்வாறு நிலத்தைப் பயன்படுத்துகிறதோ அவ்வாறே மனத்தையும் மக்களையும் பண்படுத்துவது பண்பு என்றும், அப்பண்பு என்னும் இச்சொல்தான் பண்பாடு என்னும் பொருளில் பண்டைத் தமிழ் இலக்கியங்களில் பயன்படுத்தப்பட்டுள்ளது என அடிகளார் கூறுவர். 2500 ஆண்டுகளாகத் தமிழ் மக்கள் வளர்த்து வந்த பண்பாட்டை இலக்கியங்களும், கவின்கலைகளும் எடுத்துக் காட்டுகின்றன. தமிழ் இலக்கியங்களில், ஒரு சில நூல்கள் மட்டுமே தமிழர் பண்பாட்டுக் களஞ்சியமாக உள்ளன என்றும், அவை தொல்காப்பியப் பொருளதிகாரம், குறுந்தொகை, புறநானூறு, திருக்குறள், சிலப்பதிகாரம் ஆகிய ஐந்து நூல்கள் என்றும் குறிப்பிடுகிறார். தமிழ்ப் பண்பாடு கால அடைவில் சிறிது மாறி வந்துள்ள போதிலும், அதனுடைய அடிப்படைக்கொள்கைகள் இத்துணை நூற்றாண்டுகளாக மாற்றங்கள் அடைய வில்லை என்பதையும் சிறப்பித்துக் கூறுகிறார். "நம்நாட்டைப் பல சமயத்தவர், பல ஆட்சியாளர், பல மொழியாளர் ஆட்சி புரிந்திருந்தாலும் மக்கள் தமிழ்ப் பண்பாட்டை இழக்கவில்லை, அவர்களாலும் மாற்ற முடியவில்லை" என்ற கருத்தையும் வெளியிட்டுள்ளார், நாகரிகம் என்ற சொல் நகர் என்ற திராவிடச்சொல்லிருந்து பிறந்தது என்றும், ஆரியர் வடஇந்தியாவைக் கைப்பற்றிய காலத்தில் திராவிட மக்கள் பெரு நகர்களில் வாழ்வதைக் கண்டு வியப்படைந்ததோடு, திராவிட மக்களிடமிருந்தே நகர்களை அமைக்கவும் ஆரியர் கற்றுக் கொண்டனர் எனவும் அடிகள் குறிப்பிடுவது பண்பாட்டு வரலாற்று உண்மை யாகும். தமிழர் பண்பாட்டின் சிறந்த கோட்பாடுகள் சிலவற்றை அடிகளார் சுட்டிக் காட்டுவர்: 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்னும் பரந்த உலக மனப்பான்மை, விருந்தோம்பல், பிறரிடம் அன்பு, ஈகை, தமக்கென வாழாப் பிறர்க்குரியாளர் என்னும் கோட்பாடு, என் கடன் பணி செய்து கிடப்பதே, அகத்திணை மரபு, புறத்திணை மரபு, மானமென்றால் உயிரையும் கொடுத்துக் காப்பாற்றும் வேட்கை, மனத்தூய்மை, விடாது முயலல், யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்ற நிகரற்ற மன நிலை, உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல் என்னும் உயர்ந்த இலட்சியம் என்பன தமிழர் பண்பாட்டின் அரிய சில கோட்பாடுகளாகும் என அடிகளார் அடையாளப்படுத்துகின்றார்.

பிற சமயங்களைப் போதித்த பார்ப்பனரும், சமணரும், பௌத்தரும். ஐரோப்பிய கிறிஸ்தவரும் முகமதியரும் தமிழர் பண்பாட்டைத் தழுவ முயன்றனர். சங்கரர், இராமானுஜர், மாதவர் போன்றவர் களால் தென்னாட்டுத் தத்துவங்கள் வடக்கே வடமொழியில் ஏற்றம் பெற்றன. சுநிதிகுமார் சட்டர்ஜி என்ற மொழி நூலறிஞர் இந்தியப் பண்பாடுகளை ஆராய்ந்த பின்னர் இந்தியப் பண்பாட்டில் 75 விழுக்காடு திராவிடப் பண்பாடு எனக் குறிப்பிட்டுள்ளதையும் அடிக- ளார் போற்றுவர். பிற சமயக் காப்பியங்க ளான சிலப்பதிகாரம், மணிமேகலை, தேம்பாவணி, சீறாப்புராணம் என்பன தத்தம் சமயக் கோட்பாடுகளைக் கூறினாலும், அவர்களது படைப்புக்களில் விளக்கப்படு பவை தமிழர் பண்பாட்டுச் சிறப்புக் கூறுகளேயாகும் என்கிறார். தமிழ்ப் பண்பாட்டின் சிறப்புக்களைக் கூறும்போது, ஒப்பியலடிப்படையில் அணுகுவதும் அவரது ஆய்வு முறையாகவுள்ளது. உரோமப் பேரரசு காலத்தில் ஸ்ரோயிக் (Stoic) வாதிகள் உலக மனப்பான்மையை வளர்த்தது போன்று, சங்ககாலம் முதலாக உலக மனப்பான்மை தமிழ் நாட்டில் பரவியது என்றும், அதன்வழியே சங்கப் புலவர்களும் பாவியற்றினர் என்றும் குறிப்பிடுகிறார். பிளேட்டோ, அரிஸ்டோட்டல் போன்றோர் கிரேக்கர் மட்டுமே உயர்ந்தவர்கள் என்றும், பிற மக்களை நாகரிகம் அற்றவர்களென்றும் கூறிவந்தமையையும், ஆரியர் இமய மலைக்கும் விந்தியமலைக்கும் இடையே யுள்ள நிலத்தைப் புண்ணியபூமி எனக் குறிப்பிட்டமையையும் கூறி, உலகப் பொதுநோக்குடைய தமிழர் பண்பாட்டின் மேன்மையை விளக்குகிறார்.

தமிழ் நாட்டில் வாழ்ந்த பிற மத இலக்கியவாதிகளும் உரைகாரரும் கண்ணோட்டம் என்ற தமிழர் பண்பாட்டைத் தழுவினர். அதனாலேயே சமனரான இளங்கோ, திருத்தக்கதேவர் போன்றோர் தம் மதக்கோட்பாடுகளுக்கு முரணான தமிழர் கவின்கலைகளைத் தம் காப்பியங்களில்

தொடர்ச்சி 18ஆம் பக்கம்


தமிழ்த்தூது தனிநாயகம் அடிகளார் நூற்றாண்டு விழா



தனிநாயக அடிகளார் விழா:

ஆகஸ்ட் 30, 2013 - வெள்ளிக்கிழமை மாலை 5:30 மணி
ஆர்மேனியன் கலை மண்டபம் - ரொறன்ரோ

தனிநாயக அடிகளார் ஆராய்ச்சி மகாநாடு:

ஆகஸ்ட் 31, 2013 - சனிக்கிழமை காலை : 10:00 மணி - மாலை 5:00 மணிவரை.
மார்க்கம் சிவிக் சென்ரர்

தொடர்புகளுக்கு: கலாநிதி இ. பாலசுந்தரம் / திரு. மு. பாக்கியநாதன்

**416.267.5255 / 647.856.6326**

# மனமும்...

15ஆம் பக்கத்தொடர்ச்சி

செயல்பட்டார். தணலாய் தகிக்கும் ஆசை ஏற்பட்டு விட்டால் எவரும் அதில் குறியாகி விடுவர். இதில் வெற்றி பெற்றவரே அவர்.

தோமஸ் அல்வா எடிசன் பணம் மட்டுமல்ல, வேறு இலட்சியத்தையும் கொண்டிருந்த ஒருவர். மின்சாரம் மூலம் இயங்க கூடிய விளக்கு பற்றி கனவு கண்டவர் அவர். ஆயிரக்கணக்கான பரிசோதனைகளில் தோல்வியடைந்த அவர் மீண்டும் தன் கனவை கைவிட்டுவிடவில்லை. இப்படியே ரைட் சகோதரர்களின் கனவு விமானமாகியது. மார்க்கோனியின் கனவு வானொலியாகியது. இவர்களுக்கெல்லாம் பைத்தியங்கள் என்றே அன்று பட்டம் சூட்டியிருந்தார்கள். இன்று யார் பைத்தியங்கள் என்பது புரிந்து விட்டது.

எழுத்தாளர் பலர் பல துன்பங்களின் மத்தியில் உருவானவர்கள். ஜோனி பன்யன் மதம் பற்றி எழுதி சிறை சென்றவர். இவரது 'பில்கிரிம் புறோகிறஸ்' (Pilgrim Progress) என்ற நூல் ஆங்கில இலக்கியத்தின் தலைசிறந்த படைப்பாகியது. ஓ ஹென்றி என்ற எழுத்தாளரான அமெரிக்காவில் ஓகியோ மாகாணத்தின் சிறையில் வாடியவர். நாடுகடத்தப்பட்ட அவரது கற்பனைவளம் மகத்தான எழுத்தாளராக்கியது. சார்ள்ஸ் டிக்கின்ஸ் காதலில் தோல்வி பெற்ற ஒருவர். அவரது முதல் நூலான 'டேவிட் காப்பர்பீல்ட்' என்ற நூல் புகழ் பெற்றதொன்று. பல நூல்கள் படைத்தவர் அவர் பிறந்து கொஞ்ச நாட்களில் பார்வையிழந்தார். ஹெலன் நெல்லர், அவர் செய்த சாதனை கண்பார்வை, செவிப்புலன் இழந்த நிலையில் பட்டம் பெற்றவர். ராபட் பான்ஸ் வறுமையில் வாடிய எழுத்தறிவில்லாத கிராமத்து வாலிபன். அழகான சிந்தனை-களை கவிதையாக தந்தவர் இவர். காது கேட்காத பீத்தோவன், மில்ரன் ஆகியோரது சிந்தனைகள் என்றும் நிலைபேறுள்ளது. இதேபோன்று தமிழகத்தில் சிறை சென்ற கலைஞர் கருணா நிதியும், வை கோபால் சாமியும் கூட சிறையில் இருந்து நூல்களை எழுதியவர்களே. ஜவகர்லால் நேரு தனது மகளான இந்திரா காந்திக்கு எழுதிய கடிதங்கள் 'Discovery of India' என்ற நூலாகியது. வாழ்க்கையின் திருப்பு முனைகளும், உடல் ஊனம் பெற்றமையும் அவர்களது இன்னொரு முகங்களை பார்க்க வைத்துள்ளது.



எந்த ஒரு வெற்றிப் பாதைக்கும் நம்பிக்கை மிக அவசியம். நம்பிக்கை என்பது ஒரு மனநிலை. சுயகட்டளை, கோட்பாடு மூலம் ஆழ்மனதில் பதிய வைத்தால் அதனை வசப்படுத்த முடியும். நமது சரியான எண்ணம் ஆழ்மனதிற்குள் புகுந்து கொண்டால் அது வெற்றி பெறுகிறது. எண்ணக்கீற்றுடன் நம்பிக்கையை ஒன்றிணைத்து ஆழ்மனதுக்குள் அனுப்பினால் ஆழ்மனம் அதனை உடன் ஏற்றுக்கொள்ளும். விஞ்ஞான விதிமுறைகளுக்கு அப்பாற்பட்ட எல்லாஅதிசயங்களுக்கும் புதிர்களுக்கும் அடிப்படை நம்பிக்கை தான். எமது சாதனைக்கான ஆதார சக்தி எங்களுக்குள்ளே ஒரு மூலையில் நீறுபூத்த நெருப்பாக இருக்கும். அதனை கொழுந்து விட்டெரிய செய்வது நமது வேலை. நாற்பது வயதினை தாண்டியும் ஆபிரகாம் லிங்கனுக்கு எல்லாமே தோல்விதான். லிங்கனின் உயிரான காதலி ஆன்ரட்லட்ஜ் மூலமே அவர் முழுமை பெற்றார். அதன்பின்பு எல்லாம் அவருக்கு வெற்றிதான். அவர் அமெரிக்க ஜனாதிபதியாக உயர்ந்து நின்றார். இப்படித்தான் இந்தியாவில் மகாத்மா காந்தி கூட விந்தை மனிதர் தான். பணபலம் இல்லாத அவர் சுதந்திரம் பற்றி அபார நம்பிக்கை கொண்டிருந்தார். பலகோடி மக்களை ஒன்றிணைக்க முடிந்த அவரது சாதனைக்கு ஈடுஇணையில்லை.

சிலர் அசாத்திய மூளை (Master Mind) உள்ளவர்களாக இருப்பர். இவர்களெல்லாம் பல்கலைக்கழகங்களுக்கு சென்று பட்டம் பெற்றவர்களல்ல. விசேடமான அறிவுதான் பலரை வெற்றி பெற வைத்தது. படிக்காத மேதைகளின் சாதனைகள் படித்தவர்களாலும் முடியவில்லை. நாமெல்லாம் படித்தவர்கள் என்று எண்ணுவதில் பெருமை கொள்வோம். ஆனால் முன்னேற விரும்புபவர்கள் தங்களது அசாத்திய அறிவை பயன்படுத்தி எங்கேயோ சென்று விடுவர். சொந்த அனுபவம், மற்றவர்களின் அனுபவத்தைப் பெற்றுக் கொண்டு வாழ்க்கையில் பலர் முன்னேறியுள்ளனர்.

நாம் உருவாக்கும் திட்டங்களையெல்லாம் மெருகூட்டும் கலைக்கூடம் நமது கற்பனை இலாகா. நமது எண்ணப்பொறி, ஆசை எல்லாவற்றையும் உயிரூட்டச் செய்வது கற்பனை தான். கற்பனையில் விசேட கண்டுபிடிப்பு செய்தவர்கள் பலர். அதிசயமான அதீதமான சக்தி கொண்டது இந்த கற்பனை வளம். இதற்கு எல்லையே கிடையாது. படைப்பாற்றல் நிறைந்த கற்பனையே பலன் தரும். பெரிய தலைவர்கள், தொழில் அதிபர்கள், நிதி ஆலோசகர்கள், முன்னணிக் கலைஞர்கள், இசை மேதைகள், கவிஞர்கள், எழுத்தாளர்கள் எல்லாம் இந்த படைப்பாற்றல் கற்பனையை வளர்த்துக் கொண்டவர்களே.!

தொடர்ச்சி 28ஆம் பக்கம்




ஆரோக்கியமாக துடிப்பாற்றலோடு சுயாதீனமாக வாழுங்கள்.

முதியோர்கள் ஆரோக்கியமாக வாழ்வதற்கும், அறுவைச் சிகிச்சை அல்லது காயங்களிலிருந்து குணமடைவதற்கும், ஃபிசியோதெரப்பி (உடலியல் மருத்துவம்), உடற் பயிற்சி மற்றும் விழுவதைத் தவிர்ப்பதற்கான வகுப்புகள் உதவுகின்றன.

பொதுநிதியால் நடாத்தப்படும் இச்சேவைகள் தேவைப்படும்போது, முதியவர்கள் அவற்றை தொடர்ந்து பெற்றுக்கொள்ளலாம்.

உங்கள் சமூகத்தில் தற்போதுள்ளதும் இனி வரப்போகிறதுமான சேவைகளைப் பற்றி மேலும் அறிந்துகொள்ளுங்கள்.

ontario.ca/physiotherapy
முதியோர் தகவல் இணைப்பு: 1-888-910-1999
TTY (செவிப்புலன் குறைந்தோர்க்கு): 1-800-387-5559

Ontario

# தமிழர் - பண்பாடு...

16ஆம் பக்கத்தொடர்ச்சி

போற்றிப் பாடினர். இளம்பூரணர், நச்சினார்க்கினியர் முதலானோரின் உரைகளும் மதம் கடந்த கண்ணோட்டத்துடன் எழுதப் பட்டுள்ளமையை அடிகள் விளக்கியுள்ளார். மேலும், தனிநாயகஅடிகள், தமிழ்மொழி பக்திமொழி என மகுடம் சூட்டியவர் ஆவார். பக்தி இலக்கியம் தமிழர் கலைகளை வளர்த்தது மட்டுமன்றி, கடல்கடந்து இந்தோனேசியா, கம்பூச்சியா முதலான நாடுகளிலும் தமிழர் மதமும், தமிழ்ப் பண்பாடும் நிலைக்க உதவியாகவும் அமைந்தது என்பதை அடிகளார் நன்கு விளக்குவர். ‘ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம் உயிரினும் ஓம்பப் படும்’ என்ற வள்ளுவர் வாக்கிலிருந்து மட்டுமல்ல, அதற்கு முந்திய புறநானூற்றுப் பாடலிலே ‘அமிழ்தம் கொடுத்தாலும் ஒழுக்கத்திலிருந்து மாறாது ஒழுக்கத்தைக் காப்பாற்ற உயிரையும் கொடுக்கும்’ ஒழுக்கசீலர் தமிழர் என்பதைக் குறிப்பிடுகிறார், தமிழ் நாட்டில் தம் மதம் போதிக்க வந்த மேனாட்டுத் துறவிகளும் தமிழ் ஒழுக்க நூல்களின் அருமை அறிந்து, அவற்றைத் தத்தம் மொழிகளில் மொழிபெயர்த்து, அவை கூறும் ஒழுக்கங்களை உலகறியச் செய்தனர். அல்பேட் சுவைச்சர் என்னும் மகாத்மா, ‘திருக்குறளைப்போல் உயர்ந்த கோட்பாடுகளைக் கொண்ட ஒரு நூலை இவ்வுலகில் காண்பதரிது’ எனக் குறிப்பிட்டார். போப்பையர், ‘இத்தகைய நீதி நூல்களை இயற்றிய மக்களுக்குக் கடவுளின் சிறப்பான அருள் இருத்தல் வேண்டும்’ என்றார். இவற்றை எல்லாம் தனிநாயகஅடிகள் விரிவாகக் குறிப்பிட்டுத், தமிழர் பண்பாட்டின் ஒழுக்கவியலின் சிறப்பை விளக்குகின்றார்.

தமிழர் பண்பாட்டில் மனிதநலப் பண்பு (Humanism), அதிலிருந்து பிறக்கும் பிறரிடம் அன்புபேணல் என்ற ஒழுக்கங்கள் சிறந்து காணப்படுவதையும் அடிகள் விளக்குவர். தனக்கென வாழாப் பிறர்க்குரியாளர் ஆக வாழும் சான்றோர்களும், என் கடன் பணி செய்து கிடப்பதே என்ற கோட்பாடும், அறத்தின் பயனாக இவ்வவுலகம் நிலைத்திருக்கிறது என ‘உண்டாலம்ம இவ்வுலகு’ எனப் பாடுவதற்கும் தமிழர் பிறர் நலம் கருதிய பண்பாட்டு விழுமியமே காரணம் என்பதை அடிகள் சிறப்பாகக் கூறுவர்.

தமிழ் மக்கள் இயற்கைக்கு வைத்த பெயர்களும், இயற்கைமீது கொண்ட நம்பிக்கையும் மதிப்பும், புலவர்கள் இயற்கையைக் கருவியாகக் கொண்டு செய்யுட்கள் இயற்றிய மரபும் எந்த மொழியிலும் காணப்படாதவை. இன்பத்திலும் துன்பத்திலும் இயற்கை, தமிழரது பண்பாட்டு விழுமியங்களை விளக்குவதாகப் பயன்பட்டது. தமிழரது காதல் வாழ்விலும், போர்க்களச் செயற்பாடுகளிலும் பூக்கள் பெறும் முக்கியத்துவம் பற்றி அடிகளார் விரிவாக ஆராய்ந்து எழுதியுள்ளார். நாட்டுப்பற்று, மொழிப்பற்று, நல்லாட்சி என்பன தமிழரிடையே நிலைத்திருந்தன என்றும், கவின்கலைகளும் மேன்னிலையில் இருந்தன என்றும், அவை தமிழர் பண்பாட்டின் சிறப்பு இயல்புகளாக அமைந்தன என்றும் விளக்கி, தமிழ்ப்பண்பாடு பற்றிய தனது சிந்தனைகளைத் தெளிவுபடுத்தியுள்ளார்.

நிறைவாகத் தனிநாயக அடிகள் தமிழர் பண்பாடு பற்றிக் குறிப்பிடுவன புலம்பெயர்ந்து வாழும் தமிழ் மக்கள் கருத்திற் கொள்ளத்தக்கவையாக அமைந்துள்ளன. பண்பாட்டைப் பேணிவராதிருந்தால் அது மாற்றம் அடைதல் கூடும். தமிழ் மக்களோடு அக்காலத்தில் தொடர்புகொண்டு, வணிகம் செய்த எத்தனையோ மக்களின் பண்பாடும் நாகரிகமும் அழிந்துபட்டன. எகிப்தியர். பபிலோனியர், அசிரியர் போன்றோருடைய பண்பாடு எங்கே? நாகரிகம் எங்கே? கீழ்த்திசை நாடுகளில் பாம்பர் என்ற இனத்தவர் மாபெரும் மாளிகைகளையும் அரண்மனைகளையும் தமிழர் மரபினைத் தழுவி நிறுவினர். ஆனால் கம்பூச்சியா இன்று இந்நிலையில் உள்ளது. தமிழர் 2500 ஆண்டுகளாகத் தம் பண்பாட்டைக் காப்பாற்றி வந்துள்ளனர். அவர்களுடைய நாகரிகம் மேல்நாட்டுச் செல்வாக்கால் மாற்றமடைந்திருந்தாலும் பண்பாடு சிறிய அளவில்தான் மாற்றம் அடைந்துள்ளது. தமிழிலக்கியமும், நம் கலைகளும் நிலைத்து வாழ வேண்டுமாயின் - வளர வேண்டுமாயின் பண்பாட்டிற்கு ஏற்ற அமைதியான சூழ்நிலை வேண்டும்... கலைகள் வளர்வதற்கு அரசின் ஆதரவும் தேவை..... எத்தனையோ முறைகளில் நம் பண்பாட்டைக் கைவிட மறைவாக முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. நம் மக்கள் விளிப்பாயிருந்து தம் சிறுவர்களுக்கும், இளைஞர்களுக்கும் தமிழிலக்கியத்தின் சிறப்பையும் கலைகளின் சிறப்பையும், பண்பாட்டின் மேன்மையையும் உணர்த்துதல் வேண்டும். தமிழருடைய வரலாற்றைக் கற்பித்தல் வேண்டும். நம் பண்பாட்டின் பழக்க வழக்கங்களைக் குடும்பங்களில் கைவிடாது வளர்க்க வேண்டும்.

### துணைநூல்கள்:


1. தனிநாயக அடிகள்: தமிழர் பண்பாடும் அதன் சிறப்பு இயல்புகளும் -1980
2. வே. அந்தனிஜான் அழகரசன்- தனிநாயகஅடிகளின் வாழ்வும் பணியும் -1984
3. தனிநாயகம் அடிகளாரின் சொற்பொழிவுகள். 2002.






6th Annual
Summer Festival
2013
GTA SQUARE
INDOOR MALL
FREE ADMISSION
கோடையில் ஓர் வசந்தம்
FUN FUN FOR EVERYONE
AUGUST 10 & 11, 2013
Bavatharani's Temple of Fine Arts
Bharradhi பாரதி
ISAI VASANTHAM
★ Live Shows ★ Fashion Shows ★ Talent Shows
★ Dance Programs ★ Game and Play area for Kids
SIDE WALK SALE
வினோதஉடை
போட்டி
MIDDLEFIELD
& FINCH
5215 Finch Ave. East (@Middlefield)
Scarborough, ON M1S 0C2

# நாதாலயாவின் வெள்ளிவிழா!

வயலின், வாய்ப்பாட்டு போன்ற நுண்கலைகளை எம் பிள்ளைகளுக்கு கற்பிப்பதற்காக 1988 ஆம் ஆண்டில் ஸ்காபரோவில் ஆரம்பிக்கப்பட்ட இசைக் கோவிலான 'நாதாலயா' தனது வெள்ளிவிழாவை யூலை 21, 2013 இல் York Woods நூல் நிலைய அரங்கில் மிகவும் கோலாகலமாக கொண்டாடியது.
நாதாலயாவின் அதிபர் ஸ்ரீமதி விஜயலட்சுமி அவர்கள் சென்னையில் இருந்து நாதாலயாவின் வெள்ளிவிழாவில் கலந்து கொள்வதற்காக சிறப்பு விருந்தினராக வருகை தந்திருந்தார். நாதாலயாவின் வெள்ளிவிழாவிற்கு பிரதம விருந்தினராக தமிழிசைக் கலாமன்ற தலைவர் திரு. தம்பையா ஸ்ரீபதி அவர்கள் வந்திருந்தார். கௌரவ விருந்தினராக திரு. சுப்பிரமணியம் இராஜரட்ணம் வந்திருந்தார்.



சீனிவாசகம் இலங்கையில் ஓர் இசைக் குடும்பத்தில் பிறந்தவர். தனது வயலின், வாய்ப்பாட்டு இரண்டு இசைத்துறைகளின் ஆரம்பத்தையும் தனது தமையனாரான ஸ்ரீ A. சிவசாமியிடம் கற்றவர். அதைத் தொடர்ந்து இராமநாதன் நுண்கலைக் கல்லூரியில் ஸ்ரீ சித்தூர் சுப்பிரமணிய பிள்ளையிடம் இவற்றைப் பயின்றார். பின்னர் தஞ்சாவூர் S. கல்யாணராமனிடமும் இசை பயின்றார். இவர் இலங்கையில் ஆசிரியராக பணிபுரிந்த காலத்தில் இலங்கை வானொலியிலும் தொலைக்காட்சியிலும் தனது நிகழ்ச்சிகளை செய்து வந்தார்.
ஸ்ரீமதி விஜயலட்சுமி சீனிவாசகத்தினுடைய வயலின் மற்றும் வாய்ப்பாட்டு இசைக் கச்சேரிகள் அமெரிக்காவின் பல பாகங்களிலும், ஐரோப்பாவின் பல பாகங்களிலும் நடைபெற்றுள்ளன. இவர் TVI இல் நடைபெறும் 'இராகசங்கமம்' நிகழ்ச்சியில் நடுவராகவும் பணியாற்று கிறார். தனது இசைத்துறைக்கான வழிநடத்துதல்களை தற்போதும் குமாரி ஆ. கன்னியாகுமரி மற்றும் ஸ்ரீ முல்லைவாசல் G. சந்திரமௌலி இடமிருந்து பெற்று வருகிறார்.

ஸ்ரீ முல்லைவாசல் G. சந்திரமௌலி நாதாலயாவின் வெள்ளிவிழா மாலை ஐந்து மணிக்கு நாதாலயாவின் மாணவர் களுடைய தமிழ்த்தாய் வாழ்த்து, கனேடிய தேசிய கீதம் மற்றும் நாதாலயாவின் கல்லூரி கீதம் என்பனவற்றுடன் ஆரம்பமானது. அதைத்தொடர்ந்து தாயகத்தில் உயிர் நீத்தவர்களுக்காக ஒரு நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

நாதாலயாவில் இசைபயின்று தற்போது ஆசிரியராக இருக்கும் இசைக்கலாபாரதி வெண்ணிலா விக்னேஸ்வரன் நாதாலயா வின் வெள்ளிவிழாவிற்கு வருகை தந்தோரை வரவேற்று உரை நிகழ்த்தினார். வரவேற்புரையை தொடர்ந்து நாதாலயா வின் ஆரம்ப வகுப்பு மாணவர்களது வாய்ப்பாட்டு நிகழ்வும் அதை தொடர்ந்து நடுநிலை வகுப்பு மாணவர்களது வயலின் கச்சேரியும் நடைபெற்றன. மீண்டும் நடுநிலை வகுப்பு மாணவர்கள் வாய்ப்பாட்டு நிகழ்வாக 'ஆனைமுகத்தரசே' கணேச கீர்த்தனை பாடினார்கள்.

இவற்றை தொடர்ந்து ரொறொன்ரோ பல்கலைக்கழக மாணவி தக்சிகா சிறீதரன் நடனமாடினார். நடனநிகழ்வை தொடர்ந்து நடுநிலை வகுப்பு மாணவர்கள் வயலின்

**தொடர்ச்சி 31ஆம் பக்கம்**

# சிறப்பாக நடைபெற்ற கொக்குவில் இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் வெளிக்கள விருந்து

கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் கனடா நடத்திய வெளிக்கள விருந்துடன் வருடாந்த போட்டிகளின் பரிசளிப்பும் விளையாட்டுப் போட்டிகளும் கடந்த ஜூலை மாதம் 27 ஆம் திகதி 2013 ஆம் ஆண்டு சனிக்கிழமை Birchmount & McNicoll சந்திப்புக்கு அருகாமையில் அமைந்திருக்கும் ***Kid's Town*** பூங்காவில் சிறப்பாக நடைபெற்றது. இதில் சிறப்பு விருந்தினராக நா. மகேந்திரன் அவர்களும் அவரது மனைவியும் சமூகமளித்திருந்தனர்.

இந்நிகழ்வு தேவாரம், கனடிய தேசிய கீதம், கல்லூரி கீதம் இசைத்து கொடிகளை ஏற்றியதுடன் உயிர்நீத்தவர்களுக்கு அமைதி வணக்கம் செலுத்தப்பட்டது.

அதைத்தொடர்ந்து சிறுவர் முதல் முதியோர்களுக்கான விளையாட்டுக்கள் நடைபெற்றன. அத்துடன் மதியபோசனமும் பரிசளிப்பும் இடம்பெற்றன. இந்நிகழ்வில் கொ.இ.க. பழைய மாணவர் சங்க நிதிக்காக சீட்டிழுப்பும் நடைபெற்றன.












CARELESS DRIVING
IMPAIRED DRIVING
RED LIGHT
REDLIGHT (CAMERA)
SPEEDING
SEAT BELT
NO INSURANCE
STOP SIGN
TRAFFIC TICKETS
MOTOR VEHICLE ACCIDENT
CRIMINAL MATTERS (SUMMARY)
416- 803- 5296
KALAKALAPPU
THEESAN
SKTPARALEGAL SERVICE
SKTHEESAN@GMAIL.COM
MEMBER OF LAW SOCIETY OF UPPER CANADA
கலகலப்பு தீசன்


TRIDEL
BUILT FOR LIFE
NEW PROJECT
By Tridel
HOMELIFE
HIGHER STANDARDS
HomeLife/GTA Realty Inc.,
Brokerage*
AQUALINA
AT BAYSIDE TORONTO
Open House :
Saturday
August 03, 2013
12 Noon - 2 pm
4800 Dufferin Street
Occupancy
Fall 2016
COMING SOON | CONTACT NOW
FOR MORE INFORMATION CALL:
HomeLife/GTA
Realty Inc., Brokerage*
* Independently owned and operated.
416-321-6969
FRONT ST. E
YONGE ST.
LOWER JARVIS ST.
LOWER SHERBOURNE ST.
PARLIAMENT ST.
GARDINER EXPY
LAKESHORE BLVD. E
QUEENS QUAY E
AQUALINA
LAKE ONTARIO
Design By: Saras Studios 647-919-2420

# ‘கிளிமஞ்சாரோ’ அனுபவங்கள்

அண்மையில் புற்றுநோய் வைத்தியம், பராமா-ிப்பு ஆகியவற்றுக்கு நிதி திரட்டு முகமாக நான் ஒரு திடசங்கற்பம் எடுத்தேன். கிளிமஞ்சாரோ சிகரத்தின் உச்சிவரை ஏறி அங்கே கனேடியக் கொடியை நாட்டுவதன் மூலம் பணம் சேகரிக்கும் முயற்சியில் ஈடுபட்டு வெற்றி கண்டதை தமிழ் வாசகர்களாகிய நீங்கள் அறிந்திருப்பீர்கள் என நம்புகிறேன். இந்த தார்மீக முயறச்சிக்கு அன்பும் ஆதரவும் உற்சாகமும் வாழ்த் தும் மனமுவந்து வழங்கி என்னை அனுப்பி வைத்த அன்பு நெஞ்சங்களுக்கு சிரம் தாழ்த்தி வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சாதனையை செய்ய முயற்சி செய்து வெற்றி கண்டிருக்கிறார்கள். ஆபிரிக்கா கண்டத்திலுள்ள தன்சானியா நாட்டிற்கும் கென்னியா நாட்டிற்கும் இடையில் எல்லையில் அமைந்துள்ள 19,500 அடி உயரமான சிகரமாகும். இதுவரை இந்த மலை உச்சியை அடைய முயன்றவர்களில் ஐம்பது வீதத்திற்கும் குறைவானவர்களே வெற்றி அடைந்திருக்கிறார்கள். இதற்கு மூன்று காரணங்கள் தெரிவிக்கப்படுகின்றது. முதலாவது காரணம் ஏறுவதில் உள்ள சிரமம். இரண்டாவது உயரச் செல்லச் செல்ல வளி அழுத்தம் குறைவடைவது. மூன்றாவது வளி மண்டலத்தில் உள்ள பிராணவாயுவின் செறிவு குறைவது.



- குமார் புனிதவேல் -

கிளிமஞ்சாரோ சிகரத்தை ‘எந்திரன்’ என்னும் சினிமாப் படத்தைப் பார்த்தவர்கள் நன்கு அறிந்திருப்பீர்கள். இந்தச் சிகரம் ஆபிரிக்கக் கண்டத்தில் மிகவும் உயரமானது மட்டுமல்லாமல் உலகிலுள்ள தனித்து நிற்கும் மலைச் சிகரங்களுள் மிக உயரமானது என்னும் சிறப்பையும் பெற்றுள்ளது. பல இளைஞர்கள் இந்தச்

இங்கு தரப்பட்ட வரை படத்தில் காட்டியுள்ள படி 10,000 அடி உயரத்தில் மன நிலைத் தடங்கல் தோன்றுவதுடன் 17,000 அடி உயரத்தை அடையும் வேளை உணர்வு நிலைத் தடங்கலும் தோன்றும். ஆரம்பத்தில் மதுபோதையில் உள்ளவர்போல் தள்ளாடி

தொடர்ச்சி 30ஆம் பக்கம்

Sales Reps. Welcome
For All your Real Estate & Investments Needs!
Raja M. Mahendran, P. Eng.
(Broker / Owner)

* INDEPENDENTLY OWNED AND OPERATED
HomeLife/GTA Realty Inc. Brokerage *
5215 Finch Ave E, #203 Toronto, ON
Tel.: 416.321.6969

# திரையுலக நட்சத்திரம் மஞ்சுளா காலமானார்

தென்னிந்திய திரைப்பட நடிகை மஞ்சுளா விஜயகுமார் தனது 59 ஆவது வயதில் சென்னையில் மரணமடைந்தார். நடிகை மஞ்சுளா தனது கணவரும், நடிகருமான விஜயகுமாருடன் சென்னையை அடுத்து உள்ள ஆலப்பாக்கத்தில் வாழ்ந்து வந்தார்.



குழந்தை நட்சத்திரமாக ‘சாந்தி நிலையம்’ திரைப்படத்தின் மூலம் திரைக்கு அறிமுகமானார். பின்னர் எம்ஜிஆர், சிவாஜி, ராமாராவ், ரஜினி போன்ற பல முன்னணி நடிகர்களுடன் நடிக்கும் வாய்ப்பைப் பெற்று பல படங்களில் நடித்துள்ளார். கலைமாமணி விருது பெற்ற மஞ்சுளா தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் மற்றும் இந்தி என நூற்றுக்கும் மேற்பட்ட படங்களில் நடித்தவர். மறைந்த நடிகை மஞ்சுளாவுக்கு ஏராளமான பொதுமக்களும் திரையுலகத்தினரும் திரண்டு சென்று அஞ்சலி செலுத்தினர். மஞ்சுளா விஜயகுமார் தம்பதியினருக்கு வனிதா, ப்ரீதா, ஸ்ரீதேவி என 3 மகள்கள் உள்ளனர். அவருக்கான இறுதிச் சடங்குகளை கணவர் விஜயகுமார் செய்தார். கதாநாயகியாக மட்டுமல்லாது தாயாக, சகோதரி என பல பாத்திரங்களை ஏற்று நடித்தவர்.

# கவிஞர் வாலி மறைவு

தமிழ் சினிமாவின் இணையற்ற கவிஞர்களில் ஒருவரும், சாகா வரம் பெற்ற பல தேமதுர தமிழ்ப் பாடல்களைப் படைத்தவருமான கவிஞர் வாலி மரணமடைந்தார். அவருக்கு வயது 82. வாலியின் இயற்பெயர் ரங்கராஜன். ஸ்ரீரங்கத்தில் 1931-ம் ஆண்டு பிறந்தவர். ஆரம்பத்தில் அகில இந்திய வானொலியில் நிலையக் கலைஞராக பணியாற்றிய வாலி, பின்னர் சினிமாவில் பாடலாசிரியராக 1958 இல் வாழ்க்கையைத் தொடங்கினார். எம்ஜிஆருக்காக ‘நல்லவன் வாழ்வான்’ படத்தில் வாலி முதன் முதலாக பாடல் எழுதினார். பின்னர் எம்ஜிஆரின் தர்பாரில் ஆஸ்தான கவிஞராக கடைசி வரை இருந்தார். திரையுலகில் அதிக பாடல்களை எழுதிய சாதனையாளர் வாலி. இதுவரை பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட பாடல்களை எழுதிய சாதனைக்கு சொந்தக்காரர். தமிழ் திரையுலக ஜாம்பவான்களான எம்.ஜி.ஆர், சிவாஜி கணேசன் உட்பட அனைத்து பிரபலங்களின் படங்களுக்கு பாடல்கள் எழுதியுள்ளார். தமிழுலகம் போற்றும் சிறந்த கவிஞர்களில் வாலியும் ஒருவர். தத்துவ பாடல்களை எழுதுவதில் முத்திரைப் பதித்தவரான இவர் துள்ளல் பாடல்களையும் எழுதியிருக்கிறார்.



மேலும் 'ன்ஜாரோ' என்றால் பறவை எனப் பொருள்படும். எனவே கிளிமஞ்சாரோ என்றால் 'பறவையால் முடியாதது' எனப் பொருள் கொள்ளலாம். பறவைகள் இச்சிகரத்தின் உச்சிக்குப் பறப்பதில்லை. இந்த சிகரத்திற்குப் பல உல்லாசப் பயணிகள் பிரயாணம் செய்வதால் கிளிமஞ்சாரோவில் சர்வதேச விமான நிலையம் ஒன்றும் உள்ளது. 2013 ஜுன் 11ம் திகதி ரொறொன்ரோவில் இருந்து புறப்பட்ட நான் 12 ஆம் திகதி இரவு 8.30 மணிக்கு கிளிமஞ்சாரோ சர்வதேச விமான நிலையத்தை சென்றடைந்தேன். சுங்கப் பரிசோதனைகளை முடித்து விட்டு பயணப்பொதிகளைப் பெறுவதற்கு சென்றவேளை எனது பொதிகள் நான் சென்ற விமானத்தில் வரவில்லை எனும் அதிர்ச்சியான செய்தி காத்திருந்தது. மலை ஏறுவதற்காகக் கொண்டு வரவேண்டிய உபகரணங்கள், ஆடைகள் என 26 பொருட்களின் பெயர்கள் அடங்கிய பட்டியலின்படி கொண்டு சென்ற பொருட்கள் நிறைந்த பொதி இல்லாமல் என்ன செய்வது என மலைத்துப்போய் நின்ற நான் நேரம் பத்து மணியை எட்டிப்பிடிப்பதை உணர்ந்தேன். மேலும் விமான நிலையத்தில் நின்றால் என்னை விடுதிக்கு அழைத்துச் செல்ல விமான நிலையத்துக்கு வெளியே காத்திருக்கும் வாகன ஓட்டுனரும் நான் வரவில்லை என்று நினைத்து திரும்பிப் போய்விடுவார் என்று பயந்து எனது பொதிகளுக்கான படிவங்களைப் பெற்றுக் கொண்டு வெளியே வந்தேன். அங்கு என்னை அழைத்துச் செல்வதற்காக வந்த வாகனத்தில் ஏறி மரங்கு ஓட்டலை




சென்றடைந்தபோது இரவு 11:20 ஆகிவிட்டது. வழியில் வண்டிச் சாரதியும் நானும் ஒரு விதமான சம்பாசணையும் இன்றி செல்லவேண்டிய நிர்ப்பந்தம். காரணம் அவருக்கு ஆங்கிலமோ தமிழோ தெரியாது. எனக்கு சாகா மொழியோ சுவஹிலி மொழியோ தெரியாது. ஓட்டல் வரவேற்பறையில் இருந்த பெண்ணிடம் எனது பொதிகள் வந்து சேராத வேதனையைச் சொன்னேன். அவரோ சர்வசாதாரணமாக இப்படி நடப்பது முதல் தடவை அல்ல, நீங்கள் கவலை இல்லாமல் தூங்குங்கள். நாளை உங்கள் பொதிகள் வந்துவிடும் என்று ஆறுதல் சொன்னார். மாற்று உடை இல்லாத நான் பயணித்த உடையுடன் படுக்கைக்குச் சென்றேன்.

இந்த விடுதியானது பல சிறுசிறு கட்டிடங்களால் ஆனது. முற்காலத்தில் ஒரு கமக்காரருடைய இல்லமாக அமைந்திருந்தது. மறுநாள் அதிகாலை எழுந்து பொதிகள் வந்துவிட்டனவா எனப் பார்க்கச் சென்றேன். KLM விமானங்கள் தினமும் ஒருமுறை மட்டும் மாலை 8:30 மணிக்கு வரும் என அறிவித்தனர். விடுதியின் முகாமையாளர் சிறுவயதிலிருந்து அந்த நாட்டில் வசித்து வரும் வெள்ளையர். அவர் சாகா இனப் பெண்ணை மணந்தவர். இளவயதில் கனடாவில் ஒட்டாவா பிரதேசத்தில் சில காலம் வசித்தவரும்கூட. அவர் Skype ஐ வேலை செய்ய வைப்பதற்கு சில உபகரணங்கள் வாங்கி வரும்படி கூறினார். மேலும் அவருடைய அறிவுறுத்தலின்படி தன்சானிய குடிமகன் ஒருவருடன் மரங்கு கிராமத்தைச் சுற்றிப் பார்க்கச் சென்றேன். இக்கிராமத்துக்கு 'மரங்கு' என்ற பெயர் வந்தது ஒரு சுவையான விடயமாகும். முதன் முதல் இந்தப் பிரதேசத்துக்கு வந்த மக்கள் சாகா இனத்தவர் என முன்பு குறிப்பிட்டிருந்தேன். இங்கு வந்த சாகா மக்கள் பாய்ந்து ஓடும் ஆறுகளையும் கொட்டி விழும் நீர் வீழ்ச்சிகளையும் கண்டு வியந்து மொராங்கு என்று மகிழ்ச்சிக் கூச்சலிட்டார்களாம். பின் அதுவே இக்கிராமத்தின் பெயராக மாறிவிட்டது 'மொராங்கு' என்றால் அவர்கள் மொழியில் நிறைய நீர் எனப் பொருள்படும். பெயருக்கேற்றபடி இது மிகமிகச் செழிப்பான பிரதேசம்.

மிகுதி அடுத்த வாரம் தொடரும்...



# திரைவிமர்சனம் 'மரியான்'

'வந்தே மாதரம்' புகழ் பரத்பாலா – ஏ.ஆர். ரஹ்மான், வெளிநாட்டு ஒளிப்பதிவாளர் மார்க் கோனிக்ஸ், தனுஷ், 'ஆழி சூழ் உலகு' நாவலாசிரியர் ஜோ.டி. குரூஸ் என 'இப்படை தோற்கின் எப்படை வெல்லும்' என்பது போன்ற ஒரு கூட்டணி. ஆனால், இப்படை வென்றதா தோற்றதா? இதற்கு விடை காண்பதற்கு முன், 'மரியான்' எப்படி என்பதை முதலில் பார்ப்போம்!

மீனவர் சமுதாயத்தைச் சேர்ந்த கதாநாயகன் மரியான். ஆழ்கடலில் குதித்து சுறா மீன்களை குத்தி பிடித்துவரும் பழமையான முறையில் திறமையானவர். முரட்டு இளைஞர் என்றாலும், தன் வயதுக்கு மீறிய தெளிவுகொண்டவர். மரியான், வெளிநாடு செல்ல வேண்டுமென்று, அவரது தாய் விரும்புகிறார். ஆனால், தாயைவிட கடல்தான் தன் பிரியம் என மறுத்துவிடுகிறார், மரியான். அதே ஊரைச் சேர்ந்தவர் கதாநாயகி பனிமலர். சிறு வயதில் இருந்தே இவர் மரியானை விரும்புகிறார். மரியானுக்கும் இவர் மேல் காதல் உள்ளது. ஆனால், கடல்தான் தன் வாழ்வு என்றிருக்கும் மரியான், பனிமலர் தன்னைத் திருமணம் செய்துகொண்டால் மிகவும் கஷ்டப்படுவார் என்று அவரைத் தவிர்க்கிறார்.

**ஃபிலிம்நியூஸ் கிருஷ்ணன்**

மரியான் தன் மீது வைத்துள்ள காதலை வெளிக்கொணர பல முயற்சிகளை எடுக்கின்றார், பனிமலர். இவருக்கு உதவ மரியானின் நண்பரான அப்புக்குட்டியும் இமான் அண்ணாச்சியும் முன்வருகிறார்கள். 'வாழ்க்கையில் சாதிக்கனும்னு நினைக்கிற எல்லாரும் பொம்பளை வாடையோடதான் இருக்கணும்' என்று இவர்கள் மரியானை தூண்டிவிடுகிறார்கள். அதனால் மரியான், பனிமலர் காதலை ஒப்புக்கொள்கிறார்.



இந்நிலையில் வட்டிக்கு கடன் கொடுக்கும் ரவுடி தீக்குரிசி, பனிமலரை பெண் கேட்டு வருகிறார். அவரிடம் சண்டைக்கு போகிறார் மரியான். அவரிடம் அடி வாங்கும் ரவுடி, 'அவ்வளவு ரோசம் இருந்தால் பனிமலரின் அப்பா வாங்கிய கடனை உடனேயே திருப்பிக் கொடு' என்கிறார். இதனால், அம்மா சொல்லியும் வெளிநாடு செல்லாத மரியான், காதலிக்காக, பணம் சம்பாதிப்பதற்காக, வெளிநாடு செல்ல முடிவெடுக்கிறார். அவருக்கு சூடான் எண்ணெய் கம்பெனியில் இரண்டு வருட காண்ட்ராக்டில் வேலை கிடைக்கிறது. அட்வான்ஸாக கிடைக்கும் பணத்தை பனிமலரின் தந்தை சலீம்குமாரிடம் கொடுத்துவிட்டுப் போகிறார். இரண்டு வருட காண்ட்ராக்ட் முடிய சில நாட்களே இருக்கும் நிலையில், மரியானும் அவரது நண்பர் ஜெகனும், சூடான் நாட்டு புரட்சியாளர்களிடம் பிணைக்கைதியாக சிக்கிக் கொள்கின்றனர். அவர்களிடம் இருந்து மீண்டு, மீண்டும் தனது காதலிகளாகிய கடலையும் பனிமலரையும் மரியான் கரம் பிடிப்பது மீதி கதை. மரியானாக தனுஷ் நடித்துள்ளார். தனக்கே உரிய யதார்த்தமான நடிப்பில் 'ஆடுகளம்' நடிப்பின் அடுத்த பரிமாணத்துக்கு சென்றுவிட்டார். இயல்பாகவே, பாத்திரமாகவே வாழ்ந்து போலத்தான் இருக்கிறது!

பனிமலராக வருகிறார், 'பூ' பார்வதி. பனிமலர் என்ற பெயர் போலவே கொள்ளை அழகு. 'பூ' படத்திற்கு பிறகு மலையாளத்துக்கு சென்றுவிட்ட பார்வதி ஐந்து வருட இடைவெளிக்குப் பிறகு வந்திருந்தாலும், இறுக்கமான பாவாடை சட்டையில் அற்புதமாக மிளிர்கிறார். அற்புதமாகவும் நடித்திருக்கிறார்! ஓர் அழகான மீனவ வீட்டு பெண்ணாக, மரியான் மீது காதல் கொண்டவளாக, காதலனை தொலைத்து நிற்கும் அபலை பெண்ணாக, கதை முழுவதும் வலம் வந்துள்ளார். இவர்களை தவிர கதையில் அவ்வப்போது வரும் அனைத்து பாத்திரங்களும் திரைக்கதையை மெருகேற்றி உள்ளனர். வட்டிக்கு பணம் கொடுக்கும் தீக்குரிசி கதாபத்திரத்தில் வரும் விநாயகம், நண்பர்களாக வரும் அப்புக்குட்டி மற்றும் ஜெகன், தனுஷின் அம்மாவாக வரும் உமா ரியாஸ், பார்வதிக்கு அப்பாவாக வரும் சலீம் குமார் – அனைவரும் சிறப்பாக செய்திருக்கிறார்கள். ஆனால், சூடான் தீவிரவாதிகளை தேர்ந்தெடுத்ததில் கோட்டை விட்டுவிட்டார்கள்.

தொடர்ச்சி 39ஆம் பக்கம்

# நாதாலயா...

20ஆம் பக்கத்தொடர்ச்சி

இசை நிகழ்த்தினர். அதைத் தொடர்ந்து நாதாலயாவின் இளம் ஆசிரியரான துர்க்கா பாலசிங்கத்தின் வாய்ப்பாட்டுக்கு இன்னொரு இளம் ஆசிரியரான வெண்ணிலா விக்கேனஸ்வரன் வயலின் வாசித்தார். இவர்களுக்கு தீபன் யோகநாதன் மிருதங்கம் வாசித்தார்.

இவற்றை தொடர்ந்து ஸ்ரீ முல்லைவாசல் G. சந்திரமௌலி அவர்களுக்கு பொன்னாடை போர்த்து மலர்கொத்து வழங்கி கௌரவிக்கப்பட்டார். அவர் தனது சிறப்புரையில் குரு பூர்ணிமா தினமான இன்றைய தினத்தில் இவ்வெள்ளிவிழாவை நாதாலயா மாணவர்கள் நடத்தி தமது குருவுக்கு மதிப்பளிப்பது மிகவும் பொருத்தமாக இருக்கின்றது என்றார்.

சிறப்புரையை தொடர்ந்து நடுநிலை வகுப்பு மாணவர்களது வாய்ப்பாட்டு நிகழ்வில் 'சகலகலாவாணியே' கீர்த்தனை பாடினார்கள். அடுத்து நாதாலயாவின் மேல்வகுப்பு மாணவர்கள் வயலின் இசையில் 'வாதாபி கணபதிம்' கீர்த்தனை இசைத்தார்கள். இதை தொடர்ந்து சிறப்பு நிகழ்வாக ஸ்ரீமதி விஜயலட்சுமி சீனிவாசகம் பாட ஸ்ரீ முல்லைவாசல் G. சந்திரமௌலி அவர்கள் வயலின் இசை வழங்கினார். இந்நிகழ்விற்கு ரதிரூபன் பரஞ்சோதி மிருதங்க இசையையும், ஜான்சன் ராஜமோகன் கஞ்சிராவையும், துர்க்கா



பாலசிங்கம் தம்புராவும் வாசித்தார்கள். இதை தொடர்ந்து வந்த இடைவேளையின் பிற்பாடு சிவகௌரி சிவநாதன் தனது தங்கை சிவசங்கரி சிவநாதனுடன் சேர்ந்து ஒரு இசை நிகழ்வை நடத்தினர்.

கௌரவ விருந்தினர் சுப்பிரமணியம் இராஜரட்ணம் உரை நிகழ்த்தினார். அவர் தனது உரையில் நாதாலயா அதிபர் ஸ்ரீமதி விஜயலட்சுமி சீனிவாசகம் அவர்கள் தாங்கள் கலை பண்பாட்டுக்கழகம் ஆரம்பித்த வேளையில் பலவகையிலும் உதவியதை நினைவு கூர்ந்தார். அவர் தமிழ் பாடல்களை பொருள் உணர்ந்து பாடுவார் என்றும் கனடாவில் உள்ள ஆசிரியர்களில் அதிகூடிய அளவு தமிழ் உணர்வு பாடல்களை பாடியவர் ஸ்ரீமதி விஜயலட்சுமி சீனிவாசகம் என்று கூறினார். தாங்கள் எழுதிய பாடல்களுக்கும் இசை அமைத்து பாடியுள்ளார் என்றார்.

கௌரவ விருந்தினர் உரையைத் தொடர்ந்து சிறப்பு நிகழ்வாக இசைசுடர்ஒளி ஸ்ரீமதி விஜயலட்சுமி சீனிவாசகம் வயலின் இசை வாசிக்க இசைக்கலைவாணி கல்யாணி சுதர்சன் வீணை வாசிக்க இவர்களுடன் சுடர்ஒளி மனோகரன் அண்ணாமலை தவிலும் ஜான்சன் ராஜமோகன் மிருதங்கமும் வாசித்தார்கள். இந்நிகழ்வை தொடர்ந்து ஸ்ரீமதி விஜயலட்சுமி சீனிவாசகம் மற்றும் திரு. சீனிவாசகம் அவர்கள் கௌரவிக்கப் பட்டனர். அதைத் தொடர்ந்து உரையாற்றிய பிரதமவிருந்தினர் தம்பையா சிறீபதி, நாதாலயா மாணவர்களுக்கு "கலையாத கல்வியும், குறையாத வயதும், ஓர் கபடுவராத நட்பும்..."என்பன கிடைக்க வாழ்த்தினார்.

பிரதமர் உரையைத் தொடர்ந்து நன்றி உரை நிகழ்த்திய நாதாலயா அதிபர் ஸ்ரீமதி விஜயலட்சுமி சீனிவாசகம் அறிவு, பண்பு,




**அருந்ததி ஞா.**

தொடர்ச்சி 38ஆம் பக்கம்

யோகா சோதிடம்
• கிரகப்பொருத்தம் பார்த்தல் • சுபமுகூர்த்தம் கணித்தல்
• பலன் பார்த்தல் • சாதகக் குறிப்புக் கணித்தல்
தொடர்புகளுக்கு: 416.299.8361

அனைத்துலக தமிழ் வானொலி
GLOBAL TAMIL RADIO
* செய்திகள் * போட்டிகள் * பாடல்கள் * தகவல்கள்
24 மணி நேர தமிழ் ஒலிபரப்பு
416-264-4283 / 416-264-3666
"மண்ணையும் மனங்களையும் நேசிக்கலாம்"
www.gtr24.com

# அமைச்சர் இரா. நெடுஞ்செழியனும் அதிபர் இரா. சின்னத்தம்பியும்




என் இனிய நண்பர்களே! வாழ்த்துக்கள். நலம்பெறப் பிரார்த்திக்கிறேன்.

இரண்டு மாதங்களுக்கு முன்பு என் நண்பரும், ஆசிரியர், அதிபர், கொத்தணி அதிபர், கல்விப்பணிப்பாளர், விசேட ஆணையாளர், அனைத்து இலங்கை சமாதான நீதிபதி என்ற உயரப்புலங்களின் உச்சங்களில் வாழ்ந்தவருமாகிய, நெடுந்தீவைப் பிறப்பிடமாகக் கொண்ட இரா. சின்னத்தம்பி அவர்கள் காலமாகி விட்டார். எழுதப்தொன்பது வயதேயான நண்பருக்கு கனடா சபரிமலை ஐயப்பன் ஆலயவிருந்தினர் மகா மண்டபத்தில் நெடுந்தீவு மக்கள் ஒன்றியத்தினர் 31.03.2013 ஆம் நாள் மாலை ஒரு நினைவுத் தொகுப்பு நிகழ்ச்சியினை நடத்தினார்கள். அஞ்சலிக்கூட்டம் என்றில்லாமல் அவர் குறித்த நினைவுகளை அவருடைய மாணவர்கள் உறவினர்கள் நண்பர்கள் பகிர்ந்து கொண்ட கட்டுரைகள் அடங்கிய மலர் ஒன்றினையும் வெளியிட்டார்கள். வன்னி நிலப்பரப்பையும் நெடுந்தீவு மண்ணையும் சேர்ந்த ஆண்கள், பெண்கள், குழந்தைகள் என முந்நூறுக்கு மேற்பட்ட எண்ணிக்கையினர் உணர்வு பூர்வகமாய் கலந்து கொண்டனர்.



நண்பா!


உணர்ச்சி என்பது பற்றிப் பலரும் பலவாறாகச் சொல்லியுள்ளார்கள். கீழைத்தேய அறிஞர்களும், மேலைத்தேயமேதைகளும் உணர்ச்சி (Feeling) குறித்துச் சொன்ன கருத்துக்களில் உலகப் பேரறிஞரான திருவள்ளுவர் சொன்ன கருத்து சகலராலும் சிலாகித்துப் பேசப்படுவதை அறிந்திருப்பாய்.

'புணர்ச்சி பழகுதல் வேண்டா; உணர்ச்சி நட்பாம் கிழமை தரும்'

என்ற திருக்குறள் எண்ணி எண்ணி வியக்க வைக்கும் உண்மையைக் கூறுகின்றது. இது நமது அறிவோடு தொடர்புடையது மட்டுமன்று. அனுபவத்தோடு கலந்த உண்மை வெளிச்சமாகும். உணர்ச்சிதான்! என்ற சொல்லில் உள்ள உயிரின் துடிப்பை அனுபவித்தவர்கள் புரிந்து கொள்வார்கள். ஒருவரோடு நாள்தோறும் பார்ப்பதும் பழகுவதும் நட்புக்கு தேவையில்லை. இருவருக்கும் இடையே ஓடும் மன உணர்ச்சியே நாளும் பெருகி நட்பை வளர்க்கும். இது மட்டுமல்ல! 'உணர்ச்சிதான்! என்பது ஊர் கடந்து கண்டம் கடந்து வாழ்ந்தாலும் தேவையான பொழுது தொடர்புனை உண்டாக்கி விடும்.

கோப்பெருஞ்சோழன் என்ற மன்னனுக்கும் பிசிராந்தையர் என்ற புலவனுக்கும் இருந்த நட்பைச் சுட்டிக்காட்டி, எங்கோ ஒரு ஊரில் கோப்பெருஞ் சோழன் இறந்து போகப் பல ஆயிரம் கிலோ மீற்றருக்கு அப்பால் வாழ்ந்த பிசிராந்தையருக்கு உணர்ச்சிதான் நட்பாம் கிழமை தரும் தெரியவர தனது நண்பனுக்காய் வடக்கிருந்து உயிர் நீத்தார் என்று தமிழறிஞர்கள் சொல்லக் கேட்டிருப்பாய். உணர்ச்சி நிலையின் உன்னதங்களை நம்முடைய வாழ்க்கையில் வரும் நிகழ்வுகளை அவதானித்தால் கண்டு கொள்ளலாம். 'நினைத்தேன் வந்தாய் நூறு வயது' என்ற பாடலும் உணர்ச்சி நிலையை ஒட்டியது தான்.

அறிஞர் அண்ணா காலத்தில் இயங்கிய திராவிட முன்னேற்றக்கழகத்தில் நாவலர் என்ற பட்டத்தோடு நடமாடும் பல்கலைக்கழகம் என்ற பெருமை சுமந்து வாழ்ந்தவர் இரா. நெடுஞ்செழியன் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் M.A பட்டதாரி. பெரியார் ஈ.வெ. இராமசாமியின் சுயமரியாதை இயக்கத்தில் படிப்பு முடிந்ததும் இணைந்து பணியாற்றியவர். நமது ஈழத்து தமிழறிஞரான கந்த முருகேசனாரைச் சந்தித்து பகுத்தறிவு, சுயமரியாதை பற்றிய நுட்பங்களை கலந்து பேசுவதற்காய் பெரியாரால் ஈழத்திருநாட்டிற்கு அனுப்பப் பட்டவரே இந்த இரா. நெடுஞ்செழியன். இவருடைய அறிவையும் பண்பையும் சென்னை கிறிஸ்தவக்கல்லூரியில் படிக்கின்ற காலத்தில்



- புலவர். ஈழத்துச்சிவானந்தன் -
(நிறுவனர் ஆதி அருள்நெறி மன்றம் - கனடா)

தொடர்ச்சி 34ஆம் பக்கம்


Seelan Siva
Real Estate
Buy. Sell. Invest.



416-451-0271
seelansiva@gmail.com
www.egtahomes.com

HOMELIFE
HIGHER STANDARDS

416-999-3555
aiya14@gmail.com



Seelan Siva Aiyadurai
Real Estate Broker

Uthayan Aiyadurai
Sales Representaive

TRIDEL BUILT FOR LIFE
Hines



AQUALINA
AT BAYSIDE TORONTO
REGISTER NOW
WITH US FOR VIP PRICE & INCENTIVES


AQUALINA at Bayside is at the forefront as the first condominium in the master planned Bayside Toronto community. AQUALINA will feature 363 refined 1, 2 and 3 bedroom residences situated right at the water's edge. Its Signature Collection Suites and Penthouses will be housed in a shimmering glass cube closest to the water.

CALL US FOR PRICE & FLOOR PLAN.




HOMELIFE/GTA Realty Inc., Brokerage*
5215 Finch Ave. E. Suite 203, Toronto, ON., M1S 0C2
Bus:(416)321-6969
*Independently Owned and Operated
*Some Conditions Apply. This is not intended to solicit properties currently listed for sale.
VISIT
Thank You For Your Successful Referral

# உலகில் அதிக *IQ* உடையவர்



IQ என்பது ஒருவருடைய புத்திக்கூர்மையை அளக்கும் அளவுகோல். IQ என்பது Intelligence Quotient ஆகும். உலகில் 90 % ஆனவர்ஜகளுக்கு IQ, 70 இலிருந்து 130 வரை இருக்கிறது. இதில் மிகக்கூடிய (140 க்கு மேல்) புள்ளிகள் பெறுகிறவர்கள் மேதைகள் (Genius) என்று அழைக்கப்படுவார்கள். மிகக்குறைந்த (70 க்கு கீழ்) புள்ளிகள் பெறுபவர்கள் புத்தி குறைந்தவர்கள் (Mentally deficent அல்லது Impaired) என்று அழைக்கப்படுவார்கள்.

உலகில் அதிக IQ பெற்றவர்களில் சிலரை பார்ப்போம். உலகப் புகழ் பெற்ற Albert Einestien என்ற விஞ்ஞானிக்கு IQ 190. Leonardo Davinci என்ற புகழ்பெற்ற கலைஞரும், விஞ்ஞானியும் ஆனவருக்கு IQ 190. இவர்கள் வயது கூடியவர்கள். Stepen Hawking என்ற மற்றொரு விஞ்ஞானிக்கு IQ 160 ஆகும். அவருக்கும் இப்போது 70 வயது.

ஆனால் இப்போதைய உலகில் அதிகூடிய IQ உடையவர் 11 வயது தமிழ் சிறுமி ஆவர். அவர் தமிழ் நாட்டில் வாழும் வைஷாலினி. அவரது IQ 225 புள்ளிகள் ஆகும். இப்போதைய Guniess world record IQ ஐ உடையவர் Kim Ung-Vong



அவரின் IQ 210 ஆகும். வைஷாலினி 14 வயதை அடையாததால், அவர் Guniess world record ஐ இப்போது பெற முடியாது. ஆயினும், இவர் ஏற்கெனவே பல சாதனைகளை செய்திருக்கிறார்.

வைஷாலினி Microsoft certified profes-sional and cisco certified network asso-ciate பரீட்சையில் 90%க்கு மேல் புள்ளிகள் பெற்றார். இதனை அவர் 10 வயதில் சாதித்தார். வைஷாலினிக்கு முன் 12 வயது பாகிஸ்தான் நாட்டைச் சேர்ந்த சிறுவன் இந்த சாதனையை செய்திருந்தார். வைஷாலினி பல முக்கிய பொறியியல் நிறுவனங்களில் Engineering ஐ பற்றி பேசி உள்ளார். பல பொறியியல் கல்லூரிகளால் பட்டம் பெற அழைக்கப்பட்டார். ஆனால் அவரது தந்தை, வைஷாலினி மற்றைய சிறுபிள்ளைகளை போல் வளர வேண்டும் என்பதற்காக அவர் சில காலம் சிறுமியாக விளையாடட்டும், அதன் பின்னர் பட்டப்படிப்புக்கு போகலாம் என்று கூறுகிறார்.



**ஞா. ஆரணி**
அகவை 14

## இளையோர் ஆக்கம்

இதில் 19 வயதும் அதற்கு உட்பட்டவர்களும் தமிழில் எழுதும் சொந்த ஆக்கங்கள் கதை, கட்டுரை, கவிதை எதுவாக இருந்தாலும் தரமானதாயின் பிரசுரிக்கப்படும்.


**AA +Duct & Carpet Cleaners**

*Duct Cleaning*
Free Sanitizing
Work Guaranteed




**நம்பிக்கை நாணயம் உத்தரவாதம்**

*Heavy Duty Equipment*
*Real High Pressure Cleaning*
*Remove Mold Yeast & Bacteria*

$49.99 2 Rooms & Hall Way
Carpet Cleaning

**We do all kinds of Carpets, Sofa and Car Upholstery Cleaning**

**Call: Isaac / Chandran**
**647.779.9531 / 416.871.1921**

# Education

## Review Tutorials 13-14

➢ **IB Biology:**

**(A)Explain how memory T cells help provide immunity against future infections.**

**(B) Heart rate of person decreases as his/ her fitness increases. Give a reason.**


**(C) How do you compare heart rate and blood flow of a person when at rest and during exercise.**

➢ **(GR12) BIOLOGY** **Describe the role of the hypothalamus in the production of urine?**

➢ **PHYSICS**

**The diagram below shows that two blocks P, Q, and R are tied by a rope which passes over frictionless pulleys fixed at the edge of a table. P = 20 kg; Q = 10 kg ;R= 15kg**

**(A) (i) If the system is released , draw FBD for each blocks in the diagram?( assume no friction between block and table)**




**(i) Calculate the acceleration of the system**

**(ii) Calculate the tension force acting on rope.**

**(iii) If the boxes move from rest how long will it take the box P move to the edge of the table**

**(B) If the coefficient of kinetic friction ($\mu_k$ = 0.1)**

**(i) Calculate the kinetic friction acting on the block P?**

**(ii) Calculate the acceleration of the moving blocks**

**(iii) Calculate the tension force acting on rope.**

➢ **CHEMISTRY 12 & IB**

**(i)Organic synthesis**

**A. Benzene → toluene →benzoic acid**

**B. 1-propanol →acetone**

**C. Acetaldehyde →ethyl,ethanoate**

**(ii) What are the major products in each of the following if $CH_3CHBrCH_3$ reacts with**

**(a) EtOH (b) EtONa/ EtOH**

**MATH (GR 11 &12).**

**A company manufactures toy-cars. The company uses the function $P_{(t)} = -25t^2 + 250t - 400$ to model its profit. $P_{(t)}$= profit in thousands, t = the number of toy-cars sold in tens of thousands. Determine least number of toy-cars that should be sold to breakeven.**

## Answer Key : 13-13

➢ **CHEMISTRY 12 & IB**

(A) (i) P- cresol (major product) and o- cresol (minor product) (ii) 3- nitro-benzaldehyde

**(B)Boiling points:**

2,4-dimethyl pentane< n- heptane <2- hexanone <1-hexanol

**Molecular size** : 2,4-dimethyl pentane < n- heptane
Greater London dispersion force in n- heptane .
2- hexanone is having dipole –dipole attraction in addition to London dispersion forces.
1- hexanol is having hydrogen bond due to the presence of hydroxyl group.

**(C)** (i)$C_2H_5OH + O_2 \rightarrow CO_2 + H_2O$

(ii) $C_2H_5OH \xrightarrow{K_2Cr_2O_7/H^+} CH_3COOH$

(iii)$CH_3CH(OH)CH_2CH_3 \xrightarrow{K_2Cr_2O_7/H^+} CH_3COCH_2CH_3$

➢ **IB BIOLOGY**

(i) In the α- helix and β- pleated sheet hydrogen bonds form between carbonyl c of the other residues. In the α- helix, H bonds are intra chain, and parallel to the helix axis. In β- pleated sheet H bonds are inter-chain and are nearly perpendicular to the chain axis.

(ii) mRNA

➢ **PHYSICS 11**

**(i) Whiplash is a neck injury when the neck is forcibly bend forward and then backward or / backward and then forward. It occurs as a result of sudden deceleration or acceleration in an automobile accident.**

**(ii) When an object falling down wards under the influence of gravitational force its drag force increases with the increase of velocity of the falling object. When the drag force becomes equals to the gravitational force, the net force acting on the object zero. Then the object falls with a constant velocity is called terminal velocity.**

**(iii) Air resistance, shape, density, surface area, condition of atmosphere- density of the air**

**Physics 11& 12**

First ball (A) Calculate the time required to reach maximum height $V_f = V_i + a\,\Delta t$

- $v_i$ =25.0m/s, $v_f$ = 0m/s, a= -9.8m/s² $\Delta t$ = 2.5 s
- For the 2nd ball(B)
- $v_i$ =? , $v_f$ = 0m/s, a= -9.8m/s²; $\Delta t$ = ( 2.5-1.2) s

$V_f = V_i + a\,\Delta t$ ; $V_i$ = 13.3m/s **(ans 13.3 m/s)**

➢ **ADVANCED FUNCTIONS 12**

(a) -4, +2 ; 3; + ; 3 to 1 b) +3, +5; 4; +; 2 to 1
c) -4, +2 ; 4; - ; 3 to 4

*Answer key 13-14- next issue*

**Contact: 647 341 3975**
**Dr. A.Sri Krishnaraj PhD**
**ask@ keentutoringcentre.com**

KEEN TUTORING CENTRE

# அமைச்சர்...

32ஆம் பக்கத்தொடர்ச்சி

நெடுந்தீவைச் சேர்ந்த இராமநாதர் சின்னத்தம்பி என்ற இளைஞர்

கவனித்து அவர் போன்ற அறிவையும் பண்பையும் தமக்குள் வளர்த்துக் கொண்டு B.A பட்டதாரியாகி நாடு திரும்பினார்.

நண்பா!

தொப்புள் கொடி உறவு பற்றிக் கேள்விப்பட்டிருப்பாய்! 'தொப்புள் கொடி' உறவு என்றால் என்ன? தாய் வயிற்றில் பத்துமாதம் இருந்த குழந்தை வெளியுலகுக்கு வந்ததும் அதனுடைய தொப்புளோடு ஒட்டியிருக்கும் கொடியை வெட்டி வேறாக்குவார்கள். தாயும் பிள்ளையும் வேறானாலும் வாயும் வயிறும் ஒன்று. தொப்புள் கொடியால் உருவான உதரத்து உறவு தாய்க்கும் பிள்ளைக்கும் தொடர்ந்து இருக்கும். என் பிள்ளையைக் காணும் போது என் வயிறு குளிரும் என்கின்ற தாய் நெஞ்சு குளிர்வதை வயிற்றில் ஏற்றிச் சொல்வதைக் கேள்விப்பட்டிருப்பாய். இது போலவே தான் தமிழ்த்தாய்க்கும் தமிழ் இனத்துக்கும் உள்ள தொப்புள் கொடித்தொடர்பு தொடர்ந்து கொண்டேயிருக்கும். நிலம் வேறானாலும், புலம் வேறானாலும் உணர்வும் தொடர்பும் வேறாகாது.

ஈழத்தமிழருக்கும் இந்தியத்தமிழருக்கும் உள்ள தொடர்புகள் உதரத் தொடர்பும் உதிரத்தொடர்பும் தொப்புள் கொடி உறவாய் தொடரும். இத்தகைய தொடர்பே இரா. நெடுஞ்செழியனுக்கும், இரா. சின்னத்தம்பிக்கும் உண்டானது. ஈழத்திற்கு திரும்பிய சின்னத்தம்பி ஆசிரியப் பணியில் தன்னை இணைத்துக் கொண்டு தமது பெயரை இரா. சின்னத்தம்பி என்று குறித்துக் கொண்டார். அறிஞர் அண்ணா காலத்தில் திராவிட முன்னேற்றக்கழகக் காளைகளை தனது படிமப்பாங்காய் (Role Model) ஆக்கிக் கொண்டவர். அவர்களுடைய கடவுள் மறுப்புக் கொள்கையை ஏற்காமல் சமுதாய மறுமலர்ச்சியை ஏற்று ஒரு சமயவாதியாயும் வாழ்ந்தவர். ஈழத்தில் திராவிட இயக்கத்தின் தமிழியல் வீச்சை முதன் முதலாக தமது பெயரில் பொறித்து அடையாளப்படுத்தியவர் இரா. சின்னத்தம்பி. இவருடைய மனிதநேயம், மொழி, இனம், உறவு, நாடு குறித்த அக்கறைகள் மெச்சத்தக்கன. தன்னிடம் படித்த மாணவர்களை 'இதனால் இதனை இவன் முடிப்பான்' என்று கண்டு அவனை அத்துறைக்குள் ஆற்றுப்படுத்தி ஆளாக்கியவர். சமூகத்தளத்தில் இவர் ஓர் சான்றோர் நிலையினர். இவர் இருக்கும் இடத்தில் முரண்பாடு தோன்றினாலும் முட்டின்றி முடிவுக்கு வந்து விடும். முரண்பட்டவர்கள் முறுகி முர்கங்கொண்டு மோதத் தொடங்கும் இடத்திற்கு இவர் இரா. சின்னத்தம்பி சென்றால் கொதி நிலை தணிந்து குளிர்மை கொண்டு அடங்கிவிடும். குடும்பச் சண்டைகள், குழுச்சண்டைகள், கட்சி மோதல்கள் பல இப்பெரியாரால் கோட்டுக்குப் போகாமால் சமாதானமான காலங்கள் சரித்திர குறிப்புகுரியன. அறிஞர் அண்ணா முதலமைச்சராய் இருந்த பொழுது இரா. நெடுஞ்செழியன் கல்வி அமைச்சராகவும், அறநிலையப் பாதுகாப்பு அமைச்சராயும் உயர்ந்தது போன்று ஈழத்து இரா. சின்னத்தம்பி ஆசிரியராய், அதிபராய், கல்விப்பணிபாளராய், விசேட ஆணையாளராய் உயர்ந்தவர்.

நண்பா!

உணர்ச்சிதான் நட்பாம் கிழமை தரும் என்ற இடத்திற்கு மீண்டும் வருகிறேன். இது கொண்டுகூட்டு உத்தியை கொண்ட கடிதம். ஏன் சிரிக்கிறாய்? பத்து உத்திகளில் இதுவும் ஒன்று என்று நன் நூலில் பவணந்தி முனிவர் சொன்னாரல்லவா? நான் ஒட்டாவாவில் இருப்பவன். இரா. சின்னத்தம்பியின் மறைவு எனக்குத் தெரியாது. வேறு வேலையாய் நான் ரொறொன்ரோவுக்கு போனேன். அவருடைய மறைவு குறித்த நிகழ்ச்சி நடைபெறுவதாய் கூறி நெடுந்தீவு நண்பர் வை. இராஜேஸ்வரன் கூட்டிச் சென்றார். உரை நிகழ்த்தும் படியும் சொன்னார்.

புலம் பெயர்ந்த வாழ்வாய் பல ஆண்டுகளாய் புணர்ச்சி பழகுதல் இல்லாத, கொண்டாட்டம், ஊடாட்டம் அற்ற வேற்றுக் கண்டத்தில் வாழ்பவனுக்கு வந்தமைந்த 'உணர்ச்சிதான் நட்பாம்' கிழமை தந்த அற்புத இணைப்பை தொடர்பைச் சொன்னேன். அத்துடன் 'தக்கார் தகவிலர்' என்ற குறளையும் கூறி 'எச்சம்' என்பது குழந்தைகள் என்றும் பொருள்படும். செய்த சேவைகள் நன்மைகள் என்றும் பொருள் கொள்வர். 'அவரவர் எச்சத்தால் காணப்படும்' என்பதை இங்கு திரண்டிருக்கும் மக்கள் தொகை இரா. சின்னத்தம்பியின் சேவையும் நன்மைகளும் என்ற கருத்தில் காட்சியே என்றும் கூறினேன். நெடுந்தீவு அரசினர் மகா வித்தியாலயத்தில் இரா. சின்னத்தம்பி அதிபராய் விளங்கிய காலத்தில் நடந்த திருக்குறள் மாநாடு பற்றியும் அம்மாநாட்டிற்கு சிறப்புரை ஆற்றுவதற்காய் எனது விரிவுரையாளராய் விளங்கிய சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழகப் பேராசிரியர் ஆறு அழகப்பனாரை ஒழுங்கு செய்து அவரை நெடுந்தீவுக்கு அழைத்துச் சென்ற போது ஏழாற்றுப் பிரிவில் கடல் அன்னை போட்டதுள்ளல்களால் குமுதினிப் படகு அழகப்பனாரை ஆட்டி அசைத்து குடல் கலங்க வைத்த சம்பவத்தையும் மீள்பார்வை செய்தேன். அந்த நாள் ஞாபகங்கள் நமது அடையாளத்தை துலங்க வைக்குமல்லவா?

நண்பா!


இரா. சின்னத்தம்பி தி.மு.க.வைச் சேர்ந்த இரா.நெடுஞ்செழியனின் தம்பியா? என்று ஈழத்தில் விசாரித்தவர்களும் உண்டு. இன்று இருவரும் காலமாகிய இரா - இருட்டு - இரவு வேறு என்ன?

பிறபின்பு

# Malayal Bhagawathi Joythidam

## Pandit Tulsidhar Swamiji








**100% Guaranteed Result**

கேரளாவிலிருந்து வருகை தந்துள்ள பிரபல ஜோதிட வல்லுனர் பல இடங்களுக்கு சென்று தற்போது கனடா வந்துள்ளார். இவர் கைரேகை, சாதகம், முகநாடி ஆகியவை கொண்டு மிகத்துல்லியமாக நடந்தவை, நடக்க இருப்பவை பற்றிய விபரங்களைக் கூறுவார். இவற்றை எல்லாம் அறிந்து பரிகாரம் செய்து கொள்ள ஒரு முறை என்னை சந்தியுங்கள்.

- கைரேகை
- கல்வி, உத்தியோகம்
- வதிவிடப் பிரச்சினைகள்
- குடும்ப பிரச்சினைகள்
- குழந்தை பாக்கியம்
- எதிரிகள் பிரச்சினைகள்
- கர்ப்ப தோஷம்
- நாம நட்சத்திரம்
- தொழில் வியாபாரம்
- நீதிமன்ற வழக்குகள்
- திருமண யோகம்
- கணவன் மனைவி ஒற்றுமையின்மை
- சர்ப்ப தோஷம்
- கஸ்ட நஷ்டங்கள்

**Tel.:647.856.0559**

GTA Square Mall (2nd Floor)
5215 Finch Ave. E., Unit #257
Scarborough ON M1S 0C2
(FINCH & MIDDLEFIELD)

**Open 7 Days A Week, 10:00 am - 8:00pm**



அத்தனை குழம்பும்
அத்தனை ருசி...!
தரத்திலும் No.1
ஆரோக்கியத்திலும் No.1
இப்போது புதுமையிலும் No.1
BRAND
Niru ®
வறுத்த மிளகாயத் தூள்
நா நரம்புகள்
சிலிர்த்திடும் ருசி!
Marketing By Tamil Source
நிரு
பிராண்ட்
40 Minuk Acres, Scarborough, ON M1E 4Y6.
Tel: (416) 750-1976, Fax: (416) 750-8779
E-mail:info@niru.com

# ....பிடித்தவர்கள்

## தொடர்கதை

### இக்கதையின் பெயர்கள், சம்பவங்கள் யாவும் கற்பனையே

டொக், டொக்
சிவா மெதுவாகக் கதவைத் தட்டினான்.

கதவைத் திறந்து கொண்டு அந்தச் சாத்திரியார் வந்தார். சிவாவைக் கண்டதும் ‘உள்ளே வாங்கோ’ எனக் கூப்பிட்டார்.

உள்ளே சிவா சென்றான். அறை சுத்தமாக இருந்தது. திருநீறு, ஊதுபத்தி, சந்தனம் என்பவற்றின் வாசனை ஒன்றாகக் கலந்து வந்தது. நிலக்கீழ் அறை என்பதால் மின்குமிளின் வெளிச்சம் இருந்தது. ஆனாலும் ஏதோ ஒருவித சென்னிறத் தன்மையான வெளிச்சம் தெரிந்தது.

கடைக்கு வசதியாக இருந்த நிலக்கீழ் அறை என்பதால் ஒரு மூலையில் இருந்த சிறிய குளியலறை போன்ற ஒன்றைத் தவிர மற்றய இடமெல்லாம் தடுப்புகள் இன்றி வெறுமனே இருந்திருக்க வேண்டும். ஆனந்தன் தேவை கருதியோ என்னவோ இரண்டு அறைகளாக்கியிருக்கின்றான். ஒரு அறையைத் தற்காலிக சமயலறை போலப் பாவித்து இருக்க வேண்டும். மின்னடுப்பும், குளிர்சாதனப் பெட்டியும் திறந்திருந்த கதவின் ஊடே தெரிந்தன. ஒரு சிறிய மேசையும் இருப்பது போல் சிவாவுக்குத் தெரிந்தது.

இந்தக் குசினிக்கு முன்பாக, இருந்த கொஞ்சம் பெரியதான அறையை இரண்டு பகுதிகளாக்கி, ஒரு பகுதியை சமயச் சுவாமி சமாச்சாரங்களுக்கு ஒதுக்கியிருந்தார்கள். ஒரு தடுப்புத் திரைச்சீலை, - மஞ்சள் நிறத்தினால் ஆனது – முற்றாக அவற்றை மறைத்திருந்தது. அங்கிருந்துதான் வாசனை விடயங்கள் வந்து கொண்டிருந்தன.

மற்றய பகுதியை சிக்கனமான வரவேற்பறை போல வைத்திருந்தார்கள். சில மடக்குக் கதிரைகள் மூலையில் இருந்தன. இரண்டு சோபாக்கள் - ஆனந்தனுடையது – ஒழுங்காக , ‘ட’னாப்பட வைக்கப்பட்டிருந்தன.

சாத்திரியாருடன் ஒரு பெண் இருந்தாள். அவள்தான் அவரது மனைவியாக இருக்கவேண்டும். நாகரிகம் கருதி சிவா அவளைப் பற்றி வர்ணிக்கவில்லை (நானும்தான்). அவளது முகத்தில் ஏதோ புதிர் தெரிந்தது. அப்ப ஒரு அப்பொயின்மென்றும் இல்லையே என்பது போலச் சாத்திரியாரைப் பார்த்தாள்.

சாத்திரியார் மனைவியை பார்த்துவிட்டு, சிவாவைப் பார்த்தார். அந்த ஒரு கணப்பார்வை அவளுக்கு ஏராளமான விபரங்களைத் தந்திருக்க வேண்டும். சாதாரணமாகிவிட்டாள்.

‘வணக்கம்’ சிவா

‘வணக்கம் சார்’ என்றனர் இருவரும் ஏககாலத்தில்.

‘உட்காருங்க சார்’

சிவா, சாத்திரியாரின் கை காட்டிய இடத்தில் இருந்தான். சோபாவின் ஒரு ஓரத்தில் இருந்தவனின் பக்கத்தில் இருந்த சோபாவில் சாத்திரியார் வந்து அமர்ந்தார். அவரது மனைவி சமையலறைக் கதவின் பக்கமாக இருந்த நாற்காலியில் அமர்ந்து கொண்டார்.

சிவாவுக்கு என்ன கதைப்பதென்று தெரியவில்லை. அறையை மெதுவாக நோக்கம் விட்டவன், ‘நான் ஒருக்கா உங்களோடை’ என்றவன், ‘நீங்கள் இப்ப பிரிதானே’ எனக் கேட்டான்.

‘ஆமா சார்’ என்றவர் என்ன நினைத்துக் கொண்டாரே தெரியவில்லை. ‘தம்பி’ என்று மடித்தார்.

‘நீங்கள் சொன்னதை ஒருக்கா’....சிவா இழுக்க,

‘ஆமா தம்பி! எனக்குத் தெரியும். என்னோடை அப்பன் சும்மா எனக்குக் காட்டியிருக்க மாட்டான்’ அவரோடை உதவி உங்களுக்குத் தேவை என்பதை எனக்கு தெரிவிச்சு இருக்கிறார். அதைத்தான் நான் உங்களுக்கு பறைஞ்சேன்.

‘என்ன எங்களது தமிழில் கதைப்பதற்கு முயற்சி செய்கிறாரா அல்லது,..’ கதைப்பது கொஞ்சமாய் மூக்கால் கதைப்பது போல இருந்தது. சாத்திரியாரைப் பார்த்தான்.

‘நான் சிலோனிலையும் கொஞ்சக்காலம் இருந்தனான். அப்புறம் நம்ம தமிழ்நாட்டிலையும் சிலோனிசோடை நல்ல பழக்கம்’ இவனது சந்தேகத்திற்கு பதிலளிப்பது போலக் கூறினார் சாத்திரியார்.

சிவா நேரடியாக விடயத்திற்கு வந்தான். ‘எனக்குப் பிரச்சனை எண்டனீங்கள். அதுதான் என்ன பிரச்சனை எண்டு கேப்போமெண்டு’

சிவா முடிப்பதற்கு முன்னரே சாத்திரியார் தொடங்கி விட்டார்.

‘ஆமா தம்பி! உங்களைக் கண்ட உடனேயே எனக்கு தெரிஞ்சுவிட்டுது. உங்களுக்கு பெரிய பிரச்சனை. உடனையே பரிகாரம் பண்ணாட்டில் பெரிய ஆபத்தாய் போய்விடும். அதுதான் உங்களை’. சாத்திரியார் இழுக்க,

அதுதான் என்ன பிரச்சனை? எப்பிடி அதைத் தீர்க்கலாம், உங்களைக் கேப்போம் எண்டு வந்தனான்

‘அதெல்லாம் சரிப்படித்திடலாம், என்ரை அப்பனின் ஆசியோடை.’ என்றவர் தொடர்ந்தார்.

- இன்னமும் வரும்

◊ கனி ◊


**Sitham Sam Shanmugam** *(Sales Rep)*

**HomeLife/GTA Realty Inc.**

Cell - 647.525.7820
Office Scarborough - 416.321.6969 24 hrs.

•Independently owned and operated

**DAISY MART**
Family Business in New Plaza At Tim Horton's North of New Market With 6/49 Loto

**COUNTRY HOME**
HWY 404 / EXTENSION
At Mccowan Brick Bungalow. 10 Acre. Senior Home. Invesment.

**New Brick Bungalow with bsmt apartment. 5 Acre. HWY 48 For Retirement**

**Scarborough Big lot's Investment**
உங்கள் 2 ஆது வீட்டை முதல் வீட்டில் இருந்து முதலீடு செய்யுங்கள்.
*Rent will pay the mortgage.*
*Buy your 2nd home with your sleeping equity. We can handle your mortgage.*

10 Acres in Holland lundry property with income. Good for seniors. Home, hobby, Farm.

**MERVIS & HWY 401**
2 Story detached home for sale. Very demand area.

**LAW OFFICE**
**STEFANO FORTINI**
B.A., LL.B., Barrister & Solicitor

3 Catherine Avenue, Aurora, Ontario L4G 1K4
Tel: 416.999.4376
Fax: 905.727.7017
Email: sfortini@rogers.com

மகாஜனக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் கனடா வழங்கும்
**Mahajanan Awards 2013**

கணித பொதுஅறிவுப் போட்டி 2013 இன் வெற்றியாளர்களை கௌரவிக்கும் நிகழ்வு.
காலம்: August 05, 2013 நேரம்: 4:30PM
இடம்: Chinese Cultural Centre, 5183 Sheppard Ave E, Toronto, ON, M1B 5ZS
416.705.1493 / 416.451.8427 / 416.458.1775

நகைச்சுவைத் தொடர் 270

# ராசம்மா ராச்சியம்

கலகலப்பு நீதன்





பேசப் படாத அனுபவங்கள்

வானில் பிரச்சினை, மண்ணில் பிரச்சினை, நீரில் பிரச்சினை திரும்பும் இடமெல்லாம் பிரச்சினை என்றாகிவிட்டது.



மழையும் புயலும் சூறாவழியும் உலகம் எங்கும் உலுக்கிக் கொண்டிருக்கிறது. வீட்டுக்குள் வெள்ளம். பேஸ்மென்ற் நீச்சல் தடாகம்போல இருக்கிறது. மரங்கள் முறிவு. மின்சாரம் இல்லை. கறன்ற் இல்லாத வீட்டில் கையில் ரி.வி. றிமோட்டை வைத்து மாறி மாறி அழுத்திக் கொண்டிருந்தா செக்கண்ட்புளோர் செல்லம்மா.

ஒரு மணி நேரம் கறன்ற் இல்லாமல் வாழ்வது எவ்வளவு கஸ்டமாக இருக்கிறது.

போர்க்காலத்தில் உண்ண உணவின்றி உடுக்க உடையின்றி மின்னில்லை, மீனில்லை, இருக்கையில்லை, படுக்கையில்லை, அருகில் உறவில்லை, பிறந்து வளர்ந்த வீடில்லை, வளவில்லை... இத்தனையையும் தமிழ் மக்கள் எத்தனை வருடமாக அனுபவித்தனர். போர் காணாத பலர் இதனைத் தெரிந்திருக்க வேண்டும்.



மக்கள் பணமும்... மக்கள் மனமும்...
இலங்கையில் போர்க்காலத்து செய்திகள் மறைக்கப்பட்டாலும் வரப்போகும் தேர்தல் பிரசார செய்திகள் பிரபல சினிமா நடிகைகளின் செய்தியைவிட முக்கியத்துவம் பெறுகின்றன.

உலகண்ணை யாழ்ப்பாணம் போகேல்லையோ என்று நளினமாக செக்கண்ட்புளோர் செல்லம்மா கேட்க, இவர் கனடியன் சிற்றிசன் வோட் போட விடமாட்டினம் என சிரித்தா ஆட்டிலறி அன்னம்மா. கனபேர் கள்ள வோட்டு போடுவினம். கனடியன் சிற்றிசன் ஏன் வோட் போடேலாதென மனதுக்குள் நினைத்து தனக்குள் தானே சிரித்தார் உலகர்.




தேர்தல் சூடு பிடிக்கிறது. இராணுவ அழிப்பில் சூடு பிடித்த கட்டடங்கள் ஒருபுறம். இதே வேளையில் இதுவரையில் யார் பணத்தை கையாடினார்கள், யார் ஆள்கடத்தல் கொலைகள் செய்தார்கள், ஒருகாலத்தில் முணமுணுத்தவர்கள் ஸ்பீக்கரில் சத்தமிட்டு சொல்லத் தொடங்கி விட்டார்கள்.



வாழும் தமிழும் வளரும் இசையும்!

கனடாவுக்கு தமிழர் புலம்பெயர்ந்து வந்த காலத்தில் பலவிதமான கலை நிகழ்சிகள் இயல் இசை நாடகம் ஒன்றையொன்று போட்டிபோட்டன. வாய்ப்பாட்டு, வயலின் கற்பவர்களின் தொகையும் அதிகம். அவர்கள் மேடைகளில் தங்கள் திறமைகளைக் காட்டினர். இசை வகுப்புகளை நடத்தி மாணவர்களைப் பயிற்றுவிப்பதில் பல இசை நடன நாட்டியக் கல்லூரிகள் ரொரன்ரோ முழுவதும் இருந்தன. கனேடிய தமிழ் இசை வளர்ச்சியில் இசை நடனக்கல்லூரிகள் முக்கிய இடம் பிடித்துள்ளன.



ரூபி கமெராவில் எடுத்த படங்களை ஆட்டிலறி அன்னம்மா, செக்கண்புளோர் செல்லம்மா கொம்பியூட்டரில் பார்த்துக் கொண்டிருந்தனர். உது எங்கடை விஜயலட்சுமி ரீச்சர் என உரிமை கொண்டாடினா செக்கண்ட் புளோர் செல்லம்மா.


ராமநாதன் கொலிஜ்சிலை கல்வி பயின்று இசையையும் கற்றார். அத்துடன் இசையை கற்பித்தார். இந்தியாவிலும் இசை பயின்றார். எனக்கும் தெரியும் என ராகம் இழுத்தா ஆட்டிலறி அன்னம்மா.



கடந்த வாரம் தனது 25து ஆண்டுவிழாவைக் கொண்டாடியது விஜயலட்சுமி சீனிவாசகம் அவர்களின் 'நாதாலயா' இசைக்கல்லூரி. வாய்ப்பாட்டு வயலின் இரண்டிலும் இதுவரையில் கிட்டத்தட்ட 2000 மாணவர்களுக்கு மேல் இசை பயின்றுள்ளனர்.

இசைக்குயில், இசைச்சுடரொளி விஜயலட்சுமி சீனிவாசகம் அவர்கள் பல மேடை நிகழ்சிகள் மட்டுமல்ல தென்னிந்திய பாடகர்களுக்கு வயலின் இசையும் கனேடிய தமிழ் மாணவர்களின் நடன அரங்கேற்றங்களிலும் பாடியிருக்கிறார். தமிழோடிசை பாடிய நம்மவர்களை நாம் பாராட்ட மறக்கிறோம். இசை பயில்வோரை முன்னேற்றும் வகையில் தமிழிசைக்கலாமன்றம் வருடா வருடம் இசைத்துறையில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு பரீட்சை நடத்தி தரத்திற்கேற்ற சான்றிதழ்களை வழங்கி வருகின்றனர்.

இசை கேட்டால் புவி அசைந்தாடும்.




சரியா..தப்பா??

கரிபானா நிகழ்ச்சியை பார்ப்பதற்கு ஆரவாரப்பட்டிருக்கும் மக்களுக்கு ரி.ரி.சி. யில் பொலீசாரால் சுட்டுக்கொல்லப்பட்ட இளைஞனின் மரணம் பெரும் அதிர்ச்சியை கொடுத்துள்ளது. ரொரன்ரோ முழுவதும் பொலீசாருக்கும் அரசுக்கும் எதிரான ஆர்ப்பாட்டத்தை உருவாக்கியுள்ளது.

உனக்கு மன அமைதி வேண்டுமாயின் யாருடைய குறையையும் காணாதே!
உன் குறைகளையே பார் - அன்னை சாரதா தேவி

ஞாபகம் வருதே....ஞாபகம் வருதே
ஒகஸ்ட 1-15



2. அலெக்சாண்டர் கிரகாம் பெல் நினைவுதினம். (ரெலிபோனைக் கண்டுபிடித்தவர்) (மார்ச் 03, 1847 - ஒகஸ்ட் 02 1922)

4. பொன் கணேசமூர்த்தி (நினைவு தினம்) (ஒகஸ்ட் 04 2006) எழுத்தாளர் வானொலி கலைஞர்

5. சிவிக் விடுமுறை

6. ஆடி அமாவாசை

13. ஆடிக் கடைசிச் செவ்வாய்

# நாதாலயா...

31ஆம் பக்கத்தொடர்ச்சி

கலாசாரம், பரந்த சமய நோக்கு என்பவற்றை அடித்தளமாகக் கொண்டு சீரிய வாழ்க்கைக்கு ஏற்ற கல்வியை இன்றைய இளைய சந்ததியினருக்கு கொடுக்க வேண்டும் என்ற உயர்ந்த நோக்கில் ஆரம்பிக்கப்பட்டது நாதாலயா இசைக்கல்லூரி என்றார்.

தான் இப்பணியை ஆரம்பித்து 25 ஆண்டுகள் அந்நிய கலாசார சூழலில் பூர்த்தி செய்ய உறுதுணையாக இருந்த மாணவர்கள், பெற்றோர், இரசிகர்களுக்கும் மற்றும் தமிழிசைக்கலாமன்றம், தமிழ்க் கல்லூரி போன்றவற்றிற்கும் நன்றி தெரிவித்தார். அவர் தனக்கு பட்டங்கள் மற்றும் விருதுகள் அளித்த நிறுவனங்கள், பல்கலைக்கழகங்கள் மற்றும் அரசாங்கத் திற்கும் நன்றி தெரிவித்தார். புலம்பெயர் தமிழர் ஒற்றுமையுடன் நமது கலை, இலக்கியம் மற்றும் ஆன்மீக கலாசாரங் களை வளர்க்க வேண்டும் என வேண்டி தனது நன்றியுரையை நிறைவு செய்தார்.

ஸ்ரீமதி விஜயலட்சுமி சீனிவாசகத்திற்கு ஒட்டாவா தமிழ்ச்சங்கம் 'இசைக்குயில்' என பட்டம் அளித்து கௌரவித்துள்ளது. ஜப்பானை சேர்ந்த தற்பாதுகாப்பு கலைக்குரிய சர்வதேச பல்கலைக்கழகம் சிறப்பு கலாநிதி பட்டம் வழங்கி கௌரவித்துள்ளது. இவற்றை விட இவரது கர்நாடக இசை மற்றும் வயலின் நுண்கலைகள் கற்பிக்கும் சேவைக்கும் மற்றும் இசைக்கச்சேரி வயலின் கச்சேரி கள் போன்றவற்றை மக்களுக்கு வழங்கி வருவதற்காக ஒன்ராரியோ மாகாண அரசு இவரை கௌரவித்துள்ளது. இவர் பல இசை இறுவட்டுகளையும் வெளியிட்டுள் ளார். இவருக்கு 'இசைச்சுடர்', 'இசை அரசி' போன்ற பட்டங்களும் வழங்கப்பட்டுள்ளன.

கனடாவில் 25 வருடகால சேவையை பாராட்டி ஸ்ரீமதி விஜயலட்சுமி சீனிவாசகம் அவர்களுக்கு கனேடிய பிரதமர் ஸ்ரீபன் காப்பர், ஒன்ராரியோ முதல்வர் கதலீன் வின் அவர்களும் நாடாளுமன்ற உறுப்பினர் ராதிகா சிற்சபைஈசன் மற்றும் நகரசபை உறுப்பினர் லோகன் கணபதி அவர்களும் வாழ்த்துரை வழங்கியிருந்தனர்.

நாதாலயாவின் வெள்ளிவிழா நாதாலயா மாணவர்களுக்கு பரிசு வழங்கலுடன் சரியாக இரவு 11 மணிக்கு நிறைவெய்தியது. நாதாலயாவின் 'Student of the year' விருது பிரகாஷ் மயூரனிற்கு வழங்கப்பட்டது.




PARTY HALL
EVENT CENTRE
MEETING
PLACE

AVAILABLE FOR RENT

Starting from $100.00

Anniversary, Birthday, Get-together, Office Meeting, School Meeting, புத்தக வெளியீடு, கலந்துரையாடல்... போன்றவை நடத்தக்கூடிய இடம் வாடகைக்கு உண்டு. ஏறக்குறைய 50 பேருக்கு போதுமானது. நிறைந்த வாகனத்தரிப்பு வசதிகள் உண்டு. GTA Square Mall (FINCH & MIDDLEFIELD)

தொடர்புகளுக்கு: 416.917.6883

# பிரிட்டிஷ் அரச குடும்பத்தின் புதிய வாரிசு!

பிரிட்டிஷ் அரச குடும்பத்தின் புதிய வாரிசு கடந்த திங்கள் கிழமை 22 ஜுலை 2013 இல் பிறந்தார். பிரிட்டிஷ் இளவரசர் வில்லியம் அவரது மனைவி கேத் மிடில்டன் இருவருக்கும் ஆண் குழந்தை பிறந்தது. தங்களது குழந்தைக்கு ஜோர்ஜ் அலெக்சாண்டர் லூயிஸ் என்று பெயர் வைத்துள்ளனர். பிறந்த குழந்தையுடன்



வில்லியம் தம்பதியினர் கென்சிங்டன் அரண்மனைக்குச் சென்றனர். குழந்தை இனி "கேம்பிரிட்ஜ் இளவரசர் ஜோர்ஜ்' என்று அறியப்படும் என்று பக்கிங்ஹாம் அரண்மனை தெரிவித்துள்ளது. ஜோர்ஜ் என்ற பெயரை வைக்குமாறு பிரிட்டிஷ் அரசி எலிசபெத் மகாராணி, இளவரசர் வில்லியமிடம் தெரிவித்ததாகக் கூறப்படுகிறது. அந்நாட்டு அரச குடும்பத்தில் பிறக்கும் குழந்தைகளுக்குப் பொதுவாக வரலாற்றில் இடம்பெற்ற மன்னர்களின் பெயர்களே வைக்கப்படுவது வழக்கம். அதன்படி, புகழ்பெற்ற ஜோர்ஜ் மன்னரின் பெயரை அரசி தேர்ந்தெடுத்துள்ளார்.

கேம்பிரிட்ஜ் இளவரசர் ஜோர்ஜ் பிறந்த 22 ஆம் திகதி இங்கிலாந்து நாட்டில் பிறந்த அனைத்து குழந்தைகளுக்கும் அரச முத்திரை பொறிக்கப்பட்ட வெள்ளி நாணயங்களை அன்பளிப்பாக வழங்குவதாக பக்கிங்காம் அரண்மனை அறிவித்தது. இதற்காக 2013 பதிக்கப்பட்ட வெள்ளி நாணயங்கள் பிரத்தியேகமாக தயாரிக்கப் பட்டுள்ளன. இந்த நாணயங்களை பெற விரும்புவோர் தங்களது குழந்தை 22 ஆம் திகதி பிறந்ததற்கான ஆதாரங்களுடன் இணையதளத்தில் பதிவு செய்து கொள்ளலாம். அரச முத்திரை பொறிக்கப்பட்ட நீலம் அல்லது இளஞ்சிவப்பு பைகளில் இந்த அதிர்ஷ்ட வெள்ளி நாணயம் வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரிட்டிஷ் இளவரசர் வில்லியமுக்கும் அவரது காதலி கேத் மிடில்டனுக்கும் கடந்த 2011ஆம் ஆண்டு திருமணம் நடைபெற்றது என்பது குறிப்பிடத்தக்கது.

இளவரசர் ஜோர்ஜ் அலெக்சாண்டர் லூயிஸ் பிரிட்டனின் 3 ஆவது முடிக்குரிய இளவரசர் ஆவார்.

# நாதாமிர்தம் இசை விழா!

“ப்ருந்தம்” இசைக்கல்லூரி ஆசிரியை திருமதி தனபாலினி பரந்தாமனின் மாணவர்கள் பெருமையுடன் வழங்கிய “நாதாமிர்தம்” 06.07.2013 அன்று மாலை 6 மணிக்கு ஐயப்பன் ஆலய மண்டபத்தில் கேசவி மோகனதாஸ், அக்ஷயா அன்புச்செழியன், நிர்மிதா முரளிதரன் ஆகியோர் இறைவணக்கம் பாட சர்மிளா குமரன், ஆதிஷ்யா மோகனதாஸ், சாரங்கி சிவன் தமிழிலும் ஆங்கிலத்திலும் அதனைத்தொகுத்து வழங்கினார்கள். அதனைத்தொடர்ந்து டாக்டர். நா. சோமஸ்கந்தக்குருக்கள் அவர்கள் ஆரம்ப உரையாற்றினார். பின் இளைப்பாறிய அதிபர் திரு. கந்தையா சிவனேசன் வாழ்த்துரை வழங்க, மாணவர்களின் வாய்ப்பாட்டு, வயலின் இசையைத் தொடர்ந்து ஆசிரியையின் நன்றியுரையுடன் விழா இனிது நிறைவுபெற்றது. மேற்படி விழாவில் எடுத்த சில படங்கள்.











# திரைவிமர்சனம்...

31ஆம் பக்கத்தொடர்ச்சி

வசனம்:
எழுத்தாளர் ஜோ.டி. குரூஸ். முதல் படம் என்றாலும் நன்றாகத்தான் செய்திருக்கிறார். கன்னியாகுமரி மாவட்டம் 'நீரோடி' கிராமம்தான் படத்தின் தளம். அந்த வட்டார வழக்கு மொழியை சிதைக்காமல் புரியும்படி கொடுத்திருக்கிறார்.



ஒளிப்பதிவாளர் மார்க் கோனிக்ஸ்"ம் இசையமைப்பாளர் ஏ.ஆர். ரஹ்மானும் படத்திற்கு சர்வதேச தரத்தை கொடுத்திருக்கிறார்கள். பாடல்களில் 'நெஞ்சே எழு' பாடலும், 'கடல் ராசா' பாடலும் மீண்டும் கேட்கத் தூண்டுகின்றன. படமாக்கப்பட்டவிதமும் அருமை. பொதுவாக பின்னணி இசையில் ஏ.ஆர். ரஹ்மானை அதிகம் பிரகாசித்ததில்லை. ஆனால், இந்தப் படத்தில் அபாரம். ரவுடியை தனுஷ் அடிக்கத் துவங்கியபோது ஒலிக்கின்ற இசை, அந்தக் காட்சியையே தூக்கி நிறுத்தியிருக்கிறது. இயக்கம்: பரத்பாலா. 'மீனவர்களின் வாழ்க்கைப் பிரச்சினையைத்தான் இதில் அலசியிருக்கிறோம்' என்று பல பத்திரிகை பேட்டிகளில் இவர் சொல்லி வந்தது இப்போது ஜல்லி என்று தெரிந்துவிட்டது. எம்.ஜி.ஆர். காலத்து வழக்கமான தமிழ் சினிமா காதல் கதைதான். அதைச் சொல்லத் தேர்ந்தெடுத்த களம்தான் மீனவர்கள் வாழ்க்கை. அதிலும் ஏக சொதப்பல். படத்தின் முதல்பாதி முழுவதும் மரியான் - பனிமலர் காதல் பிரச்சினைகளிலேயே சிக்கித் தவிக்கிறது. 'காதலை சொல்லித்தான் தொலையேன்பா' என்று நம்மை கதற வைக்கிறார். மேலேயுள்ள கதையைப் படித்ததுமே இது எங்கிருந்து வருகிறது என ஊகித்திருப்பீர்கள். ஊகிக்காதவர்கள், கொஞ்சம் 'ரோஜா', கொஞ்சம் 'நீர்ப்பறவை', கொஞ்சம் 'கடல்' மூன்றையும் சேர்த்துப் பாருங்கள், மரியான் கிடைப்பான்.

சரி, பரத்பாலா – ஏ.ஆர். ரஹ்மான் - மார்க் கோனிக்ஸ் - தனுஷ் - ஜோ.டி. குரூஸ் படை வென்றதா?
மரியான் என்றால் சாவு இல்லாதவன் என்று பொருள். ஆனால், இந்த மரியான் - மரித்தான்!

Pre-Approvals | Purchases | Renewals | Refinances | New to Canada
Subo Thevarajah.,AMP
MORTGAGES
SUBOSHAN.COM
416.627.2222

வீடு வாங்க விற்க
Printhini Nagaratnam
Sales Representative
416.836.3091
HomeLife/Future Realty Inc. Brokerage
Bus: 905.201.9977
Fax: 905.201.9229
205-7 Eastvale Drive
Markham Ont. L3S 4N8
printhahomes@gmail.com
உங்கள் கனவு இல்லத்தை அடைய அழையுங்கள்


உங்களுக்கு ஒளிமயமான வீடு எதிர்காலத்தில் அமைந்திட என்னை அழையுங்கள்
SASI CHELVARATNAM
Sales Representative
Direct: 416.725.1125 / 416.858.4828
Bus : 416.321.6969
HomeLife / GTA Realty Inc., Real Estate Brokerage*
5215 Finch Ave. E, #201 Scarborough ON M1S 0C2
*Independently Owned & Operated

"Let me help you make the right choice"
SchurenSriskandarajah B.A
Sales Representative
HomeLife/Future Realty Inc., Brokerage*
7 Eastvale Drive, Markham Ontario L3S 4N8
SCHUREN.CA • 416.333.9393

TD Canada Trust
Supen Subramaniyam (Manager, Residential Mortgage)
416-844-8692 1-888-809-9154
supenthiran.subramaniam@td.com
ADVICE WHEREVER WHENEVER
Low Mortgage Rates
கனடாவின் முதன்மை வணிக நிறுவனமான TD Canada Trust வங்கியில் அனுபவ முதிர்ச்சியுடன் அடைமானக் கடன் வசதிகள் பெற்றுக் கொள்வதற்கும் அனைத்து நிதி தேவைகளுக்கான ஆலோசனைகளையும் உதவிகளையும் பெற்றுக் கொள்வதற்கும் அழையுங்கள்
Buying Home Home Equity Line of Credit
Consolitation Existing Debts Refinancing
Switching your mortgage From another financial institute

Free Real Estate Class - Call: 416.321.6969

RealEstate / Mortgage / Commercial Investments
RE/MAX Vision Realty Inc. Brokerage
A. Anton Jeeva B.Eng
416.575.5055
Hall Of Fame & Platinum Award Winner
Office: 416.321.2228
E-mail: anton.jeeva@gmail.com,
Web: newcondoproject.ca & antonjeeva.com
2210 Markham Rd., #1, Toronto, ON M1B 5V6
*Independently owned and operated
Having difficulty of getting your Mortgage
Please Contact me
"When bank says No We say Yes"

BRIMORTON & BELLAMY

Hugue 4 Bedroom Bungalow house for sale. 2 W/R.
Price: $549,900

16TH AVE & 9TH LINE

2 Bedroom T. house for lease 1 W/R.
Price: $990.00

WESTNEY & WILLIAMSON

4 Bedroom house for sale 4 W/R.
Price: $579,900

MAIN ST.WEST & VICTORIA

Retirement home for sale.
Price: 1,599,000

NEILSON & SEWELLS

4 Bedroom house for sale. 4 Washroom.
Price: 449,900

NEILSON & FINCH

2 Bedroom Condo for sale.. 2 Washroom.
Price: $179,900

"கனவு உங்களுடையது பொறுப்பு என்னுடையது"
REAL ESTATE List Buy Sell
TOP 5%
SALES REPRESENTATIVES IN CANADA
CHAIRMAN'S CLUB AWARD WINNER 2012
HomeLife GTA Realty Inc., Brokerage
Raj Paramasamy Sales Representative
416-587-1619
raj.paramasamy@hotmail.com
Guaranteed Result

AUTO + HOME = BIG SAVINGS
Auto Insurance, Business Insurance, Home Insurance, Renter Insurance, Life Insurance
Office Hours:
Mon - Fri 9:30am to 9:30pm
Saturday 11:00am to 5:30pm
After hours by Appointment
http://www.insureontario.ca
LIKE A GOOD NEIGHBOUR STATE FARM IS THERE
Providing Insurance and Financial Services
State Farm • Head Office, Aurora, Ontario • statefarm.ca™
Li.chen.m8zn@statefarm.com
1200 Markham Road, Suite#123, Scarborough, ON M1H 3C3
(Corner of Markham & Ellesmere)
Li Chen, Agent
Call: 416.431.6800

விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு
www.vlambaram.com www.tamilvanakkam.com

PRE CONSTRUCTION CONDOS FOR SALE
DOWNTOWN & OTHER AREAS
HARBOUR PLAZA RESIDENCE AQUALINA YONGE &RICH
Price Starting From $200k
RE/MAX Vision Realty Inc. Brokerage.
Call For VIP Pricing & Other Incentives
A. Anton Jeeva B.Eng (Real Estate / Principal Mortgage Broker)
Dir: 416.575.5055